பக்கங்கள்: இருபது

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஐப்பசி 21 சனிக்கிழமை (07.11.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 346

பொதுசன நூலகம்
மாநகர சபை
யாழ்ப்பாணம்.

# அவசரகாலச் சட்டத்தை உடன் நீக்கக் கோருகிறது தமிழ்க் கூட்டமைப்பு

## மீளக்குடியமர்வை துரிதப்படுத்தவும் வலியுறுத்து



கொழும்பு, நவம்பர் 07

நாட்டில் யுத்தம் முடிவடைந்து விட்டமையால் இனியாவது அவசரகாலச் சட்டத்தை நீக்கி ஜனநாயகம் மலர அரசு இடமளிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று நாடாளுமன்றத்தில் வேண்டுகோள் விடுத்தது. வவுனியாவிலுள்ள அகதிகளை விரைவாக மீளக்குடியமர்த்துவதுடன் அவர்களுக்கான சுதந்திரத்தை வழங்கவேண்டும் என்றும் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் இரா.சம்பந்தன் வலியுறுத்தினார்.

(17ஆம் பக்கம் பார்க்க)

## கல்விச் சுடர்

உள்ளே

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான விவசாயமும் உணவுத்தொழில்நுட்பமும்- I,II, ஆங்கிலம்- I பாடங்களுக்கான மாதிரி வினாத்தாள்கள்.

## வவுனியா அகதி முகாம் நிலையை அறிய தமிழ்க் கூட்டமைப்பு அங்கு செல்ல ஏற்பாடு

கொழும்பு, நவ. 07

வவுனியாவில் உள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களின் நிலைமையை அறிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கு செல்ல ஏற்பாடு செய்யப்படுகின்றது.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் நாடாளுமன்ற (20ஆம் பக்கம் பார்க்க)

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பிக்கு ஒரு மாதகால தடுப்புக்காவல் உத்தரவு

கொழும்பு, நவ. 07

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஒரு மாத காலத் தடுப்புக் காவல் உத்தரவின்பேரில் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக வெளிநாட்டில் தங்கியிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் (20ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்கா சென்று வந்ததும் பொன்சேகாவுக்கு அதிர்ஷ்டம்

கொழும்பு,நவ.7

அமெரிக்கா சென்று விசாரணைப் பரபரப்புக்களை ஏற்படுத்தித் திரும்பிய முப்படைகளின் பிரதான அதிகாரி ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு ஒருவகை அதிர்ஷ்டம் கிடைத்திருக்கிறது.

அவருக்கு இப்போது இராணுவத்தின் இரண்டு படையணிகள் பாதுகாப்பு வழங்குகின்றன.

அமெரிக்காவில் இருந்து வியாழக்கிழமை கொழும்பு (20ஆம் பக்கம் பார்க்க)

## தனியார் வங்கிகள் குடாநாட்டு வாடிக்கையாளரின் பணத்தை கொழும்புக்குக் கொண்டு செல்கின்றன; எமது வங்கி இப்பகுதிக்கே வழங்குகிறது

### மக்கள் வங்கியின் தலைவர் சொல்கிறார்



யாழ்ப்பாணம், நவ.7

தனியார் வங்கிகள் குடாநாட்டு மக்களின் வைப்புக்களை- பணத்தை - மிக அதிக அளவில் பெற்று கொழும்புக்கு கொண்டு செல்கின்றன. ஆனால் மக்கள் வங்கி அவ்வாறு செய்வதில்லை.

குடாநாட்டில் மக்கள் வைப்பிலிடும் பணத்தை இங்கு வாழும் மக்களுக்கே கடனாகவும் மற்றும் தொழில்சார் அபிவிருத்திக்காகவும் வழங்குகின்றது.

இவ்வாறு நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருக்கும் மக்கள் வங்கியின் தலைவர் டபிள்யு.கருணஜீவ தெரிவித்தார்.

மக்கள் வங்கியின் நான்கு விசேட கருமபீடங்களை யாழ்ப்பாணத்தின் நான்கு பகுதிகளில் திறந்து வைக்கும் பொருட்டு மக்கள் வங்கியின் தலைவர் டபிள்யு. கருணஜீவ

(20ஆம் பக்கம் பார்க்க)

## அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் குறைப்பு

கொழும்பு, நவ. 07

அத்தியாவசியப் பொருள்கள் சிலவற்றின் விலைகளை நேற்று நள்ளிரவு முதல் குறைக்க அரசு தீர்மானித்துள்ளது.

அதன் பிரகாரம் 230 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படும் தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் 149 ரூபாவாகவும் சிவப்புப் பருப்பு ஒரு கிலோ 230 ரூபாவிலிருந்து 180 ரூபாவாகவும் சீனி 110 ரூபாவிலிருந்து

(20ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி அகதிகளின் மீள்குடியமர்வை துரிதப்படுத்த மீண்டும் கோருகின்றது இந்தியா

கொழும்பு, நவ. 07

தமிழ் அகதிகளின் மீள்குடியேற்ற நடவடிக்கைகளை இலங்கை அரசு இன்னமும் துரிதப்படுத்தவேண்டும் என்று இந்தியா நேற்று கோரிக்கை விடுத்துள்ளது.

இந்திய பிரதி வெளிவிவகார அமைச்சர் பிறினீற் கௌர், இவ்வேண்டுகோளை இந்திய அரசின் சார்பாக விடுத்துள்ளார்.

அமெரிக்காவுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டிருக்கும் அவர் நியூயோர்க்கில் ஊடகவியலாளர் மத்தியில் உரையாற்றியபோதே இலங்கையின் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் இன்னமும் துரிதப்படுத்தப்படவேண்டும் என்றார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:- (20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களிடம் குசலம் விசாரித்தார் ஜனாதிபதி

கொழும்பு, நவ. 07

நாடாளுமன்றத்துக்கு நேற்று வருகை தந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் சிலரிடம் குசலம் விசாரித்தார்.

நாடாளுமன்ற இடைவேளை நேரம் தேநீர்ச் சாலையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேநீர் அருந்திக்கொண்டிருந்தனர். (20ஆம் பக்கம் பார்க்க)

## பெற்றோரை இழந்த வன்னிச் சிறார்கள் நேற்று நாடாளுமன்றத்துக்கு விஜயம்

### அவர்களுக்கு எம்.பிக்கள் விசேட கௌரவம்

கொழும்பு, நவ.7

யுத்தத்தால் பெற்றோரை இழந்து செட்டிகுளம் இடைத்தங்கல் முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்த முல்லைத்தீவு மாவட்ட சிறுவர்கள் 201 பேர் அரசின் விசேட ஏற்பாட்

(20ஆம் பக்கம் பார்க்க)

## வடமாகாண முஸ்லிம்கள் அனைவரும் விரைவில் மீளக்குடியமர்த்தப்படுவர் என ஜனாதிபதி உறுதிமொழி

### அலரிமாளிகையில் நடைபெற்ற சந்திப்பின் போது

கொழும்பு,நவ. 07

வட மாகாணத்திலிருந்து இடம் பெயர்ந்துள்ள முஸ்லிம்கள் அனைவரும் வெகு விரைவில் சொந்த இடங்களில் மீள்குடியேற்றம் செய்யப்படுவார்கள் என்று ஜனாதிபதி

(20ஆம் பக்கம் பார்க்க)

Cosy Hotel & Restaurant
Open 06.00am to 11.00pm
கொசி உணவகம்
Feel like home
>AC/Non AC Rooms (with all Facilities)
> Conference/ Party Hall (75 Persons)
> Special Function Menus (buffet style)
இல: 25, புகையிரத நிலைய வீதி, வெள்ளவத்தை. HOTLINE: 0112504020
இல:15, சிறாம்பியடி லேன், யாழ்ப்பாணம். HOTLINE: 021-2225899
Introducing Special North Indian Break fast
06.00am to 10.00am
யாழ் நகரிலும் கொழும்பிலும் சுவையான, தரமான
Indian, Chinese, Jaffna Foods

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரி, கல்முனை கடற்பிரதேசத்தில் கணவாய் பிடிக்க நேற்று முதல் தடை

வண்ணை.நவ.7

கணவாய் பிடிக்கும் தொழிலாளர்களை பூநகரி, கல்முனைப் பகுதிகளுக்குச் செல்ல வேண்டாம் என நேற்று மாலை ஒலி பெருக்கி வாகனத்தில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அரியாலை கிழக்கு, பூவரசந்தீவு, சிறுத்தீவு, மற்றும் கல்முனைக் கரையோரங்களில் விதைக்கப்பட்டுள்ள கண்ணிகள் இன்னமும் அகற்றப்படாமல் உள்ளதால் அப்பகுதிகளுக்கு சென்று கணவாய் பிடிப்பதற்கான மரக்கொப்புக்களை முறித்தெடுப்பதற்காக செல்லவேண்டாம் என எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

அதேநேரம் பூநகரி பகுதிக்குச் செல்வதும் முற்றாக தடைசெய்யப்பட்டுளதாகவும் மேற்படி ஒலிபெருக்கி அறிவுறுத்தலில் தெரிவிக்கப்பட்டது. (1-160)

# கோயில் வீதியில் மின்விளக்குகள் இல்லாததால் இரவுநேரத்தில் மக்கள் அவதி

யாழ்ப்பாணம்.நவ.7

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட சிவன் கோயில் வீதியில் இருந்து பூங்கனிச் சோலை வரையான கோயில் வீதியிலும், சட்டநாதர் கோயில் வீதியிலும் இரவு நேர மின்விளக்குகள் இன்மையால் பொது மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

இந்த வீதிகள் பல மாதங்களாக வீதி விளக்குகள் இல்லாது காணப்படுகின்றன. இதனால் வீதியில் இரவு நேரங்களில் பயணிக்கும் மக்கள் அச்சப்படவேண்டி நிலை ஏற்பட்டுள்ளது.

வீதிகளில் நடமாடும்போது திருட்டுச் சம்பவங்களும் வழிப்பறிக் கொள்ளைகளும் இடம்பெறுகின்றன. இதனால் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாக இந்தப் பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மேலும் யாழ்.மாநகர சபை ஆணையாளருக்கும் இது தொடர்பாக தாம் முறையிட்டுள்ளதாகவும் அந்த மக்கள் தெரிவிக்கின்றனர். (10)

# சுகாதாரத் திணைக்களத்தின் இணையத்தளம் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்.நவ.7

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் இணையத்தளம் நேற்று பிற்பகல் வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளரினால் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இவ்வைபவத்திற்கு வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், பிரதி மாகாணப்பணிப்பாளர் (நிர்வாகம்), கணக்காளர், வடமாகாண சுகாதார அமைச்சின் நிர்வாக உத்தியோகத்தர், கணக்காளர் மற்றும் உத்தியோகத்தர்களும் பங்குபற்றினர்.

இந்த இணையத்தளத்தினை யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் கடமையாற்றும் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் சு.பாஸ்கரலிங்கம் வடிவமைத்து இருந்தார்.

இந்த இணையத்தளத்தின் முகவரி www.jaffnahealth.org இதில் யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் தொடர்பான செய்திகள், வைத்தியசாலைகளின் சேவை விபரம், ஆளனி விவரம், அபிவிருத்திப் பணிகள், தொற்றுநோய்கள் தொடர்பான மேலும் பல விவரங்கள் இதில் பார்வையிடலாம்.

இத்தினத்தில் காலை 9.00 மணி தொடக்கம் வடமாகாண சுகாதார அமைச்சினால் யாழ்.மாவட்ட சுகாதார பணிப்பாளர்களுக்கான குறைகேள் நடமாடும் செயலகமும் நடத்தப்பட்டது.

இதில் பெரும்பாலான பிரச்சினைகளுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் நலன்புரி முகாம்களில் இருந்து வந்த வன்னிப் பிரதேச சுகாதார சேவைப் பணியாளர்களின் பிரச்சனைகளும் ஆராயப்பட்டன. (1)

# போக்குவரத்துக்கு இடைஞ்சலான காவலரண்கள் பின்நகர்த்தப்படுகின்றன

வண்ணை.நவ.7

யாழ்.நகரப் பகுதிகளில் அமைந்திருக்கும் படையினரின் காவலரண்கள் பின் நகர்த்தப்பட்டு வருகின்றன.

அவ்வகையில் முட்டாசுக் கடைச்சந்தி, சத்திரச்சந்தி, யாழ் பிரதான வீதி, முதலாம் குறுக்கு வீதிச் சந்திகளில் அமைந்துள்ள காவலரண்கள் உள்நோக்கி போக்குவரத்துக்கு இடைஞ்சல் இல்லாமல் நகர்த்தப்பட்டுள்ளன.

அதேவேளை யாழ்.அஞ்சல் திணைக்களத்திற்கு முன்பாக கோட்டைப்பக்கமாக இருந்த காவலரண் முற்றாக நீக்கபட்டுள்ளது.

ஆஸ்பத்திரி வீதி, முதலாம் குறுக்குச் சந்தியில் இருந்த காவலரண் எடுக்கப்பட்டு மேற்கு மூலையில் இலங்கை வங்கிக்கு அருகாமையில் அமைக்கப்பட்டுள்ளது.

காவலரண்களில் படையினரால் கழித்துவிட்ட மரங்கள் சிலாகைகள் என்பவற்றை மக்கள் விறகுக்காக எடுத்துச் செல்வதைக் காணக்கூடியதாக இருந்தது. (1-160)


**New Medi Care Hospital**

New Medi Care Hospital

எமது வைத்திய நிலையத்திற்கு Dr.A.சிறிதரன் (பெண் நோயியல் நிபுணர், யாழ்.போதனா வைத்தியசாலை) அவர்கள் திங்கள் (09.11.2009) மாலை 4.30 மணிக்கு வருகை தரவுள்ளதால் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இல.32, கச்சாய் வீதி, சாவகச்சேரி. (562179)

நிர்வாகம் தொ.பே 0213734505

**அறை வாடகைக்கு**

வெளிமாவட்ட பல்கலைக்கழக அனுமதி பெற்ற பெண் பிள்ளைகளுக்கு சாப்பாட்டுடன் மனல்தறை ஒழுங்கையில் இரு அறைகள் உண்டு.

(இ/562178) தொடர்பு: 0772367365

**இறைச்சிக்கோழி விற்பனைக்கு**

புறொயிலர் 50/= குறைக்கப்பட்டுள்ளது. 3Kgஇற்கு மேல் நிறையுடைய புறொயிலர் உண்டு. அத்தோடு கல்பேட், ஊர்ச்சேவல், விற்பனை செய்யப்படுகின்றன.

தாசன் பாம்,
158/4, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (இ/562176)


## மரண அறிவித்தல்

### யேசுதாசன் பயஸ்ராஜா (பயஸ்) [பிரபல ஓவியர், ஆசிரியர்]

ஊர்காவற்றுறை, மண்குழி வீதியைப் பிறப்பிடமாகவும் வல்லிபுனம், புதுக்குடியிருப்பை வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல ஓவியர் யேசுதாசன் பயஸ்ராஜா (05.11.2009) அன்று அகால மரணமானார்.

அன்னார் யேசுதாசன் - சபீனா விக்ரோறியா தம்பதியரின் செல்வப் புதல்வனும், காயத்திரியின் அன்புக்கணவரும், மதிவருணனின் அன்புத் தந்தையும், பேணாட், யோசப், பவுளினா, ராமசாமி - வசந்தா, ஆகியோரின் பாசமிகு மருமகனும் சிவகுமார் - சாந்தி, ஜெகன் - மைதிலி ஆகியோரின் மைத்துனரும் ஜான்சி, யசோ, கௌசி, நிசாந்தன், துளசி ஆகியோரின் சிறிய தகப்பனும், டர்சனின் மாமாவும், மேரிஜஷ்மின், சாள்ஸ்பஸ்ரியன், வேல்ஸ்யஸ்ரியன், மேரி சாளினி ஆகியோரின் மச்சானும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.11.2009) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று காலை 8 மணியளவில் ஊர்காவற்றுறை புனித சூசையப்பர் ஆலயத்தில் இறுதி ஆசீர்வாதம் இடம்பெற்று ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் ஆலயத்துக்கு அருகில் உள்ள சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரம்பன்,
ஊர்காவற்றுறை.

தகவல்:
ம.இ.பேணாட் (மாமா).







## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை விநாயகமூர்த்தி

(இளைப்பாறிய பிரதம ரயில் நிலைய அதிபர்)



துன்னாலையைப் பிறப்பிடமாகவும் கட்டுடையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை விநாயகமூர்த்தி (03.11.2009) செவ்வாய்க்கிழமை கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் துன்னாலையைச்சேர்ந்த காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், கட்டுடையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - தையல்நாயகி தம்பதியினரின் மூத்த மருமகனும், சரஸ்வதிதேவியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான மகாலிங்கம், சங்கரப்பிள்ளை, பாக்கியம் ஆகியோரின் சகோதரரும், சிறிபதிதாசன், பேரின்பவல்லி சண்முகம், சிவசுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனரும், சுபஜோதி, இந்திரஜோதி, பத்மஜோதி, மங்களஜோதி, நிமலநடேசன், நடனஜோதி, பாஸ்கரலிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (09.11.2009) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(இ/562172) தகவல்: திருமதி.ச.விநாயகமூர்த்தி.

Email: vmoorthy 91@yahoo.com (905) 4587618

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# மஹிந்தரா? பொன்சேகாவா?

ஜெனரல் சரத் பொன்சேகாவின் பிரதிநிதி ஒருவர் தன்னைச் சந்தித்துப் பேசியுள்ளார் என்ற தகவலை ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் வெளியிட்டிருக்கின்றார்.

அவர் கூறியுள்ள விடயங்கள் மற்றும் வெளியாகும் தகவல்களை நோக்கும்போது, ஜனாதிபதித் தேர்தல் ஒன்று முற்கூட்டியே இப்போது அறிவிக்கப்படுமானால் அதில் ஜெனரல் சரத் பொன்சேகா களமிறங்கக் கூடிய சாத்தியக்கூறுகள் அதிகரித்துள்ளன் என்றே தோன்றுகின்றது.

அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டால் சிறுபான்மையினரான தமிழ் பேசும் மக்களின் நிலைப்பாடு என்ன, எத்தகைய போக்கை அவர்கள் கைக்கொள்ள வேண்டும் என்ற ஆராய்வுகள் இப்போதே தொடங்கிவிட்டன.

தமிழர் தாயகம் மீது வரலாற்றில் மிகக் கொடூரமான போரை ஏவிவிட்ட இராணுவத் தளபதி தேர்தல் களத்திற்கு வந்தால் அவரை ஒரு வார்த்தையில் எதிர்த்துத் துரத்துவதைத் தவிர தமிழர்களுக்கு வேறு என்ன மார்க்கம் இருக்க முடியும் என்ற சாரப்பட உணர்ச்சி வசப்பட்டு இதில் முடிவு எடுப்பதா என்றொரு கேள்வி எழுகின்றது.

அவ்வாறு உணர்ச்சி வசப்பட்டு முடிவு எடுத்து, சரத் பொன்சேகா களத்துக்கு வந்தால் அவரைத் தமிழர்கள் முழு மூச்சில் எதிர்ப்பார்கள் என்று அறிவிப்பு வெளியிட்ட மனோ கணேசன் எம்.பி.கூட, அந்த அறிவிப்பு தனது நோக்கத்தை நிறைவேற்றிய நிலையில், இப்போது சுருதியை மாற்றியிருக்கின்றார்.

சரத் பொன்சேகா தமிழர்களுக்கு ஏதோ சொல்லப் போகின்றார் என்று பூடகமாகக் குறிப்பிட்டு, பொன்சேகாவுக்கு நிபந்தனை விதிக்கும் விதத்தில் நான்கு அம்சங்களையும் முன்வைக்கின்றார். அவரின் இந்த சுருதி மாற்றமும், போக்கும் நாசூக்கான - அரசியல் முதிர்ச்சிமிக்க - காய் நகர்த்தல்களாகவே தோற்றுகின்றன.

உடனடியாக ஜனாதிபதித் தேர்தல் ஒன்று அறிவிக்கப்பட்டு, அதில் ஒருபுறம் அரசுத் தரப்பின் வேட்பாளராக மஹிந்த ராஜபக்ஷவும், மறுபுறம் ஜே.வி.பி., ஐ.தே.கட்சி போன்றவற்றின் ஆதரவோடு எதிரணியின் ஏக வேட்பாளராக ஜெனரல் சரத் பொன்சேகாவும் நிறுத்தப்பட்டால் தமிழர்கள் என்ன செய்வது என்பதை ஆற,அமர சிந்தித்து, தந்திரோபாயங்களை வகுத்து, அதனடிப்படையிலேயே முடிவு எடுக்கவேண்டும்.

தமிழர் தாயகம் மீது கொடூர இராணுவத் தாக்குதல்களை வழி நடத்தியவர் ஜெனரல் சரத் பொன்சேகா என்றால், மறு புறத்தில் நிற்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவோ குரூரமான விமானத் தாக்குதல்கள், கடற்படைத் தாக்குதல்கள், இராணுவத் தாக்குதல்கள், அரசியல் தந்திரோபாய நகர்வுகள் அனைத்தையும் ஒருசேர வழிநடத்திய முப்படைகளின் தளகர்த்தராவார்.

''யுத்தகாலக் குற்ற விடயங்கள் தொடர்பில் ஜெனரல் சரத் பொன்சேகா உட்பட யாரும் பொறுப்பல்லர். அவற்றில் தவறு ஏதும் இருந்தால் என்னைக் கேளுங்கள். என்னை விசாரியுங்கள். நானே பொறுப்பு!'' - என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே பகிரங்கமாக அறிவித்த நிலையில், தமிழர்கள் மீதான யுத்த விவகாரங்களில் ஜெனரல் சரத் பொன் சேகாவை விட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேலானவர் என்று தராசுத் தட்டில் போட்டு ஒப்பிட்டுத் தமிழர்கள் அவசரப்பட்டு முடிவு எடுப்பதில் அர்த்தமில்லை.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது கூட, பௌத்த - சிங்களத் தீவிரவாதிகளின் பக்கம் நிற்கும் மஹிந்த ராஜபக்ஷவைப் புறம் தள்ளிவிட்டு, தனக்கு வாக்களிப்பதைத் தவிரத் தமிழர்களுக்கு வேறு மார்க்கமில்லை என்ற விட்டேத்தியான சிந்தனையில் கடைசிவரை மெத்தனமாக நடந்து கொண்ட காரணத்தினாலேயே அத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வாங்கிக்கட்டிக்கொள்ள நேர்ந்தது.

அதுபோல, இம்முறையும் மஹிந்தரா, பொன்சேகாவா என்று வந்தால் தமக்கு வாக்களிப்பதைத் தவிர தமிழருக்கு வேறு மார்க்கமில்லை என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திமிர்த்தனமாக சிந்திப்பதற்குத் தமிழர்கள் முற்கூட்டியே இடமளித்துவிடக் கூடாது.

இதில் பல விடயங்கள் ஆழமாகச் சிந்திக்கப்பட வேண்டும். தமிழர்கள் நலனும், இலங்கைத் தீவின் நலனும் கூட ஆராயப்பட வேண்டும்.

அதிகாரத்தை ஓரிடத்தில் குவித்து எதேச்சாதிகாரம் பண்ண - சர்வாதிகாரம் கட்டவிழ - இடமளித்து நிற்கின்றது தற்போதைய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை. தமிழர்கள் மீதான அடக்குமுறைக்கும் அதுவே வாய்ப்பாக உதவுகின்றது என்பது வெளிப்படை; தமிழர்களின் நலன் கருதியும், இலங்கைத் தீவில் எதேச்சாதிகாரத்தை முடிவுக்குக் கொண்டுவரவும் இந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி ஒழிக்கப்பட வேண்டியமை அவசியம்.

பிரதான இரு கட்சிகளில் ஏதோ ஒன்றின் முழுப் பின் புலத்துடனும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவிக்கு வரக்கூடிய ஒருவர் அந்த முறைமையை ஒழிப்பார் என வாக்குறுதியளித்தாலும், அத் தேர்தலில் வென்ற பின்னர் அதை ஆண்டனுபவித்துச் செல்வாக்குச் செலுத்தவே விரும்புவார், அதை ஒழிக்க முன்வரமாட்டார் என்பதும் தெளிவு. அதுவே நாட்டின் பட்டறிவும் கூட.

இந்தச் சூழலில், இரு பிரதான கட்சிகளையும் சாராத ஒருவரை அப்பதவிக்குக் கொண்டுவந்து, அவருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் பிரதான இரு கட்சிகளையும் வலுவாக இருத்தச் செய்வதன் மூலம் இந்த முறைமையை விரைவில் ஒழிக்க வைப்பதற்கான கட்டாயத்தை அவருக்கு ஏற்படுத்த முடியும்.

இப்படி இவ்விடயத்தில் ஆழ்ந்து உற்றுநோக்கவேண்டிய பல தீர்க்கமான அம்சங்கள் உள்ளன. அடுத்துவரும் நாள்களில் இப்பத்தியில் அவற்றை ஒவ்வொன்றாக நோக்குவோம்.

எனவே, அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷவா, பொன்சேகாவா என்ற கேள்வி எழுந்தால், அதுபற்றி அழுத்தமாக ஆராயமுன்னர் எடுத்தோம், கவிழ்த்தோம் என்றபாணியில் உணர்ச்சிவசப்பட்டு ஒரு முடிவை எடுத்து, வாய்ப்புகளைத் தமிழர் தரப்பு பாழாக்கிக்கொள்ளக்கூடாது. குறிப்பாகப் புலம்பெயர் தமிழர்களில் கூடியளவு செல்வாக்குச் செலுத்தும் ஊடகங்கள், இணையத்தளங்கள் போன்றவை இவ்விவகாரத்தில் பலமான ஆராய்வுக்கும், வாதப்பிரதிவாதங்களுக்கும் இடமளித்து அதன் பின்னர் தமிழர்கள் முடிவெடுப்பதற்கான வாய்ப்பை அளிக்கவேண்டும். அவசரப் பட்டு ஒரு தரப்பு முடிவுகளைத் திணிக்க அவை முயற் சிக்கக் கூடாது.

# முகாம்களிலிருந்து விடுவிக்கப்பட்ட மாணவர்கள் தென்மராட்சிப் பாடசாலைகளில் இணைகின்றனர்

யாழ்ப்பாணம்,நவ.7

நலன்புரி நிலையங்களிலிருந்து வெளியேறி தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் இணையும் மாணவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

புதிதாக இணையும் மாணவர்களுக்கு சீருடைத் துணிகள், கற்றல் உபகரணங்கள் உடனடியாக வழங்க வலயக் கல்வி அலுவலகத்தினால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

தேசிய பாடசாலைகளில் ஒன்றான சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கடந்த இரு தினங்களில் மட்டும் தரம் 6 தொடக்கம் தரம் 13 வரையான வகுப்புகளில் 102 மாணவர்கள் இணைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் புதிதாக இணைந்துள்ள மாணவர்களுக்கு அந்தந்தப் பாடசாலைகளில் விசேட பயிற்சி வகுப்புகளை நடத்தவும் வலயக் கல்வி அலுவலகத்தினால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (1-207)

## பேராசிரியர் லலிதா மென்டிஸ் நிகழ்த்தும் விரிவுரை

யாழ்ப்பாணம், நவ.07

'சுகாதார வளர்ச்சித்துறை எதிர் நோக்கும் சவால்கள்' என்ற தலைப்பில் கொழும்பு பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியரும் இலங்கை மருத்துவ சபையின் தலைவருமான பேராசிரியர் திருமதி லலிதா மென்டிஸ் உரை நிகழ்த்தவுள்ளார்.

நல்லூர் எரோவில் மாநாட்டு மண்டபத்தில் யாழ். முகாமையாளர் கழகத்தின் ஆதரவில் நாளை ஞாயிற்றுக் கிழமை உரை இடம்பெறும்.

மாலை 5 மணிக்கு ஆரம்ப மாகும் இந்நிகழ்வின் முடிவில் கலந்துகொள்பவர்களும் விவாதத்தில் கலந்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## வடக்கு வைத்தியசாலைகளை மேம்படுத்த அரசு நடவடிக்கை

கொழும்பு,நவ.6

வடபகுதியிலுள்ள வைத்திய சாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு அரசு தீர்மானித்திருக்கிறது.

நாடாளுமன்றத்தில் சுகாதார அமைச்சர் சிறிபால டி சில்வா நேற்றுமுன் தினம் பேசுகையில் இத் தகவலை தெரிவித்தார்.

சுகாதார அமைச்சின் புள்ளி விவரங்களின் படி வடமாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களிலும் 62 வைத்திய சாலைகளும் 30 மருந்தகங்களும் உள்ளன. இந்த வைத்தியசாலைகளுக்குப் போதிய உபகரணங்களும் தொழிலாளர்களும், மருந்துகளும் வழங்கப்பட்டுள்ளன என்று அமைச்சர் தெரிவித்தார். (ப)

## ஜனாதிபதியின் ஆலோசகர் வாசுதேவா இன்று பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்பார்

யாழ்ப்பாணம்,நவ.7

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சிரேஷ்ட ஆலோசகரும் சிரேஷ்ட சட்ட வல்லுனருமான வாசுதேவ நாணயக்கார யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து பல்வேறு பகுதிகளிலும் பல நிகழ்வுகளில் கலந்துகொள்ளவுள்ளார்.

இன்று சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு நல்லூர் ஆலயத்தைத் தரிசிக்கும் இவர் தொடர்ந்து 8.30 மணிக்கு தந்தை செல்வா நினைவாலயத்தில் மலரஞ்சலி செலுத்துவார். மு.ப. 10 மணிக்கு ''தமிழ் மக்களும் எதிர் காலமும்'' என்ற தலைப்பில் சங்கரத்தை இந்து இளைஞர் மண்டபத்தில் பிரதான உரையாற்றுவார்.

தொடர்ந்து இவருக்கான விசேட வரவேற்பு நிகழ்வுகளில் நண்பகல் 12 மணிக்கு சங்கரத்தை இந்து இளைஞர் கல்யாண மண்டபம், அராலி சரஸ்வதி வித்தியாலயம் ஆகிய இடங்களில் நடைபெறும்.

சங்கானைப் பிரதேச அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் சங்கானைப் பிரதேச செயலகத்தில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

தொடர்ந்து புங்குடுதீவு பொது மக்களால் பி.ப 3 மணிக்கு வாசுதேவ நாணயக்காரவுக்கு புங்குடுதீவு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் வரவேற்பு வழங்கப்படும்.

தொடர்ந்து மாலை 5.30 மணிக்கு யாழ்ப்பாண வணிகர் கழகத்தில் ஆர்.ஜனக்குமார் தலைமையில் விசேட கலந்துரையாடல் நடைபெறும். (1-10)

## விடுவிக்கப்பட்ட உள்ளூராட்சிமன்ற ஊழியரை சமுகமளிக்க அறிவுறுத்து

யாழ்ப்பாணம்.நவ.7

அகதி முகாம்களில் இருந்து விடுவிக்கப்பட்டு யாழ்.மாவட்டத்தில் விடுவிக்கப்பட்ட உள்ளூராட்சி மன்ற ஊழியர்களைத் தொடர்புகொள்ளுமாறு யாழ்.பிரதிஉள்ளூராட்சி உதவி ஆணையாளர் கேட்டுள்ளார்.

இதில் தற்காலிக மற்றும் அமைய உள்ளூராட்சி மன்ற ஊழியர்களை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்துடன் உடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (10)

## கிளிநொச்சி மாவட்ட அரச அதிபராக ரூபவதி கேதீஸ்வரன் நியமனம்

கொழும்பு,நவ.7

மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக கடமையாற்றி வரும் ரூபவதி கேதீஸ்வரன் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபராக நேற்று முன்தினம் வியாழக்கிழமை நியமிக்கப்பட்டுள்ளார்.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு இந்த நியமனத்தை வழங்கியுள்ளது.



ரூபவதிகேதீஸ்வரன் கிழக்கு மாகாண கூட்டுறவு அபி விருத்தி ஆணை யாளராகவும் மட் டக்களப்பு மாவட்ட உதவி அர சாங்க அதிபராகவும் சுனாமி வேலைத்திட்டத்திற்கான மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராகவும் கடமையாற்றியதுடன் தற்போது மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராகவும் கடமை யாற்றுகின்றார்.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டுள்ள இவர் எதிர் வரும் திங்கட்கிழமை தமது கடமையை பொறுப்பேற்கவுள்ளார். (50)

## மக்கள் வங்கியின் சேவை நிலையங்கள் இன்று பல இடங்களில் திறப்பு

யாழ்ப்பாணம், நவ.7

'வடக்கின் வசந்தம்' அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மக்கள் வங்கியின் வங்கிச் சேவைகள் கிராமங்கள் தோறும் திறந்துவைக்கப்படவுள்ளன.

இன்று சனிக்கிழமை பல இடங்களில் இந்தச் சேவை நிலையங்கள் திறந்து வைக்கப்படவுள்ளன.

காலை 8 மணிக்குப் புலோலியிலும், மு.பகல் 9.30 மணிக்கு கோப்பாயிலும், 10.30 மணிக்கு கல்வியங்காட்டிலும், 11.30இற்கு நாவலர் வீதியிலும், பி.பகல் ஒரு மணிக்கு இல.312, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள புதிய அமைவிடத்தில் காங்கேசன்துறைக் கிளையும் தன்னியக்க பணப்பரிமாற்ற இயந்திரமும் பி.பகல் 2 மணிக்கு பண்டத்தரிப்பிலும் இந்தச் சேவை நிலையங்கள் திறந்து வைக்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வுகளில் மக்கள் வங்கித் தலைவர் கருணாஜீவ கலந்து கொண்டு சேவை நிலையங்களைத் திறந்து வைப்பார். இந்த நிகழ்வுகளில் மக்கள் வங்கியின் நிறைவேற்று அதிகாரியும் பொதுமுகாமையாளருமாகிய பி.வி.பதிரணவும் கலந்துகொள்வார். (1-10)

## நாளை

| | |
|---|---|
| ஐப்பசி 22 | 08.11.2009 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | ஷஷ்டி |
| | பி.ப.03.20 வரை |
| நட்சத்திரம்: | புனர்பூசம் |
| | பி.ப.02.26 வரை |
| சுபநேரம்: | 09.05 - 10.35 வரை |
| ராகுகாலம்: | 04.35-06.05 வரை |

## அழகியற் கல்விப் பட்டதாரிகளுக்கு விரைவில் ஆசிரியர் நியமனம் வழங்கப்படும்

### அடுத்தவாரம் வர்த்தமானி அறிவித்தல்

கொழும்பு, நவ.7

3ஆயிரத்து 175 அழகியற் கல்விப் பட்டதாரிகளக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் இது தொடர்பான அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் அடுத்தவாரம் வெளியிடப்படவுள்ளதாகவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளில் 3 ஆயிரத்து 175 அழகியற் கல்வி ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவுகின்றன. இந்த வெற்றிடங்களைக் கூடிய விரைவில் நிரப்புவதற்காகவே கல்வி அமைச்சு இந்த நடவடிக்கையை மேற்கொள்கிறது. சித்திரம், நடனம், சங்கீதம், நாடகம் போன்ற அழகியற் கல்வித்துறைக்கு மேற்படி 3 ஆயிரத்து 175 பட்டதாரிகளும் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

இதன்படி தேசியப் பாடசாலைகளுக்கான நியமனங்கள் கல்வி அமைச்சினூடாகவும், மாகாணப் பாட சாலைகளுக்கான நியமனங்கள் மாகாணக் கல்வி அமைச்சினூடாகவும் வழங்கப்படவுள்ளன. இதன்படியே வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும்.

அழகியற் கல்வியில் பட்டம் பெற்ற பட்டதாரிகளை ஆசிரியர் சேவைக்குச் சேர்த்துக்கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரமும் கிடைத்துள்ளது. கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பித்திருந்தார். இவ்வாறு புதிய ஆசிரியர் நியமனங்கள் நிரப்பப்படுவதற்கு முன்னதாகப் பாடசாலைகளில் நிலவும் மேலதிக ஆசிரியர்கள் தொடர்பான விவரங்கள் பெறப்பட்டு நாடு முழுவதும் உள்ள பாடசாலைகளில் ஆசிரியர்களின் சமநிலை பேணவும் கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது. (50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Invitation

Western Music Workshop:

Date : 8th November, 2009
Time : 2.00 p.m.
Venue : Uduvil Girls' College

Information and clarification on music examination procedures (practical and theory) and related matters will be discussed. Teachers and students are cordially invited to this workshop.

(C/862164)

# Uduvil Girls' College

New Admissions for 2010 for Nursery, Grade I and Grade VI closing date for applications 15 th of November, 2009

(C/862163) -Principal-

# தேவை

கொழும்பில் இயங்கும் நிறுவனத்துக்கு G.C.E O/L படித்த ஆண் களஞ்சிய லிகிதர்(Stores Clerk) தேவை தங்குமிட வசதியுண்டு.

அனுபவம் உள்ளோர்க்கு முன்னுரிமை வழங்கப்படும். நேரில் வரவும்.

முகாமையாளர்,
உதயன் அலுவலகம்,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

( சி/562159)

# தேவை

கணக்கு இலிகிதர்:-
கொழும்பில் உள்ள ஸ்தாபனம் ஒன்றிற்கு கணக்கியல் துறை சார்ந்த ஆண் இலிகிதர் தேவை. இவர் க.பொ.த (உ/த) கணக்கியலும் அதற்கு மேற்பட்ட தராதரம் உடையவராகவும், 23-30 வயதிற்கு இடைப்பட்டவராகவும் இருக்க வேண்டும்.
விற்பனையாளர்:-
க.பொ.த.(உ/த) உடையவராகவும், 23-30 வயதிற்கு இடைப்பட்ட வராகவும் இருக்க வேண்டும்.
வேலை அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. விண்ணப்பிக்கவும்.

C/oவிளம்பர இல, 5957
உதயன் பத்திரிகை நிறுவனம்,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(90712)

# தேவை
## கட்டட மேற்பார்வையாளர்

யாழ்.நகரில் கட்டட மேற்பார்வை வேலைக்கு அனுபவம் உள்ள கட்டட மேற்பார்வையாளர்- BUILDING SUPERVISOR (NCT Qualification Prepaid) தேவை. ஓய்வு பெற்ற கட்டட மற்றும் நீர்ப்பாசனத் திணைக்கள உத்தியோகத்தர்களும் விண்ணப்பிக்கலாம்.

C/o விளம்பர இல, 5958
உதயன் பத்திரிகை நிறுவனம்,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(90713)

# JAFFNA CENTRAL COLLEGE
## PRIZE DAY -2009

We cordially invite you to the prize day
to be held in the **TAMBER HALL**
on
**Saturday** the 07th of November at 10.00 am

***Chief Guest***

**Hon. Minister K.N. Douglas Devananda M.P.**
(Ministry Of Social Service and Social Welfare)

Principal,
Staff & Students.

( C/.562154)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 08 ★ 04 ★ 1931



மறைவு 08 ★ 10 ★ 2009

## திருமதி கனகம்மா சிவகுரு

கடந்த 08.10.2009 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி கனகம்மா சிவகுரு அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (07.11.2009) சனிக்கிழமை காலை 7 மணி அளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் எமது குடும்பத்தலைவியின் மறைவுச் செய்தி கேட்டு உடன் வந்தவர்களுக்கும், தொலைபேசி, கடிதம் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் சுவிற்சலாந்திலுள்ள இரு மகன்மாரின் வீட்டிற்கும் நேரில் வந்தும், தொலைபேசியினூடாகவும் அனு தாபத்தைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் , கண்ணீர் அஞ்சலிகளை வெளியிட்டவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.*

கூவில், புலோலி தென்மேற்கு,
பருத்தித்துறை. 021 226 4266 (562173)

குடும்பத்தினர்

# சைவ பரிபாலன சபை பரீட்சைகள்

இன்று 07.11.2009 சனிக்கிழமை குடாநாட்டில் உள்ள பாடசாலைகளில் சைவபரிபாலன சபைப் பரீட்சைகள் தரம் 03 முதல் கா.பொ.த சாதாரண தரம் வரை இடம்பெறுகின்றன. (1)

# ஜோண் பொஸ்கோவில் பரிசளிப்பு விழா நாளை

யாழ்.புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தின் முதலாவது வருடாந்தப் பரிசளிப்பு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை மு.ப. 9.30 மணிக்கு வித்தியாலய அரங்கில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் அருட்செல்வி மரிய ஜீவந்தி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.ஆயர் அதிவண. தோமஸ் சவுந்தர நாயகமும், கௌரவ விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகமும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வைத்திய கலாநிதி திருமதி அபிராமி செந்தூரன் கலந்து கொள்வார். (10)

# வேலணை பிரதேச செயலகத்தில் பொலிஸ் பதிவுப்பணிகள் இன்று

இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்தவர்கள் உட்பட தமது அடையாள அட்டைகளைத் தொலைத்தவர்களின் வசதிக்காக இன்று சனிக்கிழமை முதல் வேலணை பிரதேச செயலகத்தில் வைத்து பதிவுகளை மேற்கொள்ள ஊர்காவற்றுறை பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அடுத்தவாரமளவில் இடம்பெறவுள்ள நடமாடும் சேவையில் தமது அடையாள அட்டைகளைத் தவறவிட்டவர்கள் மீண்டும் அடையாள அட்டைகளைப் பெற பொலிஸ் பதிவுகள் அவசியம்.

இதனைக் கருத்தில்கொண்டு பொலிஸ் பொறுப்பதிகாரி இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளார். தினமும் 50 பேர்களை பதிவுசெய்ய உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (1-111)

# வீடு வாடகைக்கு

நல்லூர் கோயிலையும் சென்றல் நேசிங் ஹோமையும் அண்மித்த பகுதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. உத்தியோகத்தர்/ சிறிய குடும்பம் விரும்பத்தக்கது.
தொடர்பு : 0774665593

# விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையில் YAMAHA MATE -90 மோட்டார் சைக்கிளும், டொல்பின் Van கரியரும், கறுப்பு நிற அல்ஷேசன் சிறிய பெரிய நாய்களும் விற்பனைக்குண்டு.
தொடர்பு : 0212225283

# திருத்தி வாசிக்கவும்

யா/இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய புகழூறு மாணவர் விவரம் திரட்டல் தொடர்பாக 02.11.2009 பதினான்காம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தில் உள்ள மின்னஞ்சல் முகவரியை ilavalaimeihandan @ yahoo.com எனத் திருத்தி வாசிக்கவும். (90704)

# இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் லேன், நல்லூர். (90711)

# துயர்பகிர்கின்றோம்

எமது பாடசாலையின் முன்னாள் பிரதி அதிபர் அமரர் ஆ.வே.துரைரெட்ணம் அவர்களின் பிரிவாற் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது பாடசாலையின் ஆசிரியர் சோ.இலட்சுமி காந்தன் அவர்களின் தாயார் அமரர் சோ.மங்கையற்கரசி அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/நயினாதீவு மகேஸ்வரி வித்தியாசாலை. (90700)

# மணமகள் தேவை

ஐரோப்பிய குடியுரிமையுடன் கௌரவமான பதவியிலுள்ள யாழ்கௌரவ இந்து 34 வயது அத்த நட்சத்திர விவாகரத்து பெற்ற குழந்தைகள் இல்லாத ஆணுக்கு நற்குணமுள்ள படித்த அழகிய இலங்கைத் தமிழ் மணமகள் தேவை. மிருகசீரிடம், உத்திராடம், அனுசம், உத்திரட்டாதி நட்சத்திரமுள்ளவர்கள் எவரும் சகல விபரங்களுடனும் புகைப்படத்துடனும் தொடர்பு கொள்ளவும்.

*Muruga*
*C/o N. Nageswaran*
*Ilakady, Chankanai*

...09
011 5026777

(இ/5619962)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



(90723)

எமது பொருளியல் ஆசிரியர்
**N.B.கஜீதரன்**
அவர்கள் கடந்த (04.11.2009) புதன்கிழமை HNDA பட்டம் பெற்றதையிட்டு மனமார வாழ்த்துகின்றோம்.

T.பீற்றர்சன் SHAMROCK ACADEMY
K.கல்யாணி (08 வர்த்தக மாணவி)

# யா/ புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம் முதலாவது பரிசுத்தினம் - 2009

| | |
|---|---|
| காலம்: | 08.11.2009 மு.ப 9.30 |
| இடம்: | வித்தியாலய அரங்கு |
| தலைவர்: | அருட்செல்வி ம.ஜீவந்தி (அதிபர்) |
| பிரதம விருந்தினர்: | தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை (யாழ். ஆயர்) |
| கௌரவ விருந்தினர்: | திருமதி. அ. வேதநாயகம் (வலயக்கல்விப்பணிப்பாளர், யாழ்ப்பாணம்) |
| சிறப்பு விருந்தினர்: | Dr. திருமதி. அபிராமி செந்தூரன் (யாழ். போதனா வைத்தியசாலை) |

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
பழைய மாணவர்கள்

(சி/562160)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மனம் மகிழ 06 ★ 10 ★ 1911



நெஞ்சம் நெகிழ 08 ★ 10 ★ 2009

## அமரர் விஸ்வலிங்கம் செல்லம்மா

08.10.2009 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத்தின் குலவிளக்கு விஸ்வலிங்கம் செல்லம்மா அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை எமது இல்லத்தில் இன்று (07.11.2009) சனிக்கிழமை மு.ப10 மணியளவில் நடைபெறும். இவ் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

855, கே.கே.எஸ் வீதி,
தட்டாதெருச் சந்தி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர் (90718)

# நல்லூர் நடராசா பரமேஸ்வரி மணி மண்டபத்தினரின் நன்றிகள்

நடராசா பரமேஸ்வரி மணி மண்டபத் திறப்புவிழா மிகச் சிறப்பாக 2009.11.02 திங்கட்கிழமையன்று நடைபெற்றது.

இவ்விழா சிறக்க அருளாசியுரை வழங்கிய நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக பரமாச்சார்ய சுவாமிகளுக்கும் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சிவத்திரு.மோகனதாஸ் சுவாமிகளுக்கும் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்த யாழ்.மாவட்ட அரச அதிபர் திரு. க. கணேஷ் அவர்களுக்கும், பிரதேச செயலர் திரு. பா.செந்தில்நந்தனன் அவர்களுக்கும், கௌரவ விருந்தினர்களாக கலந்து வாழ்த்துரைகளை வழங்கிய பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்களுக்கும் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி.எஸ்.கே. யோகநாதன் அவர்களுக்கும், மதுரகவி.காரை. எம்.பி.அருளானந்தன் அவர்களுக்கும், மணிமண்டபக் கட்டடக்கலை பணியை சிறப்பாக நிறைவேற்றிய செல்வராசாசிறி, விஜயராசா (விஜயன்) அவர்களுக்கும், ஏனைய கலைஞர்களுக்கும், விழா சிறக்க உதவிய அனைவருக்கும், செய்திகளை வெளியிட்ட பத்திரிகைகளுக்கும் எமது நன்றிகள்

நடராசா சத்தியரூபன்
முதல்வர், ஸ்ரீநதியா நகைமாடம், யாழ்ப்பாணம்.

(562171)

# மரண அறிவித்தல்

## *சரவணமுத்து வேலுப்பிள்ளை*

(ஓய்வுபெற்ற விளையாட்டு அதிகாரி)



கொழும்பைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம் மேற்கு மற்றும் மட்டக்களப்பினை வதிவிடமாகவும் தற்போது லண்டனில் வசித்து வந்தவருமான சரவணமுத்து வேலுப்பிள்ளை நேற்றுமுன்தினம் (05.11.2009) வியாழக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் சரவணமுத்து - செல்லாச்சி தம்பதியினரின் மூத்த மகனும் வீரகுட்டி - ரதிமாது தம்பதியினரின் மருமகனும் குணலட்சுமியின் (ஓய்வுபெற்ற அதிபர், மொறக்கொட்டாஞ்சேனை) அன்புக் கணவரும் நாகேஸ்வரி (பிரான்ஸ்), நாகலிங்கம் (நாகராசா - சுழிபுரம்) ஆகியோரின் சகோதரனும் பொன்னம்பலம், நாகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் Dr.ரவிக்குமார் (லண்டன்), Dr.விக்னகுமார் (அமெரிக்கா), சுகுணகுமார் (கனடா), வாசுகி (கனடா), சுஜாத்தா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் செல்வவதி, யாழினி, கனகமகிளினி, சண்முகராசா, பகீரதன் ஆகியோரின் மாமனும் சிந்துஜா, அனுஜா, திருஷன், துதிஷன், மொனிக்கா, அரன், ஆஞ்சா, ஒவியா, தானியா, சுரேக்கா, வதன், சிஸ்றேயா ஆகியோரின் பேரனும் பிரான்ஸைச் சேர்ந்த கணேசமூர்த்தி, காலஞ்சென்ற ரவீந்திரநாதன் மற்றும் பத்மலோஜினி, தவமலர், ரமேஸ் ஆகியோரின் மாமனும் தர்மசிறி (லண்டன்), நாகரூபன் (லண்டன்), நாகசுமிதினி, நாகதர்ஷினி (ஆசிரியை, இராமநாதன் கல்லூரி), நிஷாந்தன் (பொறியியலாளர், சிங்கப்பூர்) ஆகியோரின் பெரிய தந்தையும் உமா (லண்டன்), துசித்தா (லண்டன்), சரவணபவன் (விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கலைவாணி மில் வீதி,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*

(90722)

தகவல்:
நாகலிங்கம் (நாகராசா)
சகோதரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அச்சுவேலி மக்கள் வங்கிக் கிளையில் நடைபெற்ற சிறுவர் - முதியோர் தின நிகழ்வில் மூத்தபிரஜையான ஓய்வு பெற்ற வங்கி உத்தியோகத்தர் வை. தவரத்தினத்திற்கு வங்கியின் உதவி முகாமையாளர் திருமதி றொசாந் தவநாயகம் பரிசு வழங்கிக் கௌரவிப்பதை படத்தில் காணலாம். வங்கிமுகாமையாளர் இ.யோகராசாவும் படத்தில் காணப்படுகிறார்.
*(அச்சுவேலிச் செய்தியாளர்)*



சங்கானைப் பொது நூலகராகக் கடந்த 10 வருடங்களுக்கு மேலாகக் கடமையாற்றி, வவுனியா தெற்கு பிரதேச சபை, நூலகராக இடமாற்றம்பெற்றுச் செல்லும் திருமதி பாக்கியநாதன் செல்வராணிக்கு, வலிமேற்குப் பிரதேச சபையினரால் அண்மையில் பிரியாவிடை நிகழ்வு நடத்தப்பட்டது.

திருமதி பா. செல்வராணி உரையாற்றுவதையும், அருகில் பிரதேசசபைச் செயலாளர், சு.புத்திசிகாமணி, நிர்வாக உத்தியோகத்தர் க. பாலசுப்பிரமணியம் மற்றும் சபை உத்தியோகத்தர்கள் காணப்படுகின்றனர். *(படம். மு. சந்திரகுமார்)*

# வாசகர் திருமுகம்

## மக்களுக்கு உதவும் சேவையே வேண்டும்

யாழ்ப்பாண மாவட்டத்தில் வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வீதிகளை அகலமாக்கிப் புனரமைக்கும் வேலைகள் இடம்பெற்று வருகின்றன. இதற்காக வீதியின் இரு மருங்கிலும் உள்ள தனியார் காணிகள் அரசாங்க அதிபர் கூறியதாகச் சொல்லப்பட்டு இலவசமாகப் பெறப்பட்டு வருகின்றன. இது முற்று முழுதான மக்கள் விரோதச் செயல். இது விடயத்தில் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.

தென்பகுதியை அபிவிருத்தி செய்யும்போது ஒரு நடைமுறையும் வடபகுதிக்கு புதுமையான நடைமுறையும் பின்பற்றப்படுகிறது. உரிய முறையில் காணிகள் சுவீகரிக்கப்பட்டு அதற்குரிய நஷ்டஈடு வழங்கப்பட்ட பின்னரே அக்காணிகள் அரசுடைமையாகும். படைத்தரப்பால் பலாலியிலும், காரைநகரிலும் சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கே இதுவரை எந்த நஷ்டஈடும் வழங்கப்படவில்லை. இது சுவீகரிப்பு அதிகாரியின் கடமை. இந்த இலட்சணத்தில் பல விதத்திலும் நஷ்டப்பட்டு நொந்து போயுள்ள தமிழ்மக்கள் மீது மேன்மேலும் ஏற்கும்படி கோருவது என்ன நியாயம்? அரசாங்கத்திற்கு வரி அறவிடும் பிரதான பணிக்கான பிரதேச செயலகங்களுக்காகவும் கட்டணம் அறவிட்டு அஞ்சல்அனுப்பும் அஞ்சல் அலுவலகங்களுக்காகவும் மக்களிடம் பணம் அறவிட்டு காணிபெறும் அவலமான, அபாயகரமான நடவடிக்கை இம் மண்ணில் நிறைவேற்றப்படுகிறது. இதற்குப் பொறுப்புவாய்ந்த அரச அதிகாரிகள் துணைபோவதுதான் பரிதாபமான நிலை. இன்றைய நிலையில் யாழ்ப்பாணத்தைவிட்டு வெளியேற பாதுகாப்பு அனுமதி பெறுவது உட்பட பல விடயங்களுக்கு கிராம அலுவலரிடம் செல்ல வேண்டியுள்ளது. இது விடயத்தில் அரச அதிகாரிகள் சட்ட வரையறைக்குள்ளும் தங்களுக்குள்ள அதிகாரத்தின் படியும் நடந்து கொள்வதுதான் நல்லது. அதுவே மக்களுக்கு உதவும் சேவையாக இருக்கும்.

காரைநகர். வி.பரம்சோதி.

## காவல் அரண் நீக்கப்பட்டாலும் பொலிஸ்காவல் தேவைப்படும்

கடந்த 25.10.2009 அன்று உதயனில் யாழ்.மாநகர முதல்வரின் வேண்டுகோளுக்கிணங்க வேம்படிச் சந்தியிலுள்ள காவலரண்களை அகற்றுவதற்குப் படை அதிகாரி சம்மதம் தெரிவித்துள்ளார் என்ற செய்தி பிரசுரமாகியிருந்தது.

ஆனால் இந்தக் காவலரண்கள் அகற்றப்படத்தான் வேண்டுமா என்ற கேள்வி இப்போது எழுந்துள்ளது. பாடசாலை முடியும் வேளையில் ''கமராபோனு''டன் மோட்டார் சைக்கிள் ஊர்வலம்வரும் மன்மதராசாக்களின் அட்டகாசம் பற்றி பத்திரிகைகளில் செய்திகளும் வாசகர் திருமுகங்களும் பிரசுரமாகியுள்ளன. தனது மகளைப் பாடசாலைக்குக் கூட்டிச்செல்லும் தந்தையொருவர்தான் இந்த மன்மதராசாக்களால் அச்சுறுத்தப்பட்டதுபற்றி பத்திரிகைக்குக் கடிதமெழுதியிருந்தார்.

இந்த மன்மதராசாக்களை இராணுவத்தினர் எச்சரித்த சம்பவங்களும் இந்தப் பாடசாலைப் பகுதியில் நிகழ்ந்துள்ளன. (மன்மதராசாக்கள் வெறும் கையுடன்வரும் பெற்றோருடன்தான் தமது வீரத்தைக் காட்டுவர். துப்பாக்கியைக் கண்டால் பெட்டிப் பாம்பாக அடங்கிவிடுவர் ''சேர்'' என்றபடி) வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகில் காணப்படும் காவலரண்கள் அகற்றப்பட்டால் மன்மதராசாக்களைக் கட்டுப்படுத்த முடியாது என்பதே எனது அபிப்பிராயம்.

*இந்தக் காவலரண்கள் அகற்றப்பட்டால் அந்த இடத்தில் பாடசாலை தொடங்கும், முடியும் நேரங்களில் பொலிசார் கடமையிலீடுபடுத்தப்பட வேண்டும்.*

நான் பாடசாலை மாணவனாக இருந்த காலத்தில் வேம்படிப் பாடசாலை முடிவடையும் நேரத்தில் வேம்படி மகளிர் கல்லூரி வாசலில் இளைஞர்களின் போக்குவரத்திற்குத் தடைசெய்யப்பட்டிருந்தது. ஒருநாள் வேம்படிப் பாடசாலை முடிவடையும் நேரம் நானும் எனது நண்பனொருவனும் வந்தபோது இலங்கைவங்கி பிராந்தியக் காரியாலயத்தடியில் வைத்துப் பொலிசாரால் திருப்பியனுப்பப்பட்டோம். எனக்கு விடயம் புரியவில்லை. நண்பன்தான் விளங்கப்படுத்தினான். பின்னர் இருவரும் மணிக்கூட்டு வீதியூடாகச் சென்று இரண்டாம் குறுக்குத் தெருவில் வசித்த நண்பனிடம் சென்றோம். எனவே காவலரண் அகற்றப்பட்டால் இராணுவத்தினருக்குப் பதிலாகப் பொலிசார் அந்த இடத்தில் பாடசாலை தொடங்கும், முடியும் நேரங்களிலாவது கடமையிலீடுபடுத்தப்பட வேண்டும்.

[illegible]

# நகர நிர்வாகம் முதன்முதலில் கவனிக்க வேண்டிய ஒரு பிரச்சினை

போர் முடிவுக்கு வந்துவிட்டதெனக் கூறப்படும் நிலையில் நகருக்கு நாலாபக்கமும் இருந்துவரும் மக்களின் தொகை கணிசமான அளவு அதிகரித்துள்ளது. பாதை திறக்கப்பட்டபின் தென் பகுதியிலிருந்து வருகைதரும் மூவின மக்களின் தொகையும் அவ்வாறே காணப்படுகிறது. இதனால் நகரப்பகுதி களைகட்டி நிற்கிறது. இவ்வாறு நடமாடும் மக்கள் தங்கள் இயற்கை உபாதையைத் தீர்க்க முடியாது அங்குமிங்கும் விழிபிதுங்க அலைந்து திரியும் பரிதாபக் காட்சிகளும் நாம் காணும் நகரின் இன்றைய காட்சிகளுள் ஒன்று. கோட் சூட்டுடன் ''ரை'' கட்டியவர்கள் கம்பனிகளின் நாமங்கள் பறைசாற்றும் பலவர்ண சீருடையணிந்தவர்கள் எல்லோரும் இத்தகைய தாக்குதல்களுக்கு ஆளாகி அந்தரித்துத் திரியும் காட்சிகளையும் காணலாம்.

நகரின் நவீன சந்தைக்கட்டடத் தொகுதியில் நான்கு பொது மலசல கூடத் தொகுதியும், மரக்கறிச் சந்தைப் பகுதியில் ஒரு மலசல கூடத் தொகுதியும் உண்டு. ஆனால் இவை நகருக்குப் பரிச்சயப்பட்டவர்களைத் தவிர மற்றவர்களால் எளிதில் இனங்காண முடியாது. அதிலும் இதில் ஒன்று ஒரு சில கடைக்காரர்களினால் பூட்டி வைக்கப்பட்டு அவர்கள் தேவையை மட்டும் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.

இதனால் எப்போதாவது நகருக்குவரும் பொதுமக்கள் தங்கள் அவரச உடல் உபாதையைத் தணிக்க நகரில்படும் கஷ்டம் சொல்லும் தரமன்று. எளிதில் கண்டு கொள்ளக்கூடிய வகையில் நகர பஸ் நிலைய அலுவலகத் தொகுதியில் உள்ள மலசலகூடம் கிரமாகத் திறந்து விடப்படுவதில்லை. அடிக்கடி 'பழுது' என்ற மட்டையைத் தொங்கவிட்டு அதைப் பூட்டி விடுகிறார்கள். ஆகையால் இடம்தேடி அலைபவர்கள் தாம் காணும் எல்லோரையும் கேட்கவும் சங்கடப்படுகிறார்கள். இவரைக் கேட்கலாம் என்று ஒருவரைக் கேட்டால் அவரும் இப்பிரச்சினையோடு அலைபவராகவும் இருக்கிறார். வேதனை தாங்காது வெட்கத்தைவிட்டு நகரக் கடைகளில் ஏறி உதவி கேட்டால் எல்லாக் கடைகளிலும் இந்த வசதியும் இல்லை. வங்கிகள் எல்லாம் படையெடுத்து கட்டடங்களைத் தத்தெடுத்து வைத்திருக்கும் ஒரு சிறிய ஒழுங்கை விழாக்கோலம் பூண்டு அலங்கரிக்கப்பட்டுள்ளது.




உபாதையைத் இனித் தாங்கமுடியாது என்ற கட்டத்தில் எத்தகைய சன நடமாட்டம் இருந்தாலும் அதைப் பொருட்படுத்தாது பொறுமையிழந்து தங்கள் தேவையை நிறைவேற்றி, மேலும் அந்த வீதியைச் சிலர் அலங்கரிக்கிறார்கள். இப்படியென்றால் பெண்களின் பரிதாப நிலைமை சொல்லவும் வேண்டுமா?

ஆகவே புதிய உருவெடுத்து நிமிர்ந்து நிற்கும் யாழ்.மாநகரசபை நிர்வாகம் உடனடியாகவே அவசர அவசரமாகச் செய்யவேண்டிய வேலைகளின் பட்டியலில் இதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். பஸ் நிலையத்தில் வந்திறங்கும் மக்கள் மிக இலகுவில் கண்டுகொள்ளக் கூடியவகையில் ஒரு பொது மலசலகூடம் நிறுவப்படவேண்டும். சிறிது காலத்திற்கு முன்பு இத்தகைய வசதி ஒன்று பஸ் நிலையப் பகுதியில் இருந்தது. இயற்கைக் கடன் மட்டுமின்றி மக்கள் பல்துலக்கி முகம் கழுவி வேண்டுமானால் குளித்துவிட்டுப் போகவும் வசதி இருந்தது. சிறு தொகைக் கட்டணம் செலுத்தி மக்கள் நிறைவோடு சென்றார்கள். இத்தகைய வசதி ஒன்றை மாநகரசபை, வேதனையோடு அலைந்து திரியும் மக்களுக்காக உடனே செய்து கொடுக்க வேண்டும். இனி மாரிகாலம் வந்துவிட்டது. இலங்கையில் ஏழு பேருக்கு ஒருவர் என்ற கணக்கில் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்ற புள்ளி விவரமும் வந்துகொண்டிருக்கின்றது. ஆகவே நகருக்குவரும் எவரும் இத்தகைய வசதி ஒன்று இருந்தால் தற்போது காணப்படுவது போன்று பேயறைந்த முகத்தைவிட்டு மகிழ்ச்சி பொங்கும் முகத்தோடு திரிவார்கள். இன, மத, நிற, மொழி பேதமின்றி எல்லாவற்றுக்கும் மேலாக கட்சி பேதமின்றி எல்லோரையும் சரிசமனாக நோக்கும்-பாதிக்கும் இந்தப் பிரச்சினையிலிருந்து விடுபட்டு நகருக்கு வரும் மக்கள் சந்தோஷமாகத் தங்கள் தேவைகளை நிறைவேற்றிச்செல்ல கௌரவ புதிய மேயர் தனது கையொப்பத்தை வைக்கும் முதல் கோப்பாக இது இருந்தால்கூட அது பெரும் புண்ணியமே. ஏனெனில் மனிதனாகப் பிறந்த எவருக்கும் உள்ள தேவை இது.

பருத்தித்துறை. தினப்பயணி.

# மக்கள் முகம் மக்கள் முகம்



வடக்கு மாகாண உள்ளூராட்சி மாநாடும்- கண்காட்சியில் மன்னார் பிரதேசசபைச் செயலாளர் மரியநாயகம் யேசுநேசன் 5 விருது களைப் பெற்றுச் சாதனை படைத்ததை மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் ஜனகபண்டார தென்னக்கோன் பாராட்டியுள்ளார்.

வடக்கு மாகாணக் கண்காட்சி இறுதிநாளில் மன்னார் பிரதேச சபைச் செயலாளர் சிறில் மரியநாயகம் யேசுநேசன் -

* 2007 மாகாண மட்டத்தில் இடம்பெற்ற முகாமைத்துவ சேவைகள் போட்டியில் 3 ஆம் இடத்தையும் -
* 2007 மாவட்ட மட்டத்தில் இடம்பெற்ற முகாமைத்துவ சேவைகள் போட்டியில் முதலாம் இடத்தையும் -
* 2008 மாகாண மட்டத்தில் இடம்பெற்ற முகாமைத்துவ சேவைகள் போட்டியில் 3 ஆம் இடத்தையும் -
* 2008 மாவட்ட மட்டத்தில் இடம்பெற்ற முகாமைத்துவ சேவைகள் போட்டியில் முதலாம் இடத்தையும்
* 2008 மாகாணமட்டத்தில் சிறந்த உள்ளூராட்சி நிர்வாக செயலாளர் (Best Local govt.Secretary) விருதுகளுமாக -

மொத்தம் 5 விருதுகளைக் கடந்த 19ஆம் திகதி அமைச்சர் ஜனக்பண்டார தென்னக்கோனிடம் இருந்து பெற்றுக்கொண்டார். (9-302)

* * *



வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அமைச்சினால் நடத்தப்பட்ட 2007 ஆம் ஆண்டு சிறந்த நூலிற்கான பரிசுப் போட்டியில் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி விசேட கல்வித்துறை விரிவுரையாளர் த.சிவகுமாரின் ''விசேட கல்வி அறிமுகமும் பிரயோகங்களும்'' எனும் நூல் உயர் விருதைப் பெற்றுள்ளது.

அண்மையில் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற வடமாகாண தமிழ் இலக்கிய விழாவில் இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

பல நூல்களை எழுதியுள்ள இவர் பத்திரிகைகளில் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். அத்துடன் கைவினைக் கலைஞனாகவும் மிளிர்கின்றார்.

மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் நடத்தப்பட்ட சுற்றாடல் புகைப்பட போட்டியில் (திறந்த போட்டி) வடமாகாணத்தில் முதலாம் இடத்தையும் தேசிய மட்டத்தில் அதிஉயர் விருதினையும் பெற்றுக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவாலியில் கோழிகள் திருட்டு

நவாலி,நவ.7

நவாலியில் கோழிகள் பட்டப்பகல் வேளையில் திருடர்களால் பிடித்துச் செல்லப்படுகின்றன என்று அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

நவாலி, சின்னப்பா வீதியில் தினமும் ஒன்று, இரண்டு எனப் பிடிக்கப்பட்டு வந்த கோழிகள் நேற்றுமுன்தினம் மாலை அடைமழை பெய்து கொண்டிருந்த சமயம் 8 கோழிகள் ஒரே தடவையில் பிடிக்கப்பட்டுள்ளன.

இதேபோன்று அவ்வீதியைச் சேர்ந்த மற்றொரு நபரின் பெறுமதிமிக்க ஆட்டுக்கடாவும் திருடப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. (203-100)


### பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலை மாணவி

**செல்வி ந.ரம்பா**

அவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் 158 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்து பாடசாலைக்கும் சமூகத்திற்கும் பெருமை தேடித் தந்துள்ளமையைப் பாராட்டி வாழ்த்துவதோடு மேன்மேலும் கல்வியில் உயர்ந்து சாதனைநாயகியாய் மிளிர எம் ஆசிகளையும் கூறுகின்றோம். சிறந்த புள்ளிகள் பெற்ற வ.தனுஜிகா - 134, ர.விஜிதா - 128, ந.பேபிகா - 111, ஜீ.வினோதினி - 100, ந.டயன்சி - 100 ஆகியோரையும் பாராட்டுகின்றோம்.

யா/வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயம். (சி/562150) அதிபர், ஆசிரியர்கள், சக மாணவர்கள்.

### வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.நகர்ப் பகுதியில் சிறிய குடும்பம் வசிப்பதற்கு இரண்டு அறைகள் கொண்ட வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு: 021 7200 600

### காணி விற்பனைக்கு

இருபாலைச் சந்தியிலிருந்து 300 யார் தூரத்தில் இருபாலை வீதியில் அமைந்துள்ள தென்னங்காணி நெற்பா. (15) பதினைந்து பரப்பு விற்பனைக்குண்டு.

தொடர்பு கொள்ளவும்:- தொ.பேசி. 0770780397 (9566)

### மணமகள் தேவை

M.Sc. முடித்து Mechanical Engineer ஆக இருக்கின்ற Canadian PR உள்ள சைவ சமயம் 29 வயது, ஏழில் செவ்வாய், பூச நட்சத்திரம், பாவம் 30 உடைய மணமகனுக்கு வைத்தியத்துறையில் படித்துக் கொண்டிருக்கும் அல்லது படிப்பை முடித்துக்கொண்ட மணமகள் தேவை.

தொடர்பு:.0713163508 (90672)

### கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRA புறொயிலர் குஞ்சுகள், PIRIMA பேட்டுக் குஞ்சுகள் 10.11.2009ஆம் திகதியிலிருந்து விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

★ ராஜீவ் கால்நடைத் தீவன விற்பனை நிலையம் ஆனைக்கோட்டைச் சந்தி.

T.P.No:.0212222867, 0776090926.


## முகாமைத்துவக் கற்கைநெறி

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய நிலையத்தில் 2010/2011ஆம் கல்வியாண்டுக்கான முகாமைத்துவக் கற்கை நெறிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான தெரிவுப் பரீட்சை இன்று சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு யாழ். பிராந்திய நிலையத்தில் நடை பெறவுள்ளது.

வேறு பரீட்சை நிலையங்களில் பரீட்சை எழுத அனுமதி அட்டை கிடைக்கப் பெற்றவர்களும் யாழ். பிராந்திய நிலையத்தில் பரீட்சை எழுத அனுமதிக்கப்படுவர் எனவும் யாழ்.பிராந்திய இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளை மேற்படி பல்கலைக்கழக யாழ். பிராந்திய இயந்திர பொறியியல் பீட மாணவர்களுக்கான தொடர் மதிப்பீட்டுப் பரீட்சை-2 நாளை சனிக்கிழமை தொடக்கம் யாழ்.பிராந்திய நிலையத்தில் நடைபெறுமெனவும் இணைப்பாளர் மேலும் அறிவித்துள்ளார். (1-7)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ.7

யாழ்.றோட்டறிக் கழகத்தின் அனுசரணையில் கோப்பாய் வலய முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 7.30 மணிக்குக் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி வலயத்துக்குட்பட்ட அனைத்து முன்பள்ளி ஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (201)


### உடனடி பதவி வெற்றிடம்

காப்புறுதித்துறையில் 45 வருடங்களுக்கு மேல் யாழ்.மண்ணில் தொடர்ந்து முன்னணியில் சேவையாற்றிவரும் ஒரே ஒரு அரச அங்கீகாரம் பெற்ற காப்புறுதி நிறுவனத்தில் 18 வருடங்கள் வெளிக்கள சேவையில் திறமையும் அனுபவமுள்ள சிரேஷ்ட அமைப்பாளரின் கீழ் காப்புறுதி ஆலோசகர்களாக சேவையாற்ற திறமையும், தகுதியும், அனுபவமுள்ள இளைஞர், யுவதிகள் உடன் தேவை.

ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களும் வரவேற்கப்படுவர்.

★ உடனடி பயிற்சி வழங்கப்படும்.
★ பயிற்சிநெறியின் நிபந்தனைகள் பூர்த்தியாகும் பட்சத்தில் நிரந்தரமாக்கப்படுவீர்கள்.
★ பயிற்சிக்கால முடிவில் தொழில் தகைமை தொடர்பான அரச அங்கீகாரம் உடைய சான்றிதழ் வழங்கப்படும்.

**அடிப்படைத் தகைமைகள்**

★ G.C.E. (O/L) பரீட்சையில் கணிதம், ஆங்கிலம் உட்பட 6பாடங்களில் சித்தி.
★ 18 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல்வேண்டும்.
★ சுயவிவரக்கோவையுடன் (Bio Data) தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக 11.11.2009 (புதன்கிழமைக்கு) அன்று அல்லது அதற்கு முன்பு கிடைக்கக்கூடியவாறு விண்ணப்பங்களைக் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

(90690)

**விளம்பர இல: 3955, மே/பா. உதயன்.**

### B.Sc (Hons) - புதிய பிரிவுகள் ஆரம்பம்!!

B.Sc (Hons) in Multimedia - First Year in Jaffna

(உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அதிகூடிய வேலை வாய்ப்பை பெற்றுத்தரும் சர்வதேசக் கற்கை நெறி)

முதல் வருடம் எமது நிறுவனத்தில் கற்று 2nd & 3rd Year U.K , NEW ZEALAND, NETHERLAND , AUSTRALIA , MALTA ஆகிய நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் பகுதி நேர வேலை வாய்ப்புடன் தொடர முடியும்.

(Visa மற்றும் Pa t time Job அனைத்தும் எம்மால் செய்து தரப்படும்)

எமது நிறுவனத்தில் முதல் வருட இக் கற்கைநெறியை கற்று தற்பொழுது New Zealand & UK நாடுகளில் பகுதி நேர வேலை வாய்ப்புடன் உள்ள எமது யாழ்ப்பாணத்தை சேர்ந்த மாணவர்கள் சிலர்:-



Sharmilan , Senthuran , Luckhisharan



Mr.Thananseyan - Karaveddi



பதிவுகளை 12/11/2009ற்கு முன்னர் மேற்கொள்ளவும்

முக்கிய குறிப்பு :-

எமது நிறுவனத்திற்கு வருகை தரும் மாணவர்கள் பழம் வீதி அல்லது குமாரசாமி வீதிகளால் வந்து, பலாலி வீதிக்கு வந்து எமது நிறுவனத்திற்கு வருகை தரவும்.

மேலதிக விபரங்களுக்கு :- UNI ICT CAMPUS

No :- 83, Palaly Road, Kantharmadam, Jaffna. T.P :- 021 321 6433 / 0777 110 862





### அழைப்பு

### மக்கள் வங்கி

வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கிராமங்கள் தோறும் வங்கிச் சேவைகளை விரிவுபடுத்தும் வகையில் மக்கள் வங்கியினால் இன்று (07.11.2009) சனிக்கிழமை பின்வரும் சேவை நிலையங்கள் திறந்துவைக்கப்படவுள்ளன.

| நேரம் | இடம் |
|---|---|
| மு.ப. 08.00 மணி | புலோலி சேவை நிலையம் |
| மு.ப. 09.30 மணி | கோப்பாய் சேவை நிலையம் |
| மு.ப. 10.30 மணி | கல்வியங்காடு சேவை நிலையம் |
| மு.ப. 11.30 மணி | நாவலர் வீதி சேவை நிலையம் |
| பி.ப. 01.00 மணி | இல.312, ஆஸ்பத்திரி வீதியிலமைந்துள்ள புதிய அமைவிடத்தில் காங்கேசன்துறைக் கிளையினைத் திறந்துவைத்தலும் தன்னியக்கப் பணப்பரிமாற்ற இயந்திரம் திறந்துவைத்தலும் |
| பி.ப. 02.00 மணி | பண்டத்தரிப்பு சேவை நிலையம் |

(சி/562152)

மக்கள் வங்கித் தலைவர் **கௌரவ கருணாஜீவ** அவர்கள் இச்சேவை நிலையங்களைத் திறந்துவைக்கவுள்ளார்.

மேலும் இந்நிகழ்வில் மக்கள் வங்கிப் பிரதம நிறைவேற்று அதிகாரியும் பொது முகாமையாளருமாகிய **திரு.பி.வி.பதிரண** அவர்களும் தலைமை அலுவலக **சிரேஷ்ட உத்தியோகத்தர்களும்** கலந்து சிறப்பிக்க உள்ளனர்.

*இந்நிகழ்வில் தாங்களும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

உதவிப் பொதுமுகாமையாளர் (வட வலயம்),
பிரதேச முகாமையாளர் (யாழ்.பிராந்தியம்),
பணியாளர்கள்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைப் பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப்பெற்று பாடசாலைச் சமூகத்திற்குப் பெருமை தேடிய மாணவச் செல்வங்கள்

அண்மையில் வெளியாகிய புலமைப் பரிசில் பரீட்சையில் அந்தந்தப் பாட சாலை மட்டத்தில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று பாடசாலைச் சமூகத்திற்கும் அவர்களின் பெற்றோர்களுக்கும் தமது சொந்த ஊருக்கும் பெருமை தேடிக்கொடுத்த மாணவச் செல்வங்களின் கருத்துக்களைத் தொகுத்து 'உதயன்' வாசகர்களுக்காகத் தருகின் றோம். தொடர்ந்து படியுங்கள்.



### சிவராசா ஜதுர்சனன்
### உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்
### புள்ளிகள் - 161

எனது தந்தை லண்டனில் உள்ளார். அம்மா வீட்டுப்பணி. எனக்கு இரண்டு சகோதரர்கள் உள்ளனர். நான் மூன்றாவது பிள்ளை.

அம்மாவும், அண்ணாவும் காலை, மாலை வேளைகளில் எனக்கு அன்பாகப் பாடம் சொல்லித் தருவார்கள். நானும் ஆசையாகப் படிப்பேன். எனது அம்மாவின் ஆசை எதிர்காலத்தில் நான் வைத்தியராக வரவேண்டும் என்பதே. அதற்காக இப்போதிருந்தே என்னைத் தயார்ப்படுத்துகின்றேன்.

இவற்றைவிட இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் பங்குபற்றி பரிசில்கள் பெறுவதுண்டு. எனது பாடசாலை அதிபர் திரு.மு.விக்னேஸ்வரன் என்னில் நல்ல விருப்பம். நல்ல அறிவுரைகளைச் சொல்லுவார். வகுப்பாசிரியர் திரு.சத்தியநாதன் மற்றும் ஏனைய ஆசிரியர்களும் நன்றாகப் பாடம் சொல்லித்தருவார்கள். எனது இந்த வெற்றிக்கு உழைத்த அனைவருக்கும் நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.



### இராசகுமார் சுதர்சா
### உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்
### புள்ளிகள் - 147

எனது தந்தை தனியார் வியாபார நிலையம் ஒன்றில் வேலை செய்கின்றார். எனது சகோதரர்கள் மூன்றுபேர். நான் மூன்றாவது பிள்ளை.

எனது சொந்த ஊர் குரும்பசிட்டி. இடப்பெயர்வின் மூலம் உரும்பிராயில் வசித்து வருகின்றோம். எங்களை எப்படியாவது படிப்பித்து ஒரு நல்ல நிலைக்குக் கொண்டுவரவேண்டும் என்பது எனது பெற்றோரது பெருவிருப்பம். என்னை அதிகாலை 4 மணிக்கு எழுப்பிவிடுவார்கள். பாடசாலை செல்லும்வரை படிப்பேன். மாலையிலும் 7 மணிமுதல் 9 மணிவரை படிப்பேன்.

எங்கள் அதிபர் திரு.மு.விக்னேஸ்வரன் மிகவும் அன்பானவர். அறிவுரைகள் கூறுவார். வகுப்பாசிரியர் திரு.சத்தியநாதன் ஆகியோர் எங்கள் மீது அதிக கவனம் எடுத்துப் பரீட்சைக்குத் தயார்ப்படுத்தினார்கள்.

அனைவரது முயற்சிக்கும் செயல்வடிவம் கொடுத்து எதிர்காலத்தில் வைத்தியராக வரவேண்டும் என்பதே என்னுடைய இலட்சியம் ஆகும்.



### கனகபுனிதராஜா ஸ்ரீகர்சன்
### உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்
### புள்ளிகள் - 151

எனது தந்தை வர்ணம் பூசும் வேலை செய்கிறார். அம்மா வீட்டுவேலை. நான் வீட்டில் கடைசிப்பிள்ளை. எனக்கு மூத்த இரு சகோதரர்கள் உள்ளனர். அவர்களும் படிக்கிறார்கள்.

நான் காலை 5.30 மணிக்கு எழுந்து 6.30 மணிவரை படித்துவிட்டு பாடசாலைக்குச் செல்வேன். பின்னர் மாலை 4 மணிமுதல் 6 மணிவரை தனியார் கல்வி நிலையம் சென்று படித்துவிட்டு இரவிலும் 9 மணிவரை படிப்பேன்.

நான் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைவதற்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கிய எனது பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எதிர்காலத்தில் பொறியியலாளராக வரவேண்டும் என்பதே எனது விருப்பம்.



### ரவிக்குமார் கஜானி
### உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்
### புள்ளிகள் - 147

எனது தந்தை ஒரு விவசாயி. எனக்கு ஒரு தங்கையும் உள்ளார். அம்மா வீட்டுப்பணி. அவர்தான் எனது கல்வியில் அதிக கவனம் செலுத்துவார். நான் வீட்டில் மூத்தபிள்ளை. ஆகையால் என்னை எப்படியாவது படிப்பித்து ஒரு நல்ல நிலைக்கு ஆளாக்கவேண்டும் என்பது எனது பெற்றோருக்குப் பெருவிருப்பம்.

என்னை அப்பா அதிகாலை 5 மணிக்கு எழுப்பிப் படிக்கவைப்பார். 6 மணிவரை படிப்பேன். மாலையிலும் 6 மணிமுதல் 9 மணிவரை அம்மா இருந்து சொல்லித் தருவார்.

நான் பாடசாலைகளில் நடைபெற்ற போட்டிகளில் பங்குபற்றி நிறையப் பரிசில்களும் பெற்றுள்ளேன். குறிப்பாகப் பேச்சுப் போட்டியில் பங்குபற்றி மூன்றாம் இடத்தைப் பெற்று பரிசும், சான்றிதழும் பெற்றுள்ளேன்.

எதிர்காலத்தில் ஆசிரியையாக வரவேண்டும் என்பதே எனது ஆசையாக உள்ளது. அதற்காக இப் பொழுதே என்னைத் தயார்ப்படுத்துகிறேன். எனது கல்விக்கு உழைத்த அனைவருக்கும் குறிப்பாக தினேஷ் மாஸ்ரருக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

சந்திப்பு : பிறேமசீலன்.

---

# சரத் பொன்சேகாவின் பிரதிநிதி மனோ கணேசனுடன் சந்திப்பு

கொழும்பு, நவ. 7

ஜெனரல் சரத் பொன்சேகாவின் பிரதிநிதி ஒருவர் தன்னைச் சந்தித்துப் பேசினார் என்று மனோகணேசன் எம்.பி. கூறியுள்ளார். இலங்கையில் உள்ள ஒட்டுமொத்தத் தமிழ் மக்கள் தொடர்பாக அவரது நிலைப்பாட்டை சரத் பொன்சேகா தெரிவிக்கவேண்டும் என்றும் மனோகணேசன் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றக்குழு அறையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஐக்கிய தேசிய முன்னணியின் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு மனோகணேசன் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

ஜெனரல் சரத் பொன்சேகாவின் பிரதிநிதி ஒருவர் இரண்டு நாள்களுக்கு முன் என்னைச் சந்தித்துப் பேசினார். இச் சந் திப்பின் போது தமிழ் மக்கள் தொடர்பான நிலைப்பாடுகள் பரிமாறப்பட்டன.

பொன்சேகாவின் பிரதிநிதி என்னைச் சந்தித்துப் பேசுகிறார் என்றால் பொன்சேகா தமிழர் தொடர்பில் ஏதோ சொல்லப்போகின்றார் எனத் தெரிகின்றது.

சரத் பொன்சேகாவுடனோ அல்லது ஜனாதிபதியுடனோ எனக்குப் பிரச்சினை இல்லை. நான் அவர்களை எதிரிகளாகப் பார்க்கவில்லை. ஆனால் தமிழர்களுக்குப் பிரச்சினைகள் வரும்போது அம்மக்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்து வருகின்றேன்.

அம்மக்களுக்கு ஆதரவாக நான் குரல் கொடுக்காவிட்டால் அவர்கள் என்னை நாடாளுமன்றத்துக்கு அனுப்பியதில் அர்த்தமில்லாமல் போய்விடும். ஆனால், தமிழ் உறுப்பினர்கள் அமைச்சுப் பதவிகளுக்காக - சுகபோக வாழ்க்கைக்காக அரசுடன் இணைந்துகொண்டு தமிழ் மக்களைப் புறக்கணிக்கின்றனர்.

**யுத்தத்தின் பங்காளி**

இந்த நிலையில்தான் சரத் பொன்சேகா பற்றிய பிரச்சினைகள் எழுந்துள்ளன. அவர் யுத்தத்தின் பிரதான பங்காளி. தமிழ் மக்களை மீட்பதற்காகவே யுத்தம் செய்யப்பட்டது என்று பொன்சேகா கூறுகின்றார். அப்படியாயின் மீட்கப்பட்ட மக்களை ஏன் அடைத்து வைத்திருக்கிறீர்கள் என்று நான் கேட்க விரும்புகிறேன்.

இந்நாட்டில் உள்ள தமிழ் பேசும் மக்கள் தொடர்பாக சரத் பொன்சேகா தனது நிலைப்பாட்டை வெளிப்படையாகக் கூறவேண்டும். கடந்த இரண்டு நாள்களுக்கு முன் என்னைச் சந்தித்த சரத் பொன்சேகாவின் பிரதிநிதியிடம் தமிழ் மக்கள் தொடர்பான எனது கருத்துகளை முன்வைத்தேன்.

நாட்டில் ஊழல், மோசடிகளை ஒழித்தல், நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை இல்லா தொழித்தல், முகாம்களில் உள்ள மக்களை மீள்குடியமர்த்தல், தமிழர்களுக்குத் தீர்வு வழங்குதல் போன்றவை தொடர்பாக சரத் பொன்சேகா அவரது நிலைப் பாட்டைத் தெரிவிக்க வேண்டும் என்று நான் அவரது பிரதிநிதியிடம் கூறினேன்.

ஐக்கிய தேசிய முன்னணியில் இணைந்ததன் மூலம் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு சாத்தியப்படும் என்று நான் நம்புகிறேன்.

இதனால் நாட்டில் உள்ள தமிழ் மக்கள் ஐக்கிய தேசியக் கூட்டணிக்கே வாக்களிக்கத் தயாராகிவிட்டனர். அம்மக்கள் இந்தக் கூட்டமைப்புடன்தான் இணைந்திருக்கின்றனர் - என்றார்.

(அ-சி)

---

## தேசிய சுதந்திர முன்னணிக்குள் பிளவு; அமைச்சர் நந்தன குணதிலக்க ராஜினாமா

கொழும்பு, நவ. 7

தேசிய சுதந்திர முன்னணியில் அங்கம் வகித்த களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் சுற்றுலாத்துறை அமைச்சருமான நந்தன குணதிலக்க தமது கட்சியிலிருந்து விலகுகிறார் என நேற்று முன்தினம் அறிவித்துள்ளார்.

கட்சியின் பொதுச்செயலாளர் பதவியிலிருந்தும் செயற்குழு கூட்டணியிலிருந்தும் இராஜிநாமா செய்வதாக, உத்தியோகபூர்வமாக கட்சியின் தலைமைப் பீடத்துக்கு அறிவித்துள்ளதுடன் தேர்தல் ஆணையாளருக்கும் கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, அமைச்சர் நந்தன குணதிலக்கவின் பிரத்தியேக செயலாளரும் தேசிய சுதந்திர முன்னணியிலிருந்து விலகவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மக்கள் விடுதலை முண்ணணியில் அங்கம் வகித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அக்கட்சியுடன் ஏற்பட்ட முறுகல் காரணமாக பிரிந்துசென்று விமல் வீரவன்ச தலைமையில் தேசிய சுதந்திர முன்னணியை நிறுவினர் என்பது குறிப்பிடத்தக்கது.

(சி)

---







வல்வை சிவகுரு வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழாவில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் மங்கள விளக்கேற்றுவதையும் அதிபர் ஆ.சிவநாதன் அருகில் நிற்பதையும் முதலாவது படத்தில் காணலாம்.

திருமதி உமா வரதீஸ்வரன் மாணவன் ஒருவருக்குப் பரிசில் வழங்குவதையும், நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களையும் ஏனைய இரண்டு படங்களிலும் காணலாம்.

(படங்கள்: சுந்தா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மாவட்ட வலம் - பதுளை

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சை, டிசம்பர்-2009
General Certificate of Education (Ord.Level) Examination, December-2009

## விவசாயமும் உணவுத் தொழில்நுட்பமும் - I

01. ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட பாரம்பரியமற்ற விவசாய முயற்சியாய் அமைவது,
1) நெற்பயிர்ச் செய்கை. 2) கறுவாப் பயிர்ச்செய்கை.
2) அலங்கார மலர்ச்செய்கை. 4) இறப்பர் பயிர்ச்செய்கை.

02. சூரிய ஒளிக்காலத்தை அளவிடப் பயன்படும் உபகரணம்,
1) சூரிய ஒளிர்வுமானி. 2) அக்ரினோகிறாவ்.
3) ஈர-உலர் குமிழ் வெப்பமானி. 4) ஈரமானி.

03. மண்ணில் அடிக்கடி கழுவிச்செல்லப்படுவதும், வழங்குபடையாய் காணப்படுவதுமான மண்படை,
1) A படை. 2) B படை. 3) C படை. 4) O படை.

04. மண் கட்டமைப்புத் தொடர்பான பிழையான கூற்றைத் தெரிவுசெய்க.
1) சேதனப்பொருட்களைச் சேர்ப்பதனால் மண் கட்டமைப்பு விருத்தியடையும்.
2) சேறடித்தல் செயற்பாடு மண் கட்டமைப்பை விருத்தியடையச் செய்யும்.
3) மண் புனருத்தாரணம் கட்டமைப்பை விருத்தி செய்ய உதவும்.
4) சிறந்த கட்டமைப்புடைய மண் அரிப்பிற்குட்படுவது குறைவாகும்.

05. பற்றீரியா நோயைத்தடுக்க சிறந்த முறையாய் அமைவது,
1) சுழற்சி முறைப் பயிர்ச்செய்கை. 2) பூச்சி நாசினி விசிறல்.
3) பங்கசு நாசினி விசிறல். 4) காவிகளைக் கட்டுப்படுத்தல்.

06. நிறையுடலிப் பருவத்தினால் பயிர்களுக்கு அதிக சேதத்தை ஏற்படுத்தும் பூச்சியினம் எது?
1) பழஈ 2) ஆமையுரு வண்டு.
3) வாழை நீள்மூஞ்சி வண்டு. 4) கருவண்டு.

07. விவசாய செயன்முறைப் பாடவேளையின்போது ''பல்வேறு வித்துக்களுக்கான விதைச்சிகிச்சை முறைகள்'' எனும் தலைப்பில் மாணவர் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டனர். முதல் 4 குழுக்களுக்கான சிகிச்சை முறைகள் இங்கு தரப்பட்டுள்ளன.

| குழு | சிகிச்சை முறை |
|---|---|
| A | வித்துறை அகற்றல் |
| B | சுடுநீரில் இடல் |
| C | நுண்ணங்கிப் பரிகரணம் |
| D | நீரில் ஊறவிடல். |

குழு A மாணவர்கள் பயன்படுத்தியிருக்கக்கூடிய வித்து எது?
1) இப்பில் - இப்பில். 2) மா.
3) பயறு. 4) நெல்.

08. குழு C பயன்படுத்திய சிகிச்சை முறையின் பிரதான நோக்கம் எதுவாக இருக்கலாம்?
1) வித்தில் காணப்படும் நுண்ணங்கிகளை அழித்தல்.
2) வித்து முளைத்தலை விரைவுபடுத்தல்.
3) வித்துக்கனின் சேமிப்புக் காலத்தை அதிகரித்தல்.
4) இறைசோபியம் பற்றீரியாக்களைச் சேர்த்தல்.

09. நடுகைக்கு பயன்படும் தாவரப்பதிய இனப்பெருக்கப் பகுதிகள் சில வருமாறு: குமிழ், ஓடி, குமிழம், வேர்த்தண்டுகிழங்கு; இப்பகுதிகளைக் கொண்ட தாவரங்கள் முறையே,
1) வெங்காயம், வல்லாரை, இராசவள்ளி, இஞ்சி.
2) உருளைக்கிழங்கு, வல்லாரை, வெங்காயம், இஞ்சி.
3) வெங்காயம், வல்லாரை, உருளைக்கிழங்கு, மஞ்சள்.
4) ஸ்ரோபெரி, வெங்காயம், மோதகவள்ளி, இஞ்சி.

10. கிளையொட்டு முறைகளில் ஒன்று,
1) H ஒட்டு. 2) ஆப்பொட்டு. 3) துண்டொட்டு. 4) T ஒட்டு.

11. முதல் பண்படுத்தல் உபகரணமாய் அமைவது,
1) வட்டத்தட்டு ஹரோவர். 2) ஹோவகை உபகரணம்.
3) கைமுள்ளு. 4) முட்கலப்பை.

12. ஓராண்டுக் களையானது,
1) சீதேவியார் செங்கழுநீர். 2) ஆனைச்சுவடி.
3) அறுகு. 4) நீர் சேம்பு.

13. தக்காளி இலைச் சித்திரவடிவ நோய்க்கான நோய்க்காரணி எது?
1) பற்றீரியா. 2) வைரசு.
3) பங்கசு. 4) நெமற்றோட்டு

14. வீதிப்பயிர்ச் செய்கையின் அனுகூலமாய் அமையாதது,
1) நீர்வளம் பாதுகாக்கப்படுகின்றது.
2) களைகள் கட்டுப்படுத்தப்படுகிறது.
3) பழங்களை மேலதிகமாக அறுவடை செய்யலாம்.
4) மண்ணுக்கு சேதனப்பொருள் கிடைக்கும்.

15. தாவர வளர்ச்சிக்குத் தேவையான அத்தியாவசியமான மாபோசணை மூலகங்களைக் கொண்ட கூட்டம் எது?
1) C,H,N,Cu,Cl 2) N, P,K,B,Fe
3) N,P,Ca,Mg,S 4) N,K,Ca,S,Zn

16. மண்ணின் கனிப்பொருட்கூறுகளுள் அடக்கப்படுபவை,
1) அடையலும் மண்ணீரும். 2) களியும் உக்கலும்.
3) அடையலும் களியும். 4) மணலும் பரலும்.

17. கூட்டெரு தொடர்பான கூற்றுக்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.
A - C/N விகிதம் உயர்வான சேதனப்பொருட்கள் விரைவில் பிரிகையடையும்.
B - மண்புழுக்களும் கூட்டெரு தயாரிப்பில் பயன்படுத்தப்படலாம்.
C - கூட்டெரு தயாரிப்பின்போது சேதனப்பசளைகளும் பயன்படுத்தப்படலாம்.
இவற்றுள் சரியான கூற்று/ கூற்றுக்கள்,
1) A,B மட்டும். 2) B,C மட்டும்.
3) A,C மட்டும். 4) மேற்கூறிய எல்லாம்.

18. பயிர்ச்செய்கை செயற்பாடுகளில் நீர்ப்பாசனம் முக்கிய ஒரு செயற்பாடாகும். இதன் பிரதான நோக்கம் /நோக்கங்கள்,
1) பயிருக்குத் தேவையான நீரை வழங்கல்.
2) பண்படுத்தல் செயற்பாடுகளை இலகுபடுத்தல்.
3) மண்ணிலுள்ள உப்புகளைக் கழுவியகற்றல்.
4) மேற்கூறிய எல்லாம்.

19. சால் நீர்ப்பாசனம் மேற்கொள்ளப்படும் பயிர்க்கூட்டத்தைக் குறிப்பிடுக.
1) சோளம், கத்தர, நிலக்கடலை. 2) நெல், சோளம், நிலக்கடலை.
3) தோடை, மா, றம்புட்டான். 4) குரக்கன், பயறு, கௌப்பி

20. நிரம்பல்நிலையிலுள்ள (Saturation) மண்ணில் காணப்படக் கூடிய நீர் வகைகள்,
1) புவியீர்ப்பு நீர், மயிர்த்துளை நீர். 2) பருகு நீர், மயிர்த்துளை நீர்.
3) பருகு நீர், மயிர்த்துளை நீர், புவியீர்ப்பு நீர்
4) மயிர்த்துளை நீர், பருகு நீர், நிலத்தடிநீர்.

21. பொதுவாகப் பயன்படுத்தப்படும் அசேதனப்பசளை ஒன்றின் பௌதீக இயல்புகள் கீழே தரப்பட்டுள்ளன.
* செங்கபில நிறமான சிறுப்பளிங்குருவானவை.
* நீரில் நன்கு கரையக்கூடியது.
இப்பசளை யாதாக இருக்கலாம்?
1) யூரியா. 2) பாறைப்பொசுப்பேற்று.
3) பொட்டாசியம் சல்பேற்று. 4) மியூரேற்று ஒவ் பொட்டாசு.

22. இலங்கையில் அதிக நிலப்பரப்பில் காணப்படும் மண் வகை எது?
1) செங்கபில மண். 2) செம்மஞ்சள் பொட்சோல்.
3) செங்கபில இலற்றசோல். 4) மணல் மண்.

23. WL2a எனும் குறியீட்டை உடைய விவசாயச் சூழல் வலயம் தொடர்பான சரியான கூற்று,
1) இடைவலய மத்திய மலைநாட்டுப் பிரதேசமாகும்.
2) உலர்வலய தாழ்நாட்டுப் பிரதேசமாகும்.
3) ஈரவலய மத்திய மலைநாட்டுப் பிரதேசமாகும்.
4) ஈரவலய தாழ்நாட்டுப் பிரதேசமாகும்.

24. மண்வாழ் நுண்ணங்கிகள் தொடர்பான சரியானக்கூற்றைத் தெரிவுசெய்க.
1) அமிலத்தன்மையான மண்ணில் பற்றீரியாக்கள் சிறப்பாக வளரக்கூடியன.
2) காற்றூட்டல் குறைவான/நீர்வடிப்பின்றிய மண்ணில் நுண்ணங்கிகள் காணப்படமாட்டாது.
3) பற்றீரியாக்கள் சில சுயாதீனமாக/ ஒன்றியவாழிகளாக நைதரசன் பதிக்கும் ஆற்றல் கொண்டவை.
4) மண்வாழ் நுண்ணங்கிகளால் எப்போதும் தீமையே ஏற்படுகின்றது.

25. மிகக் குறுகிய காலத்தில் நெல்நாற்றுகளைப் பெறக்கூடிய நாற்றுமேடை எது?
1) சேற்று நாற்றுமேடை. 2) உயர் நாற்றுமேடை.
3) டபொக் நாற்றுமேடை. 4) மணல் சாற்றுமேடை.

26. இலங்கையில் வடகீழ்ப் பருவப்பெயர்ச்சி மழைக்குரிய காலப்பகுதி,
1) டிசம்பர்-பெப்ரவரி. 2) மார்ச்- ஏப்பிரல்.
3) மே- செப்ரெம்பர். 4) ஒக்டோபர்- நொவம்பர்

27. மரக்கறி வகைகள், பழங்கள் கொண்டு செல்லலின்போது ஏற்படும் இழப்புக்களை குறைக்கப்பயன்படுத்தப்படும் முறையாவது,
1) பிளாஸ்ரிக் கூடைகளில் எடுத்துச்செல்லல்.
2) நிரப்புப் பொருட்களைப் பயன்படுத்தல்.
3) குளிரூட்டப்பட்ட வாகனங்களைப் பயன்படுத்தல்.
4) பொதி செய்து எடுத்துச்செல்லல்.

28. பதப்படுத்தப்பட்ட திடீர் உணவுகளில் அதிகளவில் பயன்படுத்தப்படும் இரசாயன சுவையூட்டிப் பதார்த்தமாக அமைவது எது?
1) பென்சோயிக்கமிலம். 2) சோபிக்கமிலம்.
3) சோடியம் நைத்திரேற்று. 4) மொனோசோடியம் குளூரமேற்று.

29. புவியில் அதிகளவு காணப்படும் பாறை வகை எது?
1) தீப்பாறை. 2) அடையற்பாறை.
3) உருமாறியபாறை. 4) தாய்ப்பாறை.

30. தேயிலை, இறப்பர், தென்னை, நெல் போன்ற பயிர்களில் இலங்கையின் அதிக நிலப்பரப்பில் பயிரிடப்படும் பயிர் எது?
1) தேயிலை. 2) இறப்பர். 3) தென்னை. 4) நெல்.

31. தரப்பட்ட விலங்கு வர்க்கங்கள் அடக்கப்படும் விலங்கினங்களின் சரியான ஒழுங்கைத் தருவது,
* மூறா, சிந்தி, சாணன், லாஜ்பிளக்
1) மாடு, எருமை, ஆடு, பன்றி. 2) எருமை, மாடு, பன்றி, ஆடு.
3) மாடு, ஆடு, எருமை, பன்றி. 4) எருமை, மாடு, ஆடு, பன்றி.

32. இலங்கையில் அதிகளவு பயன்படுத்தப்படும் கோழிவளர்ப்பு முறையானது,
1) கன கூளமுறை. 2) தட்டுமுறை.
3) கலவடுக்குமுறை. 4) திறந்தவெளிமுறை.

33. கோழிப்பண்ணையாளர் ஒருவர் தனது பண்ணையில் காணப்படும் கோழிகளில் சில அசாதாரண நடத்தைகளை வெளிக்காட்டுவதை அவதானித்தார். அவையாவன :
* இரத்தம் கலந்த கழிச்சல்.
* உணவில் விருப்பமின்மை.
* இறந்த கோழிகளை வெட்டிச்சோதித்தபோது குடலில் குருதியும் சீதமும் காணப்பட்டன.
அவருடைய பண்ணையில் பரவியுள்ள நோய் யாதாக இருக்கலாம்?
1) புள்ளோரம். 2) கொக்சிடியோசிஸ்.
3) கோழியம்மை. 4) இரனிகற்.

34. ஈரநிலையில் உள்ள ஐதுதீன் விலங்குணவானது,
1) மேய்ச்சல் புல். 2) வெட்டியூட்டும் புல்.
3) குழிகாப்புத்தீன். 4) மேற்கூறிய யாவும்.

35. பசுக்களின் சராசரிக் கறவைக் காலம்,
1) 250 நாட்கள். 2) 285 நாட்கள். 3) 305 நாட்கள். 4) 330 நாட்கள்.

36. மாடுகளைப் பாதிக்கும் மடியழற்சி, அந்திரக்ஸ், கொள்ளை நோய்களுக்கான நோய்க்காரணி எது?
1) வைரசு. 2) பற்றீரியா. 3) புரட்டசோவா. 4) வட்டப்புழு.

37. பசும்பாலானது பௌதீக/ உயிரியல் முறைகளில் நற்காப்புச் செய்யப்படுகிறது. உயிரியல் முறையில் நற்காப்பிடப்பட்ட உணவுப்பொருளாய் அமைவது,
1) பால்மா. 2) கிருமியழிக்கப்பட்ட பால்.
3) கட்டிப்பால். 4) யோகட்.

38. உள்ளூர் சந்தைக்கு அனுப்பப்படும் உணவுப்பொருட்களின் தரத்தை உறுதிசெய்து வழங்கப்படும் சான்றிதழ் எது?
1) SLS 2) SLA 3) ISO 4) ISA

39. கோழி இறைச்சியின் புரத உள்ளடக்கம்,
1) 22% 2) 14% 3) 25% 4) 4%

40. கோழிகளுக்கான உணவுப்பங்கீட்டில் சக்தி நிரப்பியாகப் பயன்படுத்தப்படும் உணவுப்பொருள் யாது?
1) சோளம். 2) பயறு. 3) பால்மா. 4) என்புணவு.

மறுபக்கம் பார்க்க.....

ஆசிரியர்:- K.பாலகுமார், [B.Sc.(Agriculture)]
சரஸ்வதி மத்திய மகா வித்தியாலயம், பதுளை.
தொலைபேசி இலக்கம்:- 055-2223208

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணக் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 16 வயதுப் பிரிவினர்களுக்கான உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் மோதிக் கொள்வதைப் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

# 18 வயதுக்குட்பட்டோருக்கான உதைபந்தாட்டம்; வலயச் சம்பியனானது மானிப்பாய் இந்து அணி

## 2ஆம் இடம்-தெல்லிப்பழை யூனியன்; 3ஆம் இடம்-ஹென்றியரசர்

வலி.வடக்கு, நவ.7

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 18 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி வலயச் சம்பியனாகியது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் மானிப்பாய் இந்துக்கல்லூரியும் மோதிக்கொண்டன.

ஆரம்பம் முதல் இறுதிவரை மானிப்பாய் இந்துக்கல்லூரியின் வீரர்களே மைதானத்தில் ஆதிக்கம் செலுத்தினார்கள்.

முதல்பாதி ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக்கல்லூரி வீரர்களான கனிஷ்டன், நிரோஜன், மதி ஆகியோர் தலா ஒவ்வொரு கோல்களைப் பெற்றுக் கொடுக்க மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி முன்னிலையில் இருந்தது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் கோல்களைப்பெற யூனியன் கல்லூரி முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் அது கைகூடும் வாய்ப்பை மானிப்பாய் இந்துக் கல்லூரி முறியடித்தது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி வீரர்களான நிரோஜன், கனிஷ்டன் ஆகியோர் மேலும் ஒவ்வொரு கோல்களைப் பெற்றுக் கொடுக்க ஆட்டம் நிறைவு பெற்றது.

ஆட்ட இறுதியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி 5:0 என்ற கோல் கணக்கில் யூனியன் கல்லூரியை வென்று வலயச் சம்பியனாகியது.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் அராலி இந்துக் கல்லூரியும் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியும் மோதிக் கொண்டன. இதில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி 5:0 என்ற கோல் கணக்கில் அராலி இந்துக் கல்லூரியை வென்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. (5-86)

[illegible] விளையாட்டு அரங்குகளில்

# பிறிமா கிரிக்கெட் போட்டியில் விளையாட யாழ். மாவட்டத் தெரிவு அணி கண்டி பயணம்

வலி. வடக்கு, நவ.7

பிறிமா நிறுவனத்தால் நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இரண்டாம் சுற்றில் விளையாட 15 வயதுக்கு மேற்பட்ட யாழ். மாவட்டத் தெரிவு அணி இன்று சனிக்கிழமை கண்டிக்குப் பயணமாகின்றது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு இடையே நடைபெற்ற மாவட்டப் போட்டிகளில் நான்கிலும் யாழ். மாவட்டத் தெரிவு அணி வெற்றி பெற்றது. இதனையடுத்து இரண்டாம் சுற்றில் விளையாட -வடக்கு - கிழக்கில் இருந்து இந்த அணி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இரண்டாம் சுற்றுப் போட்டிகள் கண்டியில் நடைபெறவுள்ளன. யாழ்ப்பாணத்தில் இருந்து செல்லும் அணியின் முகாமையாளராக இ.குகனும் பயிற்றுவிப்பாளராக வி.கே. சண்முகலிங்கமும் செல்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (50-86)

# பெண்களுக்கான உதைபந்தாட்டம்; 13வயதுப் பிரிவில் நெல்லியடி ம.ம.வி. சம்பியன்

யாழ்ப்பாணம்,நவ.7

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையே முதன் முதலாக நடத்திய 13வயதுப்பிரிவுப் பெண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இறுதியாட்டத்தில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி சம்பியனாகியது.

இப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது. இதில் கரவெட்டி விக்கினேஸ்வரா அணியை எதிர்த்து நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி மோதியது. நெல்லியடி மத்திய மகா வித்தி யாலய அணியை எதிர்த்து விளையாடிய கரவெட்டி விக்கினேஸ்வரா அணி 1:0 என்ற கோல் கணக்கில் வென்று சம்பியனாகியது.

தொடர்ந்து இடம்பெற்ற மூன்றாவது இடத்திற்கான போட்டியில் மானிப்பாய் மகளிர் கல்லூரி அணி தன்னை எதிர்த்து விளையாடிய நாவாந்துறை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை அணியை 2:0 என்ற கோல் கணக்கில் வென்றது. (50- 23)



இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் பாடசாலை மட்டத்தில் நடத்திய 13 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யாழ்.மாவட்ட மட்டப் போட்டியில் வெற்றிபெற்ற யாழ்.மத்திய கல்லூரி அணி வீரர்களுடன் கல்லூரி அதிபர் எல்.ஓங்காரமூர்த்தி, விளையாட்டுப் பொறுப்பாசிரியர் எடிசன் ஆகியோர் காணப்படுகின்றனர். *(படம்: தமிழினியன்)*

# விபுலானந்தன் வெற்றிக் கிண்ணத்தை சென்றலைட்ஸ் 'சொக்ஸ்' கைப்பற்றியது

யாழ்ப்பாணம், நவ.7

யூனியன் அஸ்யூரன்ஸ் அனுசரணையுடன் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையே நடத்திய பொன்.விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக மின்னல் வேக ஒருநாள் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இறுதியாட்டத்தில் சென்றலைட்ஸ் சொக்ஸ் விளையாட்டுக் கழக அணி சம்பியனாகியது.

யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட ஆடுகளத்தில் மின்னொளியில் சுற்றுப்போட்டி இடம்பெற்றது.

இச்சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் யாழ்.சென்றலைட்ஸ் சொக்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது.

யாழ். சென்ரலைட்ஸ் சொக்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விளையாடிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி 50:20 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிகொண்டது.

இந்த ஆட்டத்தில் சிறந்த ஆட்டநாயகனுக்கான விருது யாழ். சென்ரலைட்ஸ் சொக்ஸ் விளையாட்டு வீரன் பிரசன்னாவுக்கு வழங்கப்பட்டது. (50-23)

## 11 வயதுக்குட்பட்டோருக்கான தாச்சிப்போட்டி


# அளவெட்டி சதானந்தா வித்தியாசாலை ஆண், பெண் அணிகள் சம்பியனாகின

யாழ்ப்பாணம், நவ.7

தெல்லிப்பழை கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான 11 வயதுக்குட்பட்ட ஆண், பெண் அணிகளுக்கான தாச்சிப்போட்டிகள் மல்லாகம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றன.

இதில் ஆண், பெண் இரு பிரிவுகளிலும் அளவெட்டி சதானந்தா வித்தியாசாலை சம்பியனாகியது.

இவ்வருடம் நடைபெற்ற அம்பனை குடும்ப மட்டப் போட்டியிலும் இரு அணிகளும் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (50)



யாழ்ப்பாணக் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 14 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் யாழ். கல்வி வலயச் சம்பியனாகிய நாவாந்துறை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை அணி, இரண்டாம் இடத்தைப் பெற்ற யாழ் இந்துக்கல்லூரி அணி ஆகியவற்றுடன் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். குமாரசுவாமி, உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் சண் தயாளன் மற்றும் ஆசிரியர்கள் நிற்பதைப் படங்களில் காணலாம். *(படங்கள். நேசன்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இன்றைய தலைமுறையில் பலர் இடைநிலைக் கல்வி வரையிலாவது பயின்றுவிட்டு வேலைவாய்ப்பின்றித் தவிக்கின்றனர். இவர்களில் பலர் பல்கலைக்கழகம் புகுவதற்குத் தகுதி பெற்றிருந்தும், மட்டுப்படுத்தப்பட்ட அனுமதியால் அந்தச் சந்தர்ப்பத்தை இழக்கும் அபாக்கியசாலிகள். 'Z' ஸ்கோர்

# தட்டிப் பறித்தலும்,

முறையும் சிலருக்குக் காலை வாரி விடுகின்றது.

இந்நிலையில் பல்கலைக்கழகம் புகாவிடினும், கல்வியியற்கல்லூரி அனுமதி பெறுவோர் மகிழ்வுடன் அதனையேற்று தமது கல்வியைத் தொடர்கிறார்கள். ஏனெனில் இவர்களுக்கு ஆசிரிய நியமனம் நிச்சயம் என்கின்ற அசைக்கமுடியாத நம்பிக்கை.

இத்தகையோரைப் பார்த்துப் பட்டதாரிகளே விசனமடையும் சந்தர்ப்பங்களையும் நாம் அறிந்துள்ளோம். இவ்விடத்தில் பட்டதாரிகளின் ஆதங்கம் என்னவெனில்-

(அ).பட்டம் பெற்றும் தொழிலுக்காகக் காத்திருத்தல்.

(ஆ) அந்தத் தொழில் வாய்ப்புக்காக மேலுமொரு பரீட்சையை எதிர்கொள்ள வேண்டியிருத்தல்.

(இ) தம்மிலும் சில புள்ளிகளே குறைவாகப் பெற்றிருந்தும், ஆசிரியர் தொழிலை நிச்சயப்படுத்திக் கொள்ளும் தன்மையை கல்வியியற் கல்லூரி மாணவர்கள் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பம் என்பனவாகும்.

கல்வியியற் கல்லூரி வாய்ப்பும் கிடைக்காத பெரும்பாலானோர், வெளி வாரிப் பட்டப்படிப்பையோ, வேறு உயர்கல்வி வாய்ப்புகளையோ நாடுகிறார்கள்.

இதற்கெனப் பெருந்தொகைப் பணத்தினைச் செலவளிக்க முடியாத சில வசதி குறைந்த மாணவர்கள், மேற்கொண்டு கல்வியைத் தொடரமுடியாமல் இடை நடுவில் கல்வியைக் கைவிட்டு வேலை வாய்ப்புகளுக்காக, தமது குறித்த தகைமைகளுடன் காத்திருக்கிறார்கள்.


**வேலை வாய்ப்புகள்:**

இடைநிலைக் கல்வியை முடித்துக்கொண்டு தொழிலுக்காகக் காத்திருக்கும் இத்தகையவர்களுக்கென்றே சில வேலைவாய்ப்புகளும் இருக்கத்தான் செய்கின்றன.

தேசிய/ மாகாண மட்டத்திலான பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை, கிராம உத்தியோகத்தர், பொது சுகாதார பாரிசோதகர், கூட்டுறவுப் பரிசோதகர், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர், தாதியர் சேவை, குடும்பநல உத்தியோகத்தர், வங்கி உதவியாளர்கள், ஆசிரிய சேவை எனப் பல இருந்தபோது, இன்றைய நிலையில் ஆசிரிய சேவை பெரும்பாலும் பட்டதாரிகளுக்கென்றும், கல்வியியற் கல்லூரியை முடித்துக்கொண்டு வெளியேறுபவர்களுகென்றும் மட்டுப்படுத்தப்பட்டு விடுகிறது.

மேற்காணும் வேலைவாய்ப்புகளுக் கான ஆகக் குறைந்த தகைமையாகக் கோரப்படுவது ஜி.சி.ஈ. (உ/த) பரீட்சைப் பெறுபேறே முன்னைய காலங்களில் ஜி.சி.ஈ (ச/த) பெறுபேறு இவற்றிற்குப் போதுமானதாயிருந்தமை கவனத்திற் கொள்ளத்தக்கது. அதேவேளை உயர்கல்வித் தராதரங்கள் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படுமென வர்த்தமானி அறிவித்தல் வெளிப்படுத்தப்படுகிறது.

# மறைத்து வைத்துப் பார்க்கும் மர்மம் என்ன




அப்போது நேரம் பிற்பகல் 3 மணியிருக்கும் யாழ். நகரிலிருந்து பஸ்ஸில் ஏறி வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்தேன்.

பாடசாலைகள் முடிவடையும் நேரம் அதுவானதால் பஸ்ஸில் மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்பட்டிருந்தன.

பஸ்ஸுக்குள் ஏறிய நான் சற்று முற்றும் கண்களைப் பரவிப்பார்த்தேன். பின் ஆசனத்தில் பாடசாலைச் சீருடையுடன் மாணவியொருவர் கொழும்பிலிருந்து வெளிவருகின்ற பொது அறிவுகளைத் தாங்கிய மாணவர்களுக்கான பிரபலமான வாரப்பத்திரிகையினை ஆழமாக வாசித்து கொண்டிருந்தார்.

நான் நினைக்கிறேன் இம் முறை ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற வயதினை உடைய மாணவி என்று.

அந்த மாணவி பத்திரிகையினை கருத்தூன்றி வாசித்துக் கொண்டிருந்த விதம் எனக்குள் ஒருவித ஆனந்தத்தை ஊட்டியது 'அடடா.... வானொலி, தொலைக்காட்சி என்கின்ற சாதனங்கள் நமக்குள் ஊடுருவியதால் எமது மாணவர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கம் அருகி வருகின்றது என்ற அபிப்பிராயம் உள்ள போதும், அறிவுசார் பத்திரிகையொன்றினை மாணவியொருவர் வாசித்துக் கொண்டிருந்த அந்த விதம் என்னை மீண்டும் மீண்டும் மெய் சிலிர்க்க வைத்தது.

'அண்ணை பின்னுக்குப்போ.... பின்னுக்குப்போ... என்றவாறு பஸ் நடத்துநர் என்னையொருவாறு பஸ்ஸின் பின்னுக்குத் தள்ளிக்கொண்டு போய்விட்டார்.''

ஒருவாறு அந்த வாரப்பத்திரிகை வாசிக்கும் மாணவிக்கு அருகில் சென்றுவிட்டேன்.

அந்த மாணவி வாசிக்கும் பத்திரிகையினை மேலேழுந்த வாரியாக கண்காணித்தேன். அப்போது அந்த மாணவி வாசிக்கும் பத்திரிகைக்குள் இன்னொரு பத்திரிகை ஒளிந்திருப்பதை அவதானித்த நான் இன்னும் ஆழமாக எட்டிப்பார்த்த எனக்குத் தூக்கி வாரிப்போட்டது.

தூக்கி வாரிப்போடுமளவுக்கு அந்த வாரப்பத்திரிகைக்குள் என்ன இருந்தது என்று தானே நீங்கள் சிந்திக்கிறீர்கள்.


அறிவு சார் பத்திரிகையின் உள்ளேஒரு 'மஞ்சள் பத்திரிகை' அதைத்தான் அந்த மாணவி இதுவரை நேரமும் ஆழமாக வாசித்துக் கொண்டிருந்திருக்கிறாள். நீண்ட காலமாக யாழ்ப்பாணத்தில் விற்பனைக்குத் தடை செய்யப்பட்டிருந்த- கொழும்பிலிருந்து வெளிவருகின்ற- முற்றிலும் ஆபாசத் தகவல்களைத் தாங்கிய மஞ்சள் பத்திரிகைகள் மீண்டும் யாழ்.நகரின் பிரபல புத்தகசாலைகளில் விற்பனைக்கு வந்துவிட்டன.

அத்தகைய பத்திரிகைகளை இளசுகள் அதிலும் பாடசாலை மாணவர்கள் முண்டியடித்து வாங்கிப் படிக்கத் தொடங்கிவிட்டார்கள் என்று காதோடு காது வைத்தாற்போல பலர் சொல்லிக்கொள்கிறார்கள்.

இத்தகைய ஆபாசம் நிறைந்த பத்திரிகைகளை இளம் சமூகம் வாசிப்பதினால் சமூகச் சீரழிவுகளுக்கு தூபமிடப்படுகின்றன என்பதை சமூகப்பொறுப்புணர்வுள்ள எவரும் மறந்து விடக் கூடாது.

எனவே பாலியல் துஷ்பிரயோகம், கலாசார சீரழிவுகள் என்பவற்றுக்கு உந்துதலாக இருக்கின்ற விடயங்களைக் களைய அனைவரும் முன்வர வேண்டும். இல்லையேல் இளம் சமூகம் வழிதடுமாறி நிலை தடுமாறிச் செல்வதைத் தடுக்க முடியாது. ஆதலால் இன்றே விழித்தெழுவோம்! சமூகச் சீரழிவுக்கான காரணிகளை துடைத்தெறிவோம்.

கவிநேசன்




## "மாவீரன்" நெப்போலியன்

நாம் அனைவரும் அறிந்த பெயர்தான் ''நெப்போலியன்'' என்பது. அந்த நெப்போலியன்தான் வீரத்திற்குப் பெயர் பெற்றவன். எதற்கும் அஞ்சா நெஞ்சுடையானாக விளங்கினான். பல நாடுகளுடன் போரிட்டு வெற்றிமேல் வெற்றிகள் குவித்தான். அவ்வாறான ''மாவீரன்'' பற்றி சிறிது நோக்குவோம்.

நெப்போலியன் ஐரோப்பிய நாடுகளையெல்லாம் தனது ஆளுகைக்கு உட்படுத்த விரும்பினான். இவன் பிரான்ஸைத் தளமாகக்கொண்டு ஆட்சி செய்ததோடு இத்தாலி, ஒஸ்திரியா, சிபே, போத்துக்கல் போன்ற நாடுகளையும் கைப்பற்றி ஆட்சி செய்தான். எனினும் எந்த நாடும் இவனிடம் நிலையாக இருக்கவில்லை. போரிலே நெப்போலியனால் கைப்பற்றப்பட்ட நாடுகள் மீள எதிரிகளால் கைப்பற்றப்படுவதும் மீண்டும் நெப்போலியன் அடிமைப்படுத்துவதும் இடம்பெற்றது. இவ்வாறான வேளையிலும் நெப்போலியன் பிரான்ஸை சிறந்த இராச்சியமாக உறுதிப்படுத்திக் கொண்டான்.

நெப்போலியனது வாழ்வில் சில சம்பவங்களை மீட்டுப் பார்க்குமிடத்து அவனது வீரம், ஆளுமை என்பன வெளிப்படுகின்றன. வீரத்திற்கும் திறமைக்கும் இலக்கணமாக நெப்போலியன் முதலில் இத்தாலி மீது படையெடுத்து எதிரிகளை மண்டியிடச் செய்தான். பின்னர் ஒசித்ரியாவையும் வீழ்த்தினான். பின்னர் இங்கிலாந்தை வீழ்த்துவதற்குப் பல்லாயிரம் வீரர்களுடன் 400 கடற்படைக் கப்பல்களில் புறப்பட்டான். எனினும் இப்படையெடுப்பு கடினமானதாக மாறவே உடனே பிரான்ஸிற்குத் திரும்பினான். தன்னை எதிர்த்த ரஷ்யாவை படுதோல்வியடையச் செய்தான். அத்தோடு ஒல்லாந்து நாட்டையும் கைப்பற்றி அங்கு தன் சகோதரனை அரசனாக்கினான். இவ்வாறான ஐரோப்பிய நாடுகளை எல்லாம் அச்சுறுத்தி ஆட்டிப்படைத்தான். நெப்போலியனது வரலாற்றில் முடியாது என்ற வார்த்தைக்கே இடமில்லை என்று கூறுவார்கள். இதற்குக் காரணம் அவனது மன உறுதியும், தளராத முயற்சியும் ஆகும். பிரான்ஸின் ''சக்கரவர்த்தியாக'' விளங்கிய நெப்போலியன் இத்தாலியில் பிறந்தவன் என்பது குறிப்பிடத்தக்கது. பிரான்ஸில் வந்து குடியேறி இராணுவத்தில் இணைந்து தனது அபாரதிறமையால் பதவி உயர்வுகள் பெற்று ''பிரிகேடியர் ஜெனரல்'' ஆக உயர்ந்து தன் முயற்சியால் பிரான்ஸின் அரசனாக மாறினான். 1769இல் பிறந்து பின்பு பிரான்ஸை ஆட்சி செய்த ''மாவீரன் நெப்போலியன்'' 1815ஆம் ஆண்டில் ''எலோன்'' தீவுக்கு சிறைக்கைதியாக அனுப்பப்பட்டான். இவ்வாறு நெப்போலியனின் அதிகார வாழ்க்கை அஸ்தமனமாகியது.

-க.மயூரன்- மாதகல் வடக்கு,மாதகல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தட்டிப் பறித்தலும், பின் விட்டு விலகலும்:**

எனவே, போட்டிப்பரீட்சை என்று வரும்போது, குறைந்த தகைமையுடைய இடைநிலைக் கல்வியாளர்களுடன் உயர்கல்வித் தகைமையுடையோரும் கலந்து கொள்வது தவிர்க்க முடியாதது.

போட்டிப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகள் பெறுவதன் அடிப்படையிலேயே நேர்முகத் தேர்வுக்கான அழைப்புக் கடிதங்கள் அனுப்பப் படுகின்றன.

இச் சந்தர்ப்பங்களில் பட்டப்படிப்பை மேற்கொள்வோரும், அதற்காகக் காத்திருப்போரும் கூட நேர்முகத் தேர்வுக்குத் தோற்றுகிறார்கள். இவர்களுள் பட்டதாரிகளும் அடங்குகிறார்கள். நேர்முகத்தேர்வை நடத்தும் அதிகாரிகள் ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், உயர் கல்வித் தகைமையுடையோரை இனங்கண்டு கொள்வதுடன், அத்தகையோருக்கு வேறு தொழில்வாய்ப்புகள் இருப்பதை நினைவூட்டி விசாரிக்கவும் செய்கிறார்கள். இருந்த போது அவர்களுக்கும் வேலைவாய்வாய்ப்பு வழங்கவும் செய்கிறார்கள்.

எனினும் நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொண்ட இவர்களில் சிலர், நேர்முகப்பரீட்சை அனுபவத்தைப் பெற்றுக் கொள்வதற்காகத் தோற்றியவர்களாகவே இருக்கிறார்கள்.

இத்தகையோர் இந் நியமனங்களை ஏற்றுக் கொள்வதற்குப் பதிலாக, நிராகரிப்பவர்களாகவே காணப் படுகிறார்கள். வேறு சிலர் நியமனங்களைப் பெற்றுக் கொண்டாலும், எத் தகைய காரணங்களாலோ விரைவில் அவற்றை உதறிவிட்டுச் சென்று விடுகிறார்கள்.

(உ+ம்)

அ. வெளிநாட்டுத் திருமணங்கள்.

ஆ. வேறு உயர் வேலைவாய்ப்புகள்.

இ. தாம் எதிர்பார்த்த வேலை வாய்ப்புகள்.

இவ்வாறாக தமக்குக் கீழ் நிலையிலுள்ள படித்தவர்களின் வேலை வாய்ப்புகளான சந்தர்ப்பங்களைத் தட்டிப் பறித்துக் கொள்வது மட்டுமன்றி, விட்டு விலகியும் செல்வதனால் பலருடைய வேலை வாய்ப்புகளை இல்லாதொழித்து விடுகிறார்கள்.

ஆனால், இப்படி விலகிச் செல்பவர்களுக்குப் பதிலாகப் புதிய நியமனங்கள் உடன் மேற்கொள்ளப்படுவதில்லை. நியமனங்களுக்கான சம்பளங்கள் அல்லது வேதனங்கள் வழங்கப்படுவதற்குத் திறைசேரியும் மட்டுப்படுத்தலை மேற்கொள்வதும் இதற்கொரு பிரதான காரணமாகும்.

**விட்டுக் கொடுத்தல் மனப்பான்மை**

வேலையற்ற பட்டதாரிகள் தமக்குள் சங்கம் அமைத்துப் போராடுகிறார்கள். பட்டதாரிகளுக்கென்றே சில வேலை வாய்ப்புகளும் இருக்கவே செய்கின்றன.

எனவே, விட்டுக் கொடுத்தல் மனப்பான்மை படித்தவர்களிடம்- குறிப்பாகப் பட்டதாரிகளிடம் இருந்தாக வேண்டும்.

நேர்முகப் பரீட்சைகளை நடத்தும் அதிகாரிகள், சம்பந்தப்பட்ட வேலை வாய்ப்பிற்கென கோரப்படும் குறைந்த தகைமையுடையோருக்கு அதிக முன்னுரிமையளிக்க முற்படுவோராயின், படித்தவர்கள் அனைவருக்கும் வேலைவாய்ப்பு வழங்கும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

இவ்விடயத்தை இனி வருங்காலங்களிலாவது அதிகாரிகள் தமது கவனத்திற்கெடுப்பார்களாயின், அது பலருக்குப் பயனுடைத்தாகுமென நிறைவடைய்க் கூடுமல்லவா-?

வீக்கேயெம்.



# ும், விட்டு விலகலும்




# அன்பைப்பேசும் திருக்குறள்

'வாரவசந்தம்' பகுதிக்குப் பொருத்தமான படைப்புக்களை வாசகர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம். தரமான ஆக்கங்கள் வாரவசந்தத்தில் இடம்பெறும்.



க. இலக்கியா

திரு+குறள்= திருக்குறள். குறள் என்பது இரண்டு அடிகளால் ஆன வெண்பா. திரு என்பது சிறப்பு அடைமொழி. இதனை இயற்றியவர் திருவள்ளுவர். இது அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்டுள்ளது. அறத்துப்பாலில் 38 அதிகாரங்களும், பொருட்பாலில் 70 அதிகாரங்களும், காமத்துப்பாலில் 25 அதிகாரங்களும் மொத்தம் 133 அதிகாரங்கள் உள்ளன.

மதம், சாதி, மொழி, இனம், நாடு முதலான வேறுபாடின்றி உலக மக்கள் அனைவருக்கும் பொதுவானது இந்நூல். உலக நீதி நூல்களுள் தலை சிறந்த இந்நூலை உலக மொழிகள் பலவற்றில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

''சுருங்கிய சொல்லால் விரிந்த பொருளை விளக்குவதில் வல்லவரான வள்ளுவரை பாரதியார் ''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு'' என்று வள்ளுவரைப் புகழ்ந்து தள்ளுகிறார். இப்படியான புகழைத் தன்னகத்தே கொண்டுள்ள வள்ளுவரின் நூலில் அறம் வேண்டுமோ, அரசியல் வேண்டுமோ, அன்பு வேண்டுமோ எது வேண்டினாலும் கற்றுணர்ந்து கொள்ளலாம்.

கருத்துச் செறிவும், கற்பனைச் செறிவும் கொண்ட திருக்குறளிலே இலக்கிய நயமும் இதமாக அமைந்திருப்பது இதயத்தை மகிழ்விக்கிறது. எனவே அறத்துப்பாலில் அன்புடமை பற்றிப் பார்ப்போம். அன்பு பற்றி பலரால் பலவாறாகப் பேசப்படும். அன்பு தான் வாழ்க்கையின் உச்சம். அன்பு என்ற சொல்லுக்கே இடம் இல்லாமையால் தான் இன்று இந்த உலகம் இரத்த வெள்ளத்தில் மிதந்து கொண்டிருக்கிறது. அன்பு கெட்ட இந்த உலகில் வள்ளுவர் அன்பைப் பற்றி எப்படிப் போற்றியுள்ளார். பூஜிக்கப்பட வேண்டிய அன்பின் மகத்துவம்தான் என்னே. எனவே இவ் அன்பு பற்றி வள்ளுவர்

''அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ் ஆர்வலர் புண்கண்நீர் பூசல் தரும்''

என்று இரண்டு அடிகளிலே அழகாக விரித்துக் கூறியுள்ளார். ''அன்பிற்கும் அடைக்கும் தாள் உண்டோ'' அன்பை அடைத்துப் பூட்டி வைக்க முடியுமா? விரும்பியவர்கள் துன்பப்படும்போது எம் கண்களில் இருந்து கண்ணீர் வடிந்து அதை மற்றவர்களுக்குக் காட்டிக் கொடுத்துவிடும். உயிரும், உடலும் இணைந்த சேர்க்கை அன்போடு கூடி வாழ்வதற்கே என்பார்கள். அன்புடையவராக இருந்தால் பகையின்றி எவரையும் நண்பராகப் பெற்றுத் திகழும் நலத்தை நாடிச் செல்லலாம் என்றார்.ஒருவரின் நெஞ்சில் கொண்ட அன்பின் பயனாகத்தான் அவர் உலகத்தில் இன்பமும் மகிழ்சியும் பெற்று வாழ்கிற என்றார் வள்ளுவர். இதனை ''அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையத்து இன்புறார் எய்துஞ் சிறப்பு'' என்றார்.

அன்பின் பொருள் பற்றி உணராதவர், தெரியாதவர்கள் நன்மையான செயலுக்கு மட்டும் தான் அன்பின் துணை உண்டு என்பார்கள். ஆனாலும் ஒரு சிறிய துன்பத்திற்குக்கூட அன்பே துணை என்பதே உண்மையும் சத்தியமும். அன்பில்லாமல் வாழ்வதால் நன்மை ஏதும் இல்லை. நெஞ்சில் அன்பு கொண்ட ஈரமின்றி உயிரோடு வாழுவதால் பலன்தான் என்ன? அப்படி வாழ்ந்தால் பாலைவனத்திடையே பட்டமரம் துளிர்ந்தது போலாகுமாம் என்றார் தெய்வப்புலவர். இதயத்தில் அன்பில்லாது வாழ்பவர் எல்லாம் தமக்கே என்று வாழுகின்ற தனியுடைமைவாதிகளை அன்பு இல்லாதவனை, அன்பு செய்யாதவரை நீதி நேராகச் செய்யும்.

''புறத்துறம் பெல்லாம் எவன் செய்யும் யாக்கை அகத்துறுப்பு அன்பிலவர்க்கு''

உள்ளத்துள் அன்பில்லாமல் வெளித்தோற்றத்தில் நிறைந்து பகட்டாகவும், மிடுக்காகவும் இருப்பதால் பயன் என்ன? என்றார். பிறருக்கு அதனால் ஏதுதான் நன்மை. அன்பு செய்து மகிழ்வோடும், உள்ளன்போடும் வாழ்வதே, நாம் உயிரோடு இருக்கிறோம் என்பதற்குப் பொருள். அதில்லாத வாழ்க்கை நடைபிணம்தான். என்பு தோல் போர்த்திருந்தும் அன்பாகிய உயிர் இன்மை என்றார் வள்ளுவர். அன்பே சிவம் அன்பே துணை.

# வாரவசந்தமே நீ வரவேண்டும்

*வானம்பார்த்த பூமிக்கு மழைவேண்டும்*
*மயிலாட கார்மேகம் வரவேண்டும்*
*கானம்பாடும் குயில்பாட நல்லவசந்த*
*காலம்வர வேண்டும் எழுதுகோள்*
*பாணம்விடும் உதயனில் வாரவசந்தம்*
*வடக்கின் வசந்தமொடு சேர்ந்து வரும்*
*யாழ்ப்பாண எழுத்தாளர், வாசகர்கள் மிக*
*மகிழ வாரவசந்தமே நீ வரவேண்டும்*

*ஆவலோடு வாசகர் படித்து மகிழ*
*அனைத்து அம்சங்களும் கொண்டு*
*பாவலர்கள் பாவெழுத படைப்பாளர்*
*பல கதைகள், கட்டுரைகள் படைக்க*
*பாவையரும் மாணவரும் படித்துமகிழ*
*பலரும் போற்ற இலக்கிய*
*சேவைசெய்ய எம்காவலன் உதயனின்*
*சிறந்த வாரவசந்தமே நீ வரவேண்டும்.*

பிறை, மயிலணி.

## உங்களுக்காக...

* அன்பு மட்டுமே அனைத்தையும் வெல்லும் ஆயுதம்.
* அன்பு வழி செல்வோருக்கு வெற்றி நிச்சயம்.
* கிளைக்காமல் மரமும் உழைக்காமல் உயர்வும் கிடையாது.
* கீழ்ப்படிதல் என்பது மேன்மைக்கு உணர்த்தும் மேற்படி.
* உண்மையே உயர்வின் ஆணிவேர்.
* காந்தம் இரும்பையும் அன்பு ஆண்டவனையும் ஈர்க்கும்.
* கடவுளின் ஆசி வேண்டின் பெற்றோரை நேசி.
* பூவுக்கு உயர்வு நறுமணம் மனிதனுக்கு உயர்வு நற்குணம்.

ச.டிலானி, கலை 2011,
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றோட்டறிக் கழகத்தின் ஆளுநர் றோட்டேறியன் வி.டி.ஆர்.ராஜன் யாழ்ப்பாணத்திற்கு அண்மையில் வருகை தந்தபோது வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற வரவேற்பு நிகழ்வில் கண்டி மாவட்ட றோட்டறிக் கழகத்தைச் சேர்ந்த ஆய்ஷா இம்புறுடெனியா விஜயரத்ன வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி பொன்னம்பலத்திடம் ஒரு தொகுதி நூல்களைக் கையளிப்பதைப் படத்தில் காணலாம். (9)

# வரி விதிப்பு கட்டமைப்பை முற்று முழுதாக திருத்தி அமைக்க அரசாங்கம் ஆலோசனை

## திறைசேரி செயலாளர் டாக்டர் ஜெயசுந்தர தெரிவிப்பு

கொழும்பு- நவ.7

போர் முடிவுற்றுள்ள நிலையில் பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்கும் விதத்தில் நாட்டின் வரிவிதிப்பு கட்டமைப்பை முற்று முழுதாகத் திருத்தியமைக்க அரசு ஆலோசித்து வருகின்றது.

இத் தகவலை திறசேரியின் செயலாளர் டாக்டர் பி.பி. ஜயசுந்தர தெரிவித்தார்.

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடுத்த அறிவுறுத்தலின் பேரில் வரி விதிப்பு முறையானது முற்றும் முழுதாக திருத்தியமைக்கப்படவிருக்கிறது என்று டாக்டர் ஜயசுந்தர கூறினார்.

போர்க்காலத்தில் பல்வேறு கஷ்டங்களை தம் தோள்களில் சுமந்து சமாளித்துக் கொண்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் விதத்தில் அதிகபட்சமான சலுகைகளை அவர்களுக்கு வழங்குவதைக் குறிக்கோளாக கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று அவர் தெரிவித்தார்.

இறக்குமதி செய்யப்படும் பொருள்களான பருப்பு, சீனி, வெங்காயம் போன்ற பொருள்கள் மீது விதிக்கப்படும் வரிகளைக் குறைப்பதற்கான வழிமுறைகள் ஆராயப்பட்டு வருகின்றன. இதன் மூலம் நுகர்வோருக்கு அதிக நிவாரணம் வழங்க முடியும் என்றார் அவர்.

உள்ளூரில் தயாரிக்கப்படும் பொருள்களுக்கு விதிக்கப்படும் வரிகளைக் குறைப்பதற்கான வழிகளும் ஆராயப்படுகின்றன- என்றார்.

இறக்குமதி செய்யப்படும் வாகனங்கள் மீதான வரிகளும் குறைக்கப்படலாம் என்று அவர் மேலும் கூறினார்.

(ப)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்


இணுவில் மத்திய கல்லூரியின் அதிபர்



உயர்திரு.

**அருளானந்தம் சதானந்தன்**

(B.Com, Dip. in Edu, SLPS 2.I)

அவர்கள் அதிபர் சேவை தரம் 2- I இற்கு பதவி உயர்வு பெற்றுள்ளார். அவர் தம் சேவையில் மேலும் பல உயர்வுகள் பெற பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி சாரா ஊழியர்கள்.

**யா/இணுவில் மத்திய கல்லூரி.**

(90714)


## சுழிபுரம் பகுதியில் புல்லுக்கு கிராக்கி

சுழிபுரம்,நவ.7

சுழிபுரம் காட்டு வயலில் நெற்பயிர்களுடன் வளருகின்ற புல்லுக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.


இந்தப் பகுதியில் வைக்கோலுக்கு தட்டுப்பாடாகவுள்ள போதும் புல் கால்நடைகளுக்கு உணவாகப் பயன்படுகின்றது.

கால்நடைகளை வளர்ப்போர் இந்தப் புல்களை விலைக்கு வாங்கிச் செல்வதாக வயல் சொந்தக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

( 204-28)

# புத்தகசாலை

## ஆங்கிலம் கற்கும் கற்பிக்கும் அனைவருக்கும் பயன்படும் நூல்




ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் ஆங்கிலத்தை ஆர்வத்துடன் கற்றுக் கொள்ள விரும்பும் மாணவர்களுக்கும் இலகுவாகப் பயன்படக்கூடிய நூல் ஒன்றை ஆங்கிலமொழி ஆசிரியரான ந. கந்தையா என்பவர் எழுதி வெளியிட்டிருக்கின்றார்.

**'கொன்சைஸ் இங்லிஷ் கிராமர் அன் வொக்க பியுலறி' என்பது அந்நூலின் பெயர்**

ஆங்கிலமொழி இலக்கணம் என்ற வகையில் பலர் அவ்வப்போது வியாபார நோக்கில் நூல்களை எழுதி வெளியிடுவதைப் பார்க்கின்றோம். வேற்றுமொழிகளைக் குறிப்பாக உலக மொழியான ஆங்கிலத்தை கற்றுக்கொள்ளும் ஆர்வம் நம் இளைஞர்களுக்கு எப்போதையும் விட இப்போது ஆர்வம் கூடியிருக்கிறது. எனவே அவர்களுக்கு முறையான இலக்கண அறிவைப்பு கட்டுவதும் போதிப்பதும் அவசியம். அதற்கேற்றாற் போல் இலகுவாக அம்மொழியை மாணவர்கள் கிரகித்துக் கொள்வதற்கு இலகுவான இலக்கணநூல்களும் அவசியம்.

அந்தவகையில் ஆசிரியர் கந்தையாவின் நூல் பயன் தருவதாய் அமையும் என்று கருதலாம். எல்லா வகுப்புகளுக்கும் நிலைகளுக்கும் என்று கருதலாம். எல்லா வகுப்புகளுக்கும் நிலைகளுக்கும் பொருந்தக்கூடியதாய் இந்நூல் எழுதப்பட்டிருப்பதாக ஆசிரியர் கூறுகிறார். என்றாலும் ஆங்கில ஆசிரியர்களுக்கும் மேல் வகுப்பு மாணவர்களுக்கும் இந்நூல் அதிக பயன்தரும் என்று கூறலாம். ஆசிரியரின் முயற்சியைப் பாராட்டும் அதேவேளை சகல தரத்தினருக்கும் இலகுவாகப் பயன்படக்கூடியதாக தனித்தனியே நிலைகளைப்பிரித்து பலநூல்களை இவ்வாசிரியர் எழுதினால் மாணவர்கள் இன்னும் பயன்பெறுவார்கள் என்று கருதுகிறோம்.


# வெற்றிடம் - கணக்காளர், உதவிக்கணக்காளர் (Accountant)

**யாழ். மீன்பிடி வலை உருவாக்கம்**
நெவாட் அமையம்,
647, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.

யாழ்.குருநகர் 647, கடற்கரை வீதியில் அமையும் மீன்பிடி வலை உருவாக்கத்தில் கணக்காளராகப் பணிபுரிவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பின்வரும் தகைமை உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.

★ வயதெல்லை :- 23-45 வயதிற்கு இடைப்பட்டவர்கள்
★ கல்வித்தகைமை :- உயர் தேசிய கணக்கியல் சான்று (Higher National Diploma in Accountancy - HNDA)
★ கணக்கியல்/ முகாமைத்துவம்சார் வேறு தகைமைகள்
★ குறைந்தது 5 வருட இத்துறையில் அனுபவம்
★ கடற்றொழில் துறையில் நிறுவன அனுபவங்கள் (அனுகூலம்)

மேற்கூறப்பட்ட அனைத்துச் சான்றிதழ்களதும் போட்டோபிரதிகள், தங்களது முறையான முகவரி/தொலைபேசி எண்களுடன் நவம்பர் 14 ஆம் திகதி சனிக்கிழமைக்கு (14.11.2009) முன்னதாக கீழ்க்காணும் முகவரிக்குக் கிடைக்குமாறு அனுப்பிவைக்கவும். முடிவுத்திகதியின் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

இயக்குநர்,
கரித்தாஸ் - கியூடெக்,
14, மத்தியூஸ் தெரு,
தியோகு வீதி,
யாழ்ப்பாணம்.
மின் அஞ்சல் : hudec@sltnet.lk

(சி/562153)


# பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,நவ.7

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை முற்பகல் 10.05 மணிக்குப் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (204)


"ஜெய் குரு தேவ்"



# வாழும் கலைப் பயிற்சி
## ஒரு வாரத்தில் மூச்சினால் நிகழும் அற்புதங்கள்

உலகின் பலகோடி மக்களின் வாழ்க்கையில் பல அற்புதங்களை நிகழ்த்திய வாழும் கலைப்பயிற்சி உங்கள் ஊரிலும்

* பிராணாயாமம்
* தியானம்
* ஞானம்
* சிறப்பான சுதர்சனக்கிரியா

இவை யாவும் உள்ளடங்கியுள்ளது. இந்த அரிய வாய்ப்பினை அனைவரும் பயன்படுத்தி வாழ்க்கையில் எல்லா வளமும், நலமும்பெற அன்போடு அழைப்பது

**வாழும் கலைக் குடும்பம், யாழ்ப்பாணம்.**

**இலவச அறிமுக உரை**

இடம்: நெல்லியடி தடங்கன் முருகன் கோயில் மண்டபம்
காலம்: 09.11.2009 திங்கட்கிழமை
நேரம்: பிற்பகல் 4 மணி

குறிப்பு:

1. ஏற்கனவே வடமராட்சியில் பயிற்சி பெற்றவர்கள் இன்று (07.11.2009) சனிக்கிழமை காலை 7 மணிக்கு இதே மண்டபத்திற்கு வரவும்.
2. ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் பயிற்சி எடுத்தவர்கள் நாளை (08.11.2009) ஞாயிற்றுக் கிழமை நல்லூர் மணி மண்டபத்திற்கு காலை 7 மணிக்கு வரவும்.

மேலதிக விவரங்களுக்கு: 077 4939793, 077 3787406, 077 1777998

**வாழும் கலை நிறுவனம், யாழ்ப்பாணம்.**

(90708)


# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



**பிலேந்திரன் ஜேம்ஸ்**

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 18 | 07 |
| 08 | 11 |
| 1936 | 2005 |

ஆண்டுகள் நான்கு ஆனாலும்
உங்கள் நினைவுகள் எம்
நெஞ்சை விட்டு அகலாது
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

கொழும்புத்துறை.

துயருறும்:- மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(90651)

# மரண அறிவித்தல்



## எட்வேட் அமிர்தலிங்கம்

**(வேலணை கிழக்கு, 3ஆம் வட்டாரம்)**

வேலணை கிழக்கு, 3ஆம் வட்டாரம், அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட எட்வேட் அமிர்தலிங்கம் 05.11.2009 வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற எட்வேட் (செல்லையா)- தங்கச்சியம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற திருவிளங்கம்- இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் மனோன்மணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான நல்லையா (ஆசிரியர்), செல்வராசா, குணரட்ணம் மற்றும் சிவமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் உதயகுமார், சசிகுமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும் நாகேஸ்வரி, ஜெசிதா ஆகியோரின் அன்பு மாமனும் நிர்மிதா, அஜந்தன், அட்சயா, அவிநியா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வேலணை இல்லத்தில் நாளை (08.11.2009) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று, பூதவுடல் வேலணை, சாட்டி இந்து மயானத்தில் தனகம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.189, 5ஆம் குறுக்குத் தெரு, கொழும்பு-11.

தகவல்:
அ.சசிகுமார் (மகன்) [illegible]

(சி/562162)

## தேவாரப் பண்ணிசை வகுப்புகள்


யாழ்ப்பாணம் சிவதொண்டன்நிலைய ஆதரவுடன் அகில இலங்கை திருமுறை மன்றத்தினர் இலவச தேவாரப் பண்ணிசை வகுப்புக்களை நடத்தி வருகின்றனர்.

காங்கேசன்துறை வீதி, சிவதொண்டன் நிலைய நூலக மேல் மாடி மண்டபத்தில் சனி, ஞாயிறு தினங்களில் மாலை 5 மணி தொடக்கம் இந்த வகுப்புகள் நடைபெறுகின்றன.

இவ் இலவசப் பயிற்சி வகுப்பில் சிறுவர்கள், பெரியவர்கள், ஆண்கள், பெண்கள் இருபாலாரும் பங்குபற்ற முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(203-10)

# பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
| --- | --- |
| 01 | 29 |
| 04 | 10 |
| 1942 | 1999 |

**அமரர் தம்பிமுத்து சோமசுந்தரம்**

திதி: பஞ்சமி

பாசமாய் இனித்திட்ட பார்வாழ்வு நிலைபொன்று நானிருந்தேன்
பார்த்திருக்க பாதகனும் பாரிவிட்டே உம் உயிரை
பாரச்சுமையாக நித்தமும் நினைக்க வைத்துவிட்டான்
பந்த பாசம் தந்தபாடம் பத்து ஆண்டுகளில் தெரியவந்ததே.
உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டுகிறேன்.

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.

தங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி.

(90715)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மாவட்ட வலம் - பதுளை

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சை, டிசம்பர்-2009
General Certificate of Education (Ord.Level) Examination, December-2009

# English Language - I

**31-T-I**

### Answer all Questions

01. Test:01

Fill in the missing sentences in these conversations, using one item from Box "A" and one from Box "B". The first one has been done for you.

"At a hotel"

1) A: I'd like to pay my bill, please.
   B: Certainly. that's Rs.340 altogether.
2) A: .........................................................................
   B: Yes, Sir. What have you got? Visa? Master card?

"In a shop"

3) A: .........................................................................
   B: They are Rs.65 each.
4) A: .........................................................................
   B: Yes, of course. I'll just write one out for you.

"In a street"

5) A: .........................................................................
   B: No, I am sorry, I can't ...............................................
6) A: .........................................................................
   B: Yes, Here is one just round the corner.

| A | B |
|---|---|
| Could you give me change......... | ......... do these ties cost |
| Could I have.......... | ......... my bill please |
| Do you accept.................. | ......... a receipt please |
| How much................ | ......... credit cards |
| I'd like to pay................. | ......... for this Rs.100 note |
| Is there ......................... | ......... a bank near here |

Test: 02

Find the words in the box which could describe,

1) A flat with one room .................................
2) A house near a busy airport ..............................
3) A room with a lot of things lying on the floor ................................
4) A flat near the shops and schools ..............................
5) A house with very small windows ..............................
6) A house in a street with very little traffic ..............................

**Convenient, dark, noisy, quiet, small, untidy**

Test: 03

Read this passage and say if the statements given below are True or False. Ring round "T" if true, "F" if false. The first one is done for you.

John and the Cherries

One day John went shopping with his mother. Their first call was at the greengrocer's and while his mother was buying some fruit John looked longingly at a box containing lovely red cherries.

"Help yourself to a handful, John,"said the greengrocer, but John did not move. "I am sure you like cherries don't you? asked the puzzled shop keeper, and John nodded his head quickly.Thinking that the boy was too shy to help himself the greengrocer went to the box and gave John a large handful. When they had left the shop. John's mother asked him why he had not taken the cherries when the greengrocer had told him to.

"Well you see.Mummy." replied John "his hand is twice as big as mine."

| | | | |
|---|---|---|---|
| 1) John went shopping with his grandmother | - | T | F |
| 2) Their first call was at the greengrocer's | - | T | F |
| 3) John took handful of cherries from the box | - | T | F |
| 4) John was very shy to take the cherries | - | T | F |
| 5) Greengrocer gave him the cherries | - | T | F |
| 6) John's hands are bigger than greengrocer's | - | T | F |

Test: 04.

Read the text and fill in the blanks with the word chosen from the word bank.

Word Bank

| | | | | |
|---|---|---|---|---|
| School | Values | Play | Game | Sports |
| Members | Control | Team | Spirit | Players |

All the children like to .................. That is, they make a contribution towards the .................... Will there be a game without .............? If you are a member of a ........................... then it is your duty to safeguard the ethics of the game and act with team ............................ while observing the rules of the game. Do you know that the entire team may be disqualified or discredited if one or two ................... break the rules? Shame and discredit would be not only on the errant individual, but on the ............ .................... village or even the country that he or she represented. Nowadays, social ........... are fast deteriorating. Participating in ............. which involves working according to rules should certainly improve this situation as it enables you to .............................. yourself.

Test: 05

Complete the following sentences. Use the appropriate words from the box.

**When, Which, Where, That, Who**

1) This is the house .............my father bought last month.
2) Dunhinda is a beautiful water fall .................. many tourists visit every year.
3) Luxmi is a poor girl, .......................... works hard in her subjects.
4) It was raining heavily.......................... my father returned from his office.
5) English is an interesting subject ........................ many students find it difficult to learn.

Test: 06.

The students of grade 11 have organized a musical show to collect funds to launch a book on "their articles". Write a notice to be put up on the notice board, inviting the students of the school to the musical show. Include the date, place,venue and the details of the musical group.

Test: 07.

Read the paragraph on parrot and write similar paragraphs on the other two birds.

**The parrot**

The parrot is a bird. It has a curved red beak and beautiful green feathers. The parrot eats grains and fruits. It has long feather like a tail. It is small in size and it can fly.

**The King Fisher**

(bird, blue feathers, eat fish, long sharp beak, small, very sharp eyes,can fly)

**Cock**

(bird, colourful feathers, eat grain and worm, domestic bird, big, small, beak,cannot fly)

Test: 08

One of your friends went on a trip to India with his family last month. Write a letter to him/her asking the details about his/ her trip. Use about 50 words.

ஆசிரியர்: P.யோகேஸ்வரன்,
சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலயம்,
பதுளை. தொ.பே.இல: 0776207878

## விவசாயமும் உணவுத் தொழில்நுட்பமும் II

* முதலாம் வினாவிற்கும் வேறு நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

01. விவசாயமும் உணவுத் தொழில் நுட்பவியலும் பாடத்தைக்கற்கும் மாணவர்கள் பாடசாலை மட்டத்தில் கண்காட்சி ஒன்றை வைக்கத் தயாராகின்றனர்.

மாணவர்கள் சிறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு தலைப்புக்கள் முன்கூட்டியே ஆசிரியரால் வழங்கப்பட்டன. வகுப்பறைச்சூழலையே மாணவர்கள் பயன்படுத்தக்கூடியதாக இருந்தது. குறித்த சில குழுக்களுக்கான தலைப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

குழு A - நாற்றுச்சாடிகள்
குழு B - நாற்றுமேடை வகைகள்
குழு C - நாற்றுமேடை கிருமியழித்தல்
குழு D - தாவர பதியமுறை இனப்பெருக்கம்
குழு E - வித்து முளைத்தல் முறைகள்.

01) குழு B இனால் காட்சிபடுத்தக்கூடிய மாதிரி நாற்றுமேடை வகைகள் 2 தருக.
02) நாற்றுமேடை மண்ணைக் கிருமியழிக்க பயன்படுத்தக்கூடிய முறைகள் 2 தருக.
03) நாற்றுச்சாடி வகைகள் 2 தருக.
04) குழு D இனால் காட்சிபடுத்தக்கூடிய இனப்பெருக்க முறைகள் 2 தருக.
05) பதியமுறை இனப்பெருக்கத்தினால் கிடைக்கக்கூடிய அனுகூலங்கள் 2 தருக.
06) ஒட்டுதலின் பிரதான இரு முறைகளும் எவை?
07) இரு பிரதான வித்து முளைத்தல் முறைகளும் எவை?
08) பயிர் நடுகை முறைகள் 2 தருக. படம் மூலம் விளக்குக.
09) வித்துக்களை வரிசையில் நடுகை செய்ய பயன்படும் உபகரணங்கள் 2 தருக.
10) வித்துக்களை வரிசையில் நடுவதனால் கிடைக்கும் நன்மைகள் 2 தருக.

02. பாடசாலைத்தோட்டத்தில் பயிரிடப்பட்டிருந்த மிளகாய், வெண்டி போன்ற பயிர்களின் முதிர் இலைகள் மஞ்சள் நிறமாக மாறி இருந்ததையும் அவற்றின் வளர்ச்சி குன்றுவதனையும் மாணவர்கள் அவதானித்தனர்.

1) a. இக்குறைபாட்டிற்குக் காரணமான மாபோசணை மூலகம் யாதாக இருக்கும்?
   b. இதனை நிவர்த்தி செய்ய மாணவர்கள் மண்ணிற்கு இடக்கூடிய அசேதனப் பசளைகள் 2இன் பெயர் தருக.
2) ஆரம்பப் பண்படுத்தலுடன் இம்மண்ணிற்கு சேர்ந்திருக்கக்கூடிய சேதனப் பசளை வகைகள் 4 ஐப் பெயரிடுக.
3) ''நாம் பயிரிடுவோம் நாட்டை உருவாக்குவோம்'' செயற்றிட்டத்தில் சேதனப் பாவனையை ஊக்குவித்தல் பிரதான ஒரு குறிக்கோளாக உள்ளது. இச்செயற்றிட்டத்தின் வேறு 3 குறிக்கோள்கள் எவை?

03. பயிர்ச்செய்கை பண்ணப்படும் நிலப்பரப்பை அதிகரிப்பதன் மூலமோ அல்லது அலகு நிலப்பரப்பிற்கான விளைச்சலை அதிகரிப்பதன் மூலமாகவோ நம் நாட்டின் விவசாய உற்பத்தியை அதிகரிக்கலாம். இதில் இரண்டாவது முறையே எமது நாட்டிற்கு மிகவும் பொருத்தமாகவுள்ளது. இதற்காக பல பயிர்ச்செய்கை முறைகளும், கோலங்களும் விவசாயிகளால் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

1) a. பயிர்ச்செய்கை கோலம் என்றால் என்ன?
   b. பல்பயிர்ச்செய்கை கோலங்கள் எவை?
2) இடைப்பயிர்ச்செய்கையால் கிடைக்கும் அனுகூலங்கள் 2 தருக.
3) a. ஆளுகை செய்யப்பட்ட இல்லங்கள் 4இன் பெயர் தருக.
   b. மண்ணின்றிய பயிர்ச்செய்கையில் பயன்படுத்தப்படும் போசணை ஊடகங்கள் 2இன் பெயர் தருக.

04. பதுளை ''நாமகன்'' தேசிய பாடசாலையில் சுற்றாடல் தினத்தை ஒட்டி, அப்பகுதி விவசாய விரிவாக்க சேவை உத்தியோகத்தரின் தலைமையில் சிறப்புச் செயற்பாட்டு பட்டறை ஒன்று ''பீடை கட்டுப்பாடும் சூழல் காப்பும்'' எனும் தலைப்பில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அதில் அவர் சூழலுக்குச் சாதகமான பீடைக்கட்டுப்பாட்டு முறைகள் பற்றிய செயன்முறை விளக்கங்களை முன்வைத்தார். விவசாயிகளால் பயன்படுத்தக்கூடிய எளிய பொறிகள் பற்றியும் குறிப்பிட்டார்.

1) a. பூச்சிப்பீடைகளை கட்டுப்படுத்த அவரால் குறிப்பிடப்பட்டிருக்கும் பொறிகள் 2ஐப் பெயரிடுக.
   b. மேற்குறிப்பிட்ட பொறிகளால் அழிக்கப்படக்கூடிய பீடைப் பூச்சிகள் 2 இன் பெயர்களைத் தருக.
2) ஒன்றிணைந்த பீடைக்கட்டுப்பாட்டின் அனுகூலங்கள் 2 தருக.
3) a. குக்குபிற்றேசியே குடும்பப்பயிர்களை அதிகளவில் பாதிப்புறச் செய்யும் பீடைப்பூச்சிகள் 2இன் பெயர் தருக.
   b. இதில் ஒரு பூச்சியின் வாழ்க்கை வட்டத்தை எழுதுக.

வளரும்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 07 . 04 . 1917

மறைவு 19 . 10 . 2008



புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்தி விநாயகர் தேவஸ்தான பரிபாலன சபை முன்னாள் உப தலைவரும் புன்னாலைக்கட்டுவன் நலன்புரிச் சங்கம், கணேச சனசமூக நிலையம் என்பவற்றின் முன்னாள் தலைவரும் புன்னாலைக்கட்டுவன் அரசினர் மத்திய மருந்தக அபிவிருத்திச் சபையின் போசகரும் அகில இலங்கை சமாதான நீதிவானும் சமயப் பெரியாரும் முன்னாள் பிராந்திய பதிவுபெற்ற மருத்துவ உத்தியோகத்தருமாகிய (DRMP) **வைத்திய கலாநிதி**

## அமரர் இளையதம்பி நன்னித்தம்பி (J.P.)

**(Dr.பொன் ரூத்துரை)**

திதி. 7.11.2009,அபரபக்க பஞ்சமி

ஆயாக்கடவையானை அனுதினமும் ஆராதித்துப் போற்றி
ஆயிரம் பிறைகள் கண்டு அவனியில் மேன்மையுற்று
அரனடி சேர்ந்து இன்று ஆண்டு ஒன்று ஆனதே!
மானிலம் தன்னில் என்றும் மாண்புடன் நாங்கள் வாழ
வானிலே இருந்து என்றும் ஆசிகள் நல்குவீரே!
ஊனிலே கலந்த எங்கள் தெய்வமே போற்றுகின்றோம்.

ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்.....

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
புன்னாலைக்கட்டுவன்.

குடும்பத்தினர்.


## கட்டடத் திறப்பு விழா

யாழ்ப்பாணம், நவ.7

சாவகச்சேரி நகரசபையின் மீசாலை பொது நூலகக் கிளைக்கென மீசாலை புதிய புகையிரத நிலையத்திற்கு முன்பாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடம் எதிர்வரும் 12ஆம் திகதி பி.ப.3 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

சபை விசேட ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்வார்.

சபையின் உள்ளூராட்சி வார நிகழ்வுகளும், தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகளும் இடம்பெறும். இவை தொடர்பாக நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு இந்நிகழ்வில் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

(1-207)

## தரம் 5 மாணவர்களுக்குப் பரிசளிப்பு விழா சனியன்று

யாழ்ப்பாணம், நவ.7

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கான பரிசளிப்பு விழா அன்பொளி கல்வியகத்தினரால் நடத்தப்படவுள்ளது.

யாழ்.இந்துக் கல்லூரி வீதியில் அமைந்துள்ள அன்பொளி கல்வியகத்தில் இன்று சனிக்கிழமை பி.ப.2மணிக்கு இந்த நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடத்தின் விவசாய உயிரியல்துறைத் தலைவர் கலாநிதி மிகுந்தன் கலந்துகொள்ளவுள்ளார்.

மாணவர்களுக்கான பரிசில்களை விவசாய இயந்தரவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி துஷியந்தி மிகுந்தன் வழங்குவார். (1-10)


*நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?*

இதோ பாவியுங்கள்

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

## சித்தாரா பொன்னாங்காணித் தைலம்

பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியுடன் சித்தாரா டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரை குறியீடு உள்ளதா என பொதி செய்யப்பட்ட பெட்டியைத் திறந்து சரிபார்த்து வாங்குங்கள்

*Manufactured By:*
**Sithara Products**
*Puttalam, Road, Chilaw.*
*(Reg.No: 6382)AR/PR/No.228*

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்
சிவா நறுமணப்பூங்கா,
இல.288,ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567



## விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு

*அமரர்*

**யோசப் அல்பேட்**

**மண்ணில்: 13.06.1927**
**விண்ணில்: 07.11.2008**



*"ஆண்டவருக்குள் இறப்பவர் பேறு பெற்றோர், ஏனெனில் அவர் செய்த நன்மைகளே அவர்களைப் பின் தொடர்ந்துவரும்".* (தி.வெளி.14:13)

சீவியத்தில் நேசித்தோம் மரணத்தில் மறவோம்.
இறைவனில் இளைப்பாற என்றும் வேண்டுவோம்.

16, புது வீதி,
கொய்யாத்தோட்டம். (சி/562126)

பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**



எம் இதயம் நிறைந்த நாள்:
1988.09.22

எம் இதயம் உறைந்த நாள்:
2008.10.19

# எங்கள் நெஞ்சுருகும் முதலாம் ஆண்டு நினைவு தினம்

## செல்வி கீர்த்திகா புலேந்திரன்

திதி: பஞ்சமி



### மறைந்த கீர்த்திகாவுக்கு அன்புள்ளங்கள் அனுப்பும் திருமுகம்

அன்புக்கினியாளே கீர்த்திகா! நீ மறைந்து ஆண்டொன்றாய் விட்டதம்மா
என்ன இருந்தென்ன நீயில்லா வாழ்வுமொரு வாழ்வா
நின் நினைவு எம்மனதில் நிலைத்திட்டு நிழலாடுதே
கன்னலென இனிக்குதம்மா இளமைக் காலமதை நினைக்கையிலே
மன்னியவுலகில் வாழ எங்குலமதில் தோன்றினாயே
மன்றாடும் பரமன் ஏன்தான் வேளையோடு அழைத்தான்?
துன்பமே பிறப்பென்று எண்ணித்தான் அணைத்தானோ?
நன்றே வாழ்ந்திடுவாய் எம் குலத்தின் காவியமே

எங்கள் குடும்பத்தில் பூத்த முதல் மலரே கீர்த்திகாவே!
உங்கள் பூமுகம் காணாமல் ஏங்கித் தவிக்கின்றோம், துடிக்கின்றோம்
ஆண்டு ஒன்று கரைந்தாலும் காயவில்லை எம் விழிகள்
தேற்றிடுவாய் அம்மா! எம்மைக் கனவில் வந்து என்றாலும்

கனிவான உன்பூமுகமும் கண் கொள்ளாப் புன்னகையும்
இனிய உன் வார்த்தைகளும் இன்றெங்கே மறைந்ததம்மா
பலகோடி இன்பங்கள் இருந்தென்ன! பலநூறு உறவுகள் இருந்தென்ன
மகளே! நீ பிரிந்த இடைவெளியை யார்தான் நிரப்புவரோ!


நித்தமும் தவிக்கிறோம் நின் நினைவுகளில் நாம் நின்று!
ஆற்றிடுவாய், தேற்றிடுவாய் நீ எம்மை ஆண்டவனுடன் கூடநின்று
தாயே, மகளே துதிக்கின்றோம் நாம் தினமும் உனதாத்ம சாந்திக்காய்
இறைவா! நீ தந்திடுவாய் எம் மலரின் ஆத்ம சாந்தியையே.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

வைரவர் கோயிலடி,
பத்தமேனி,
அச்சுவேலி.

நினைவுகளுடன் துடிதுடிக்கும் : **இரத்த உறவுகள்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கொமர்ஷல் வங்கியின் நெல்லியடிக் கிளையினர் வதிரி பரமானந்தா ஆச்சிரமத்திற்கு ஓட்டோ ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். வங்கியின் முகாமையாளர் எஸ்.கே.குணசிங்கம் ஓட்டோவுக்கான ஆவணத்தை ஆச்சிரம நிர்வாகத்தினரிடம் கையளிப்பதையும், ஓட்டோ அன்பளிப்புச் செய்தவர்களுடன் ஆச்சிரமச் சிறுவர், முதியோர் மற்றும் அங்கத்தவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: சுந்தா)

# விவசாயிகளுக்குத் தேவையான மாட்டெருவை இங்கேயே பெறக்கூடிய வகையில் ஏற்பாடு

## கட்டாக்காலிகளைப் பட்டியில் அடைக்க நடவடிக்கை

நல்லூர்,நவ.7

விவசாயிகள் தமக்குத் தேவையான மாட்டெருவை இங்கேயே பெறக்கூடியதாகத் தீவப்பகுதி, தென்மராட்சி, வடமராட்சி, அரியாலைப் பகுதிகளில் கட்டாக்காலிகளாகத் திரியும் மாடுகளை உள்ளடக்கிய மாட்டுத் தொழுவங்களை (பட்டிகள்) அமைப்பது குறித்து ஆலோசிக்கப்படும் என சமூகசேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

மாட்டெருவைப் பெறுவதில் சிரமங்கள் உள்ளதாகவும் வெளியிடங்களில் இருந்து எரு,உரம் எடுத்துவர அதிக செலவு ஏற்படுவதாகவும் திருநெல்வேலி விவசாயத் திணைக்களத்தில் நடைபெற்ற திராட்சைக்கன்றுகள் வழங்கும் நிகழ்வில் விவசாயிகளால் சுட்டிக்காட்டப்பட்டது.

தற்சமயம் உரிமை கோரப்படாத பெருந்தொகையான கால்நடைகள் தீவுப்பகுதி, தென்மராட்சி, வடமராட்சி, அரியாலைப் பிரதேசங்களில் கட்டாக்காலிகளாகத் திரிகின்றன.

இவற்றைப் பட்டியில் அடைத்து எரு உரத்தைப் பெறக்கூடியதாக ஏற்பாடு செய்யப்படவுள்ளது.

இதன் மூலம் வெளியிடங்களில் இருந்து கூடுதல் விலைக்கு உரத்தை வாங்க வேண்டியேற்படாதெனக் கருதுவதாகவும் இது குறித்து ஆலோசித்து உரிய நடவடிக்கை எடுக்க முடியும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

தற்சமயம் அனுராதபுரத்தில் இருந்து ஒரு லொறி எரு 28ஆயிரம் ரூபாவிற்கு எடுக்க வேண்டியுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

திராட்சைப்பழங்களையும் இதரபழவகைகளையும் பாதுகாக்கக் கூடிய வகையில் பொதிசெய்து வெளியிடங்களுக்கு ஏற்றுமதி செய்யக்கூடியதாகவும் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்று விவசாயிகள் இந் நிகழ்வில் அமைச்சரிடம் கோரியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (203- 111)

## மாணவர்களுக்கு சைக்கிள்கள்

புங்குடுதீவு சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம், புங்குடுதீவு சித்தி விநாயகர் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் இருந்து ஐந்தாம்தர புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்த இரண்டு மாணவர்களுக்கு சைக்கிள்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

லண்டனில் உள்ள புங்குடுதீவு அன்னை சி. பார்வதி அமைப்பின் நிதியுதவி மூலம் மாணவர்களுக்கான சைக்கிள்களை புங்குடுதீவு கல்வி அபிவிருத்திச் சபையின் தலைவர் பேராசிரியர் கா. குகபாலன் வழங்கியுள்ளார். (201- 267)

## நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்டு யாழ்.பாடசாலைகளில் தற்காலிக இணைப்புப் பெற்றுள்ள ஆசிரியர்களுக்கு இதுவரை சம்பளம் வழங்கப்படவில்லை

யாழ்ப்பாணம்,நவ.7

நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்டு யாழ். மாவட்டப் பாடசாலைகளில் தற்காலிக இணைப்புப் பெற்றுள்ள ஆசிரியர்களுக்கு ஒரு மாதகாலத்தை கடந்த நிலையிலும் இதுவரை சம்பளம் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:.

நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்டு யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் தற்காலிக இணைப்புப் பெற்றுள்ள ஆசிரியர்களில் ஒரு மாதத்துக்கு மேல் சேவையில் இணைக்கப்பட்டவர்களுக்கு இதுவரை சம்பளம் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனால் ஆசிரியர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகி பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இது விடயத்தில் சம்பந்தப்பட்ட கல்வித்துறைசார் அதிகாரிகள் உரிய கவனமெடுத்து துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்குச் சம்பளத்தினைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (50-9)

# தற்காலிக இணைப்பில் உள்ள ஆசிரியர்களை பணிக்கு திரும்புமாறு மாகாண கல்வியமைச்சு அறிவிப்பு

அச்சுவேலி,நவ.7

அகதிமுகாம்களில் இருந்து விடுவிக்கப்பட்டு யாழ். மாவட்டத்தில் தற்காலிக இணைப்பில் கல்வி கற்பித்துவரும் ஆசிரியர்கள் வன்னிப் பகுதிப் பாடசாலைகளுக்குத் திரும்பவேண்டும் என வடமாகாணக் கல்வியமைச்சுக் கேட்டுள்ளது.

ஏற்கனவே சுகாதாரப்பணியாளர்கள், நிருவாகப் பணிப்பாளர்கள் மீள்குடியேற்றப்பட்ட வன்னிப் பகுதிகளுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் அங்கு கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் வகையில் ஆசிரியர்களும் அழைக்கப்படுகின்றனர்.

குறிப்பாக யாழ்ப்பாணப் பாடசாலைகளில் தற்காலிக இணைப்புப் பெற்று கல்வி கற்பித்து வரும் ஆசிரியர்களில் ஆண் ஆசிரியர்கள் முதற் கட்டமாக வருகைதரவேண்டும் எனவும் தங்குமிடவசதி மற்றும் ஒழுங்கமைப்புக்கள் இன்மையால் பெண் ஆசிரியர்கள் தற்போது அழைக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2ஆம் கட்டமாகப் பெண் ஆசிரியர்களும் அழைக்கப்படவுள்ளனர் எனவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி துணுக்காய் கல்வி வலயம், கிளிநொச்சிக் கல்வி வலயம், மடுக் கல்வி வலயம் ஆகியவற்றைச் சேர்ந்த ஆண் ஆசிரியர்கள் முழங்காவிலில் அமைந்துள்ள கல்வி அலுவலகத்துக்கு சென்று கல்விச் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும். தவறும் பட்சத்தில் இவர்கள் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் வட மாகாணக் கல்வியமைச்சு தெரிவிக்கின்றது. (1- 11- 10)

## குடாநாட்டில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கு பதிவுச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,நவ.7

குடாநாட்டில் நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்டு மீளக் குடியமர்ந்துள்ள மக்களுக்கு பிறப்பு, இறப்பு, மற்றும் விவாகச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- யாழ் .மாவட்ட உதவிப்பதிவாளர் ப.பிரபாகர் இத்தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:.

யாழ். மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்து வன்னியில் யுத்தத்தில் சிக்கி உடைமைகளைத் தொலைத்து வந்துள்ள மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட மக்கள் தத்தமது பிரிவில் உள்ள பிரதேச செயலகங்களுக்குச் சென்று இது தொடர்பாக மேலதிகமான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளமுடியும். (50-9)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

### ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம்,நவ.7

**திக்கம் சித்தி விநாயகர் வித்தியாலயம்**

ச. திவ்யா- 157, சி.கோசலா- 155, ஜெ. ஜெனுசா- 151.

**வரணி வடக்கு அ.த.க.பாடசாலை**

வரதராசன் நிரோஜினி - 141, நற்குகம் ரசாந்தன் - 145. (201- 236)

### இலகு வேலைத்திட்ட ஓகஸ்ட் மாத நிவாரணம்

நவாலி,நவ.7

இலகு வேலைத்திட்டத்தின் ஓகஸ்ட் மாதத்திற்குரிய நிவாரணப் பொருள்கள் மானிப்பாய் ப.நோ.கூ.சங்க கிளைகளில் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. (203- 100)

### சாயிசேவா நிலையத்தில் உலக அகண்ட பஜனை

யாழ்ப்பாணம்,நவ.7

திருநெல்வேலி ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் அகில உலக அகண்ட பஜனை இன்று சனிக்கிழமை மாலை 6 மணி தொடக்கம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிவரை நடைபெறவுள்ளது.

உலகம் முழுவதும் அமைதியும் சாந்தியும் நிலவவேண்டும் என்பதற்காகவே 175 நாடுகளிலும் உள்ள சாயி நிலை யங்களில் ஒரே நேரத்தில் 24 மணிநேர பஜனை நடைபெறுவதற்கு ஸ்ரீ சத்திய சாயி பாபா ஏற்பாடு செய்துள்ளார். (204)

# தரம் வாய்ந்த உற்பத்திகளை நியாய விலையில் வழங்குவதன் மூலம் உள்ளூர் உற்பத்தியில் லாபமடையலாம்

## யாழ். அரச அதிபர் உள்ளூர் உற்பத்தியாளருக்கு ஆலோசனை

யாழ்ப்பாணம்,நவ.7

தரம் வாய்ந்த உள்ளூர் உற்பத்திகளை உள்ளூர் உற்பத்தியாளர்கள் நியாயமான விலையில் வழங்குவதன் மூலம் அவர்கள் அதிகளவில் சந்தை வாய்ப்பைப் பெற்று லாபமடைய முடியும்.

இவ்வாறு ஆலோசனை தெரிவித்துள்ளார் யாழ். அரச அதிபர் கே. கணேஷ்.

யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெற்ற விஞ்ஞான தின நிகழ்வுகளின் இறுதியில் இடம்பெற்ற பரிசில் வழங்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே அரச அதிபர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைமை காரணமாகத் தொழில் முயற்சியாளர்கள் கடந்த காலங்களில் பல சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. தற்போது அந்த நிலைமை நீங்கி வருகிறது.

உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற்கென சம்பந்தப்பட்டவர்களை நாம் அடிக்கடி சந்தித்து வலியுறுத்தி வருகின்றோம்.

எமது நாட்டினுடைய வளர்ச்சிக்கு அதிக பங்களிப்பினை தனியார் துறையினரே வழங்கி வருகின்றனர்.

எனவே விஞ்ஞான தொழில்நுட்பங்களை உள்ளூர் உற்பத்தியாளர்களும் பயன்படுத்துவதன் மூலம் வினைத்திறன் மிக்க உற்பத்திகளை வழங்கமுடியும்.

தற்போது வேலையற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. பட்டதாரிகளுக்கு வேலை வழங்க வேண்டும் என்ற கட்டாயம் எந்தநாட்டு அரசுக்கும் கிடையாது.

ஆளணி வெற்றிடங்கள் நிலவும் போது மட்டுமே அவர்களுக்கு வேலை வழங்குவது எனும் வழமை உள்ளது.

எனவே வேலையற்றிருக்கும் பட்டதாரிகள் தனியார் துறைகளில் இணைந்து வினைத்திறனான முறையில் பணியாற்றுவதன் மூலம் தம்மை முன்னேற்றுவதற்கும், நிறுவனங்களை முன்னேற்றுவதற்கும் வாய்ப்புகள் கிடைக்கும்.

இதன் மூலம் இளைஞர், யுவதிகள் அதிக நன்மையடையக் கூடியதாக இருக்கும். விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சின் ஏற்பாட்டில் நாட்டிலுள்ள அனைத்துப் பிரதேச செயலகங்கள் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் விதாதா வள நிலையம் ஒவ்வொன்று அமைக்கும் திட்டம் இருக்கிறது.

இதனடிப்படையில் ஏற்கனவே 8 விதாதா வளநிலையங்கள் யாழ் மாவட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ளன.

ஏனைய பிரிவுகளில் விரைவில் இவ் விதாதா வள நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இந் நிலையங்களின் மூலம் வேலையற்ற இளைஞர், யுவதிகள் பயனடைய வேண்டும் என்றார். (203- 14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்




யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் முகிழ்நிலை ஆசிரியர்களினால் 'சமாதானக் காற்று' இறுவட்டு அண்மையில் வெளியிடப்பட்டது.

இந்த நிகழ்வில் இறுவட்டை பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் வெளியிட்டுவைக்க அச்சுவேலி சென்.திரேசா மகளிர் கல்லூரி அதிபர் அருட்சகோதரி றொசாரியோ பெற்றுக்கொள்வதையும் அருகில் கல்வியியற் கல்லூரி உபபீடாதிபதி செல்வி நி.நல்லையா மற்றும் விரிவுரையாளர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்: நேசன்)



மட்டுவில் காந்தநாயகி வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட வகுப்பறைத் தொகுதி திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்டப் பாடசாலைகள் கட்டட வேலைகள் பகுதி பொறியியலாளர் கு.சிவபாலன் வகுப்பறையினை நாடாவெட்டித் திறந்துவைப்பதைக் காணலாம். (207)



மக்கள் வங்கியின் சுன்னாகக் கிளையின் ஜயஸ்ரீ பரிசு வழங்கும் நிகழ்வு அண்மையில் முகாமையாளர் மா.சந்திரகாந்தன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சிசு உதான கணக்கில் அதிகூடிய வைப்பினைக் கொண்டவருக்கான பரிசினை மக்கள் வங்கியின் சுன்னாகக் கிளை முகாமையாளர் வழங்க அதனை ஆறுமுக ஐயர் மகேந்திரக்குருக்கள் தனது மகனின் சார்பில் பெற்றுக் கொள்வதைப் படத்தில் காணலாம்.




வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பனை அபிவிருத்திச் சபையால் சங்கானை கிழக்கு கரைச்சி தரவையில் பனம் விதைகள் நடுகைத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சங்கானை உதவி அரச பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஞானாகரன், தலைமைப்பீட கிராம உத்தியோகத்தர் ஐ.ஞானேந்திரா, சங்கானை கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.



கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் யாழ்.மாவட்ட மற்றும் தேசிய மட்டத்தில் சிறுவர் ஓவியப் போட்டிகள் நடத்தப்பட்டன.

இந்தப் போட்டியில் வெற்றிபெற்ற குருநகரைச் சேர்ந்த யூதாதேயூ டிபாகருக்கு கொழும்பு கலாபவனம் மண்டபத்தில் அமைச்சுச் செயலாளர் விமல் ரூபசிங்கவால் பதக்கம் அணிவிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படுவதைக் காணலாம். (160)



உடுவில் அ.மி.த.க. பாடசாலையின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட உடுவில் கோட்டக் கல்விப்பணிப்பாளர் செ.குபேரநாதன் மாணவி ஒருவருக்குப் பரிசில் வழங்குவதையும் சிறப்பு விருந்தினர் திருமதி சு.அருந்தவராசா அமர்ந்திருப்பதையும் காணலாம். (38)




உலக அஞ்சல் தினத்தையொட்டி அளவெட்டி தபாலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில், தபாலதிபர் ஆ.தனபாலசிங்கம், உதவி தபாலதிபர் திருமதி [illegible] ஞானேஸ்வரன், பணியாளர்கள் ஆகியோருடன் நிகழ்வில் கலந்துகொண்டோரையும் காணலாம். (படம்: எஸ்.கதிர்வேலு)




வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் பருத்தித்துறை அரசினர் ஆதார [illegible]யில் மரம்நடும் விழா' நடைபெற்றது.

இந்த நிகழ்வில் லயன் என்.சோமசுந்தரம் மரக்கன்று ஒன்றை நடுகின்றார். அருகில் லயன்ஸ் கழக உறுப்பினர்கள் நிற்பதையும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கப்பலை விட்டு இறங்கவே மாட்டோம்; இலங்கை அகதிகள் 78 பேரும் பிடிவாதம்

## இந்தோனேஷியாவில் மேலும் ஒரு வாரம் கப்பல் தங்கிநிற்க அனுமதி

கொழும்பு, நவ. 07

இந்தோனேஷிய கடல் பகுதியில் தரித்து நிற்கும் அவுஸ்திரேலிய சுங்கத் திணைக் களக் கப்பலில் உள்ள 78 இலங்கையர் களும் கப்பலிலிருந்து இறங்குவதற்காக விதிக்கப்பட்ட காலக்கெடு முடிவடைந்த நிலையிலும், அதிலிருந்து இறங்குவதற்கு அவர்கள் மறுத்துள்ளனர்.

இதேவேளை, தனது கடல் பரப்பில் குறிப்பிட்ட 'ஓசியானிக் விகிங்' கப்பல் தரித்து நிற்பதற்கான அனுமதியை இந் தோனேஷியா மேலும் ஒரு வார காலத் திற்கு நீடித்துள்ளது.

இது குறித்து அவுஸ்திரேலிய ஊட கங்கள் மேலும் தெரிவித்துள்ளவை வரு மாறு:-

இந்தோனேஷியாவின் பின்ரன் கடல் பகுதியில் மூன்று வாரகாலமாகத் தரித்து நிற்கும் அவுஸ்திரேலிய சுங்கத் திணைக் களக் கப்பலான 'ஓசியானிக் விகிங்'கில் உள்ள 78 இலங்கையர்களும் அக்கப்பலி லேயே தொடர்ந்தும் தங்கியிருப்பது என்ற முடிவை எடுத்துள்ளனர்.

குறிப்பிட்ட கப்பலிலிருந்து அவர்கள் கடிதங்களை எழுதி வெளியே வீசுகின்ற னர். அந்தக் கடிதங்களிலேயே அவர்கள் தமது முடிவை எழுதியிருக்கின்றனர்.

''இந்தோனேஷியாவிற்கு சென்றால் எங்களுக்கு மிக விரைவில் தீர்வைப் பெற் றுத் தருவதாகத் தெரிவிக்கிறீர்கள். நாங் கள் இந்தோனேஷியா செல்லத் தயாராக இல்லை. இதுவே எமது இறுதி முடிவு'' என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

### குளிக்க அனுமதி இல்லை; குறைந்தளவு உணவு

தங்களை ஓஷியானிக் விகிங் கப்ப லிலிருந்து இறக்குவதற்கான நிர்ப்பந்தத் தைக் கொடுப்பதற்காக அவுஸ்திரேலிய சுங்கத் திணைக்கள அதிகாரிகள் மோசமாக நடத்துகின்றனர் என்றும் குற்றஞ்சாட்டி யுள்ள இலங்கையர்கள், தங்களுக்கு மிகக் குறைந்தளவு உணவே வழங்கப்படுகின் றது என்றும், குளிப்பதற்கு அனுமதி வழங் கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை குறிப்பிட்ட கப்பல் மேலும் ஒரு வார காலத்திற்கு தனது கடற்பரப்பில் தங்கியிருப்பதற்கான அனுமதியை வழங்கி யுள்ளது என இந்தோனேஷிய வெளிவிவ கார அமைச்சு தெரிவித்துள்ளது.

''இந்தோனேஷிய அரசு இந்த விட யத்தில் பொறுமையைக் கடைப்பிடிக்க விரும்புகின்றது.'' நாங்கள் அவசரப்பட விரும் பவில்லை. நாங்கள் நெகிழ்ச்சித் தன்மையு டனும், பொறுமையுடனும் இருக்க விரும்பு கிறோம் எனவும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

கப்பலில் உள்ளவர்களை அதிலிருந்து இறங்குமாறு கேட்டுக்கொள்வதில் அவுஸ் திரேலியா எவ்வளவு தூரம் வெற்றியடை கின்றது என்பதே இந்த விடயத்தில் முன் னேற்றத்தைக் கொண்டுவரும் என்றும் இந்தோனேஷியா தெரிவித்துள்ளது.

இது இவ்வாறிருக்க, அவுஸ்திரேலிய குடிவரவுத்துறை அமைச்சர் கிறிஸ் இவான்ஸ், கப்பலில் உள்ளவர்கள் இறங்க மறுத்தால் அவர்களை இறக்குவதற்காக தம்மிடம் வேறு திட்டங்கள், யோசனைகள் உள்ளன எனவும் தெரிவித்துள்ளார். (அ-சி)

# யாழ்.கூடைப்பந்தாட்ட அணி தெரிவுப் பயிற்சி இன்று

யாழ்ப்பாணம்.நவ.7

யாழ்.மாவட்டத்திற்கான கூடைப்பந் தாட்ட அணித்தெரிவு இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ்.மத்திய கல் லூரியில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 25ஆம் திகதி கண்டியில் நடைபெறவுள்ள தேசிய மட்டக் கூடைப் பந்தாட்டப் போட்டிகளில் கலந்துகொள் ளவிருக்கும் யாழ்.மாவட்ட அணி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த அணிக்கான தெரிவுப்பயிற்சியில் கூடைபந்தாட்ட வீர, வீராங்கனைகளைக் கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது. (10)

# மத்தியஸ்தர் சபையின் ஒன்று கூடல் நிகழ்வு

வடமராட்சி.நவ.7

பருத்தித்துறை பிரதேச மத்தியஸ்தர் சபையின் ஒன்று கூடல் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் மத்தி யஸ்தர் சபைத்தலைவர் ஆ.வடிவேலு தலைமையில் நடைபெறவுள்ளது.

(1-236)

# குண்டு வீச்சு விமானங்கள், பீரங்கிகளை விற்று இராணுவத்தினருக்கு சம்பள உயர்வு வழங்கு

## அரசுக்கு ஐக்கிய தேசியக் கட்சி யோசனை



கொழும்பு, நவ. 07

தற்போது யுத்தம் முடிந்துவிட்டதால் பல் குழல்பீரங்கிகள், பீரங்கிகள் போன்ற கனரக ஆயு தங்கள், மிக் விமானங் கள் மற்றும் குண்டு துளைக்காத வாகனங்கள் போன்றவற்றை விற்று அப்பணத்தைக் கொண்டு படை யினரின் சம்பளத்தை அதிகரிக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரை யாற்றிய ஐ.தே.கட்சி எம்.பியான லக்ஷ் மன் செனவிரட்னவே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தற்போது யுத்தம் முடிந்துவிட்டதால் கோடிக்கணக்கான ரூபா பணம் எஞ்சியிருக் கும். அப்பணத்தைக்கொண்டு படையின ரின் சம்பளத்தை அதிகரிக்க முடியும்.

ஆனால், படையினருக்கு ஆயிரம் ரூபாவை அதிகரித்துள்ளதாக அரசு தெரி வித்துள்ளது. இந்தத் தொகை போதுமான தல்ல. பயங்கரவாதத்தைத் தோற்கடித்த படையினரின் பெறுமதி ஆயிரம் ரூபா தானா?

யுத்தம் முடிந்துவிட்டதால் பீரங்கிகள்? பல்குழல் பீரங்கிகள், மிக் விமானங்கள் போன்றவற்றைத் தொடர்ந்தும் வைத்தி ருந்தால் இன்னும் ஓரிரு வருடங்களில் அவற்றைப் பழைய இரும்புக்குத்தான் விற்கவேண்டும். அதற்கு முன் அவற்றை இப்போதே விற்றுவிடுங்கள். அந்தப் பணத்தைக்கொண்டு படையினரின் சம் பளத்தை அதிகரிக்கலாம்.

இலங்கையில்தான் குண்டு துளைக்காத வாகனங்கள் அதிகம் உள்ளன. யுத்தம் முடிந்துவிட்டது. இனி யார் சுடப்போகி றார்கள். எதற்கு இந்த வாகனங்கள். அந்த வாகனங்களையும் விற்றுவிடுங்கள்.

ஆயிரம் ரூபாவால் படையினரின் சம் பளம் அதிகரிக்கப்படும் என்று அரசு சொன் னாலும் அது பொய். அடுத்த வருடத்துக் கான வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப் பிக்காது எப்படி இந்தச் சம்பளத்தை அதிக ரிக்கமுடியும். இது படையினரையும் மக்க ளையும் ஏமாற்றும் செயல் - என்றார்.

(அ-சி)

# கப்பல் , விமானம் மூலம் யாழ்.வருவோர் அதே வழி மூலமே திரும்ப முடியும்

## அரச அதிபர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.7

குடாநாட்டுக்கு கப்பல், விமானம் மூலம் வருபவர்கள் அவ்வழியூடாகவே யாழ்ப்பாணத்தில் இருந்து பயணத்தை மேற்கொள்ள முடியும்.

யாழ். அரச அதிபர் கே. கணேஷ் இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளார்.

விமானம் மூலம் வருபவர்கள் கப்பல் மூலம் செல்லவும் கப்பல் மூலம் வருப வர்கள் விமானம் மூலம் செல்லவும் முன்பு அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இந்த நடைமுறை மாற்றப்பட்டு குடா நாட்டுக்கு வரும் வழியூடாகவே வெளியே செல்லமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள் ளது.

இதேவேளை-

காங்கேசன்துறையில் இருந்து கப்பல் சேவை நாளையும் 13,18,23,28 ஆம் திகதிகளிலும் இடம்பெறும் என்று அரச அதிபர் தெரிவித்தார்.

மேற்படி தினங்களில் கப்பலில் பய ணத்தை மேற்கொள்பவர்கள் அன்று காலை 7 மணிக்கு யாழ்.ரயில் நிலையத் துக்கு பிரசன்னமாகி பயணத்தை மேற் கொள்ளலாம் என்று அரச அதிபர் கூறி னார். (1)


CONGRATULATIONS !



We congratulate our lecturer Miss CHANDRIKA THIYAGARAJAH on her convocation on 04-11-2009 in the BMICH for earning her HNDA. We wish her a bright and prosperous future.

Staff

DMI COMPUTER EDUCATION

No. 113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். Tel.: 021-222 4403


# மரண அறிவித்தல்

## திருமதி கந்தராசா சிவஞானசோதி



அராலி மத்தியைப் பிறப்பிடமாகவும், வசிப் பிடமாகவும் கொண்ட திருமதி கந்தராசா சிவ ஞானசோதி நேற்று (06.11.2009) வெள்ளிக் கிழமை சிவபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவ குரு- நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மகளும், அமரர் சண்முகநாதன்-மனோன் மணி தம்பதிகளின் அன்பு மருமகளும், கந்த ராசாவின் அன்பு மனைவியும், சண்முகதாஸ், இராஜமனோகரி ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ் சென்றவர்களான சிவசோதி, சிவபாலன், மற்றும் சிவகுமார் (கனடா), சிவஞானசக்தி (கனடா), சிவஞானதேவி ஆகியோ ரின் சகோதரியும், தர்மநாயகி, புஸ்பராசா, ராதானந்தமலர், நந்த குமார், புத்திரராசா, நிர்மலா ஆகியோரின் மைத்துனியும், கோபி நாத், விஷ்வநாத், பிறேமிநாத், வைகுந்தவாசன், சிறீரங்கன், சிவப்பிரியா, சிவகண்ணன், சிவரூபன், சிவகுருநாதன் ஆகி யோரின் பாசமிகு மாமியாரும், விமலகுமார், சர்மிளா, பவநந் தினி, செந்தூரன், பாலகுமரன், கஸ்தூரி ஆகியோரின் பெரிய தாயாரும், அ.சி.சோமசுந்தரம், கு.சி.பவுண் பொன்னம்பலம் (வண்ணார் பண்ணை பெருமாள் கோயிலடி) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (06.11.2009) வெள் ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அராலி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி மத்தி.

தகவல்:
சண்முகநாதன் கந்தராசா
(கணவர்).

(90724)

# அவசரகாலச் சட்டத்தை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக நாடாளுமன்றில் நேற்று உரையாற்றியபோது, அவர் மேலும் தெரி வித்தவை வருமாறு:-

அகதி முகாம்களில் தடுத்து வைக்கப் பட்டுள்ள மக்கள் உடனடியாக விடுவிக் கப்படவேண்டும். அகதிகளில் ஒரு லட் சம் பேர் அல்லது அதற்கு அதிகமானவர் கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர் என்று எமக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இப்போது இரண்டு லட்சம் அல்லது அதற்குக் குறைவான மக்கள் முகாம்களில் உள்ளனர். அவர்கள் தமது விருப்பத்திற்கு மாறாகவே தங்கவைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மிருகங்கள்போல் தடுத்து வைக் கப்பட்டுள்ளனர்.

மக்கள் பிரதிநிதியான எம்மை அம் முகாம்களுக்குச் செல்ல அனுமதி மறுப் பது எப்படி? இது ஒரு ஜனநாயக அரசு அல்ல. இதைச் சர்வதேச சமூகமும் புரிந்து கொள்ள வேண்டும்.

அந்த அகதி முகாம்களில் பல குறைபாடுகள் உள்ளன. உணவு,மருந்து, நீர் போன்றவற்றுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. மக்கள் கடும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர்.

### வெளிநாட்டு உதவிகள் உரிய முறையில் பயன்படுத்தப்பட வேண்டும்

இந்த நிலைமை உடன் முடிவுக்கு வரவேண்டும். இந்த மக்க ளுக்கு உதவும் வகையில் இந்தியா உள்ளிட்ட பல நாடுகள் நிதி யுதவி வழங்கத் தயாராகவுள்ளன. அந்த உதவிகள் நல்லமுறை யில் பயன்படுத்தப்பட வேண்டும்.

அகதி முகாம்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் செல்வதை அரசு தடுக்கக்கூடாது. மக்கள் பிரதிநிதிகளான எம்மையும் அங்கு செல்ல அனுமதிக்க வேண்டும். இந்த விடயத்தில் அரசு நேர் மையுடன் நடந்துகொள்ள வேண்டுகின்றோம்.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் கண்ணிவெடிகள் அகற்றும் பணி இன்னும் ஆரம்பிக்கப் படவில்லை என்று எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. இப்பணி உடன் ஆரம்பிக்கப்பட வேண்டும். எஞ்சியுள்ள அகதிகளை உடன் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இனியும் அந்த மக்கள் தடுத்து வைக்கப்பட முடியாது. இந் நாட்டில் உள்ள ஏனைய மக்கள் அனுபவிக்கின்ற உரிமைகள் அனைத்தையும் அந்த அகதிகளும் அனுபவிக்க வேண்டும்.

இந்த மக்களை விடுவிக்குமாறு இந்தியா உள்ளிட்ட அனைத்து நாடு களும் இலங்கை அரசிடம் கோரிக்கை விடுக்கின்றன. [illegible] களை மீளக்குடி மர்த்த அந்நாடுகள் உதவத் தயாராக இருக்கின்றன.

இந்நாடுகளின் கோரிக்கைகளையும் அரசு செவிமடுக்க வேண்டும். தற்போது யுத்தம் முடிந்து விட் டது. இனியாவது அரசு அவசர காலச் சட்டத்தை நீக்கி நாட் டில் ஜனநாயகம் [illegible] வேண்டும் என்றார்.


அன்பான வாடிக்கையாளர்களுக்கு

பூத்திடும் கிறிஸ்மஸ் புது வருட வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறோம்

மானிப்பாய் அபான்ஸ் காட்சியறை தனது வட்டியில்லா தவணைக் கொடுப்பனவினை ஆரம்பிக்கும் அதேவேளை கிறிஸ்மஸ் புது வருடத்தை முன்னிட்டு தனது அபாரமான விலைக் கழிவினையும் உங்களுக்கு அள்ளி வழங்குகிறது என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

Abans Retail (PVT) Ltd
இலக்கம் 182, யாழ். வீதி,
மானிப்பாய்
தொடர்பு இல. 0779905393


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தமிழக மீனவரைக் காக்க இலங்கை மீது இந்தியா இராணுவ நடவடிக்கை எடுக்கவும் தயங்கக்கூடாது

## தமிழக பாரதீய ஜனதாக் கட்சி வலியுறுத்து

சென்னை, நவ. 07

இலங்கையில் வாடிக் கொண்டிருக்கும் தமிழக மீனவர்களை மீட்க இந்திய அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கு இலங்கை தயாராக இல்லா விட்டால் இராணுவ நடவடிக்கை எடுக்கவும் இந்திய அரசு தயங்கக் கூடாது - என்று பா.ஜ.க. மாநில துணைத் தலைவர் பொன் ராதா கிருஷ்ணன் ஆவேசம் வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து மேலும் அவர் தெரிவித்திருப்பவை வருமாறு -

இலங்கையில் தமிழர்களை வீழ்த்தி விட்டோம், இனி ஒட்டுமொத்த தமிழ் இனத்தையும் வீழ்த்துவோம் என்ற எண்ணத்தில் மஹிந்த ராஜபக்ஷ அரசு செயற்படுகிறதோ என்ற எண்ணத்தை இலங்கைக் கடற்படையின் அண்மைக்கால செயல்கள் தோற்றுவிக்கின்றன.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் கைகுலுக்கச் சென்ற ஆளும் கூட்டணி எம்.பிக்கள் குழு, இலங்கைத் தமிழர்களுக்காக ஏதும் செய்யாவிட்டாலும், தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையின் தாக்குதலிலிருந்து காக்கும் நடவடிக்கைக்கான முயற்சிகளையாவது எடுத்திருக்கலாம்.

ஆனால், இந்தச் சந்திப்புக்குப் பின்னர் இந்திய மீனவர்கள் மீதான தாக்குதல் அதிகரித்திருப்பதைப் பார்த்தால், எம்.பிக்கள் குழுவின் இலங்கைப்பயணம், மஹிந்த ராஜபக்ஷவின் செயல்களுக்கு மேலும் அங்கீகாரத்தைக் கொடுத்துவிட்டதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

சமீபத்தில் ஜெகதாபட்டினத்தைச் சேர்ந்த 18 மீனவர்களையும், அவர்களது படகுகளையும், வலைகளையும் இலங்கைக் கடற்படை கடத்திச் சென்றுள்ளது. இந்தப் பரிதாப நிலையைத் தமிழக முதல்வர் கண்டும் காணாமலும் இருப்பது கண்டனத்துக்குரியது.

தமிழகத்தைச் சேர்ந்த ப.சிதம்பரம் உள்துறை அமைச்சராக இருந்தும் இவ்விடயத்தில் அவரும் மௌனமாக இருப்பது தமிழ் இனத்தைக் காவு கொடுப்பதில் தனக்கும் உடன்பாடுதான் எனக் கூறுவதாகவே உள்ளது.

தொழில் நிறுவனங்களைப் பாதுகாக்க (சி.ஐ.எஸ்.எவ்.) தனிப் படைப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளதைப் போல, இந்திய மீனவர்கள் பாதுகாப்புக்கு கடல் தொழிற் படைப் பிரிவை இந்திய அரசு உடனடியாக ஏற்படுத்த வேண்டும்.

அதோடு இலங்கை அரசால் கடத்தப்பட்டு, இலங்கையில் வாடிக் கொண்டிருக்கும் தமிழக மீனவர்களை மீட்க இந்திய அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கு இலங்கை தயாராக இல்லாவிட்டால் இராணுவ நடவடிக்கை எடுக்கவும் இந்திய அரசு தயங்கக் கூடாது. இவற்றுக்கு மேலாக, தமிழக மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில், கச்சதீவை உடனடியாக மீட்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கான உரிமைக் குரல் ஓங்கி ஒலிக்கும்படியான நடவடிக்கைகளை தமிழக அரசு விரைந்து எடுக்க வேண்டும் - என்றார்.

# சிங்களப் படத்தில் நடிக்கக் கூடாது; சூர்யாவிடம் நெடுமாறன் கோரிக்கை

சென்னை, நவ. 07



இலங்கையில் சிங்கள இயக்குநரின் இயக்கத்தில் தயாராகும் சிங்களத் திரைப் படத்தில் தமிழ் நடிகர் சூர்யா நடிக்கக் கூடாது - என்று இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் பழ. நெடுமாறன் கோரிக்கை விடுத்துள்ளார்.

சிங்களத் திரைப்படத்தில் நடிக்க சூர்யா ஒப்புக்கொண்டிருக்கிறார் என வெளியான செய்தியால் ஈழத்திலும், புலம்பெயர் நாடுகளிலும் வசிக்கும் தமிழர்கள் கடும் சீற்றமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப் படுகிறது.

இதுதொடர்பாக நேற்றுமுன்தினம் அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருப்பவை வருமாறு -

சிங்களத் திரைப்படத்தில் நடிக்க சூர்யா ஒப்புக்கொண்டிருக்கிறார் என வெளியான செய்தி தமிழர்களை வேதனையில் ஆழ்த்தியுள்ளது.

கலைஞர்கள் நாடு, இனம் கடந்தவர்கள் என்பது ஒருபுறம் இருந்தாலும், அண்மையில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட தமிழர்களைக் கொன்று குவித்து 3 லட்சத்துக்கு மேற்பட்ட தமிழர்களை வதை முகாம்களில் அடைத்து கொடுமை செய்யும் நாட்டில் சிங்களவரால் தயாரிக்கப்படும் சிங்களப் படத்தில் தமிழர் ஒருவர் நடிப்பதை எண்ணிக்கூடப் பார்க்க முடியவில்லை.

மும்பையில் பாகிஸ்தான் பயங்கரவாதிகளால் நடத்தப்பட்ட மிகக் கொடுமையான படுகொலைகளுக்குப் பின்னர் பாகிஸ்தானுக்கு கிரிக்கெட் விளையாட புறப்பட்ட இந்தியக் குழுவை மக்களின் ஒன்றுபட்ட எதிர்ப்பு தடுத்து நிறுத்தியது.

எனவே, தமிழ் மக்களின் கோபத்திற்கு ஆளாகாத வகையில் நடிகர் சூர்யா சிங் களப் படத்தில் நடிப்பதைக் கைவிட வேண்டும் - என்றுள்ளது.

# மஹிந்தவுக்குப் பட்டாபிஷேகமா? எதிர்கால தமிழகம் மன்னிக்காது

## மத்திய அரசு மீது வைகோ பாய்ச்சல்



சென்னை, நவ. 07

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவுக்கு திருப்பதியில் பட்டாபிஷேகம் செய்துள்ளது மன்மோகன் அரசு. இதற்கு தமிழக முதல்வர் கருணாநிதியும் உடந்தையாக இருந்துள்ளார். இதை எதிர்கால தமிழகம் மன்னிக்காது. தமிழ் இனத்திற்கான அநீதியை அகற்றிட ம.தி.மு.கவுக்கு ஆதரவு தாருங்கள் - இவ்வாறு ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்தார்.

தமிழ்நாடு, கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரியில் நடந்த ம.தி.மு.க. பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு கொட்டும் மழையில் வைகோ உரையாற்றுகையில் மேற்கண்டவாறு பேசியுள்ளார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு -

ஈழத்தில் தமிழ் இனம் கொன்று குவிக்கப்பட்டது. மஹிந்த ராஜபக்ஷவுக்கு இந்திய அரசு ஆயுதங்களையும், நிதி உதவிகளையும் கொடுத்து உதவியது.

ஈழத்தில் தமிழர்களை கொன்று குவித்த ராஜபக்ஷவுக்கு திருப்பதியில் பட்டா பிஷேகம் செய்துள்ளது மத்திய அரசு. இதற்கு தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியும் உடந்தையாக இருந்துள்ளார்.

இந்த நிகழ்ச்சிகளை எதிர்கால தமிழகம் மன்னிக்காது. தமிழ் இனத்திற்கான அநீதியை அகற்றிட ம.தி.மு.கவுக்கு ஆதரவு தாருங்கள் - என்றார்.

## பாக்கு நீரிணைப் பகுதியில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்ட

# 20 கப்பல்களில் இலங்கைப்படை ரோந்து தமிழக மீனவரின் வாழ்வாதாரம் பாதிப்பு

பாக்கு நீரிணைக் கடற்பகுதியில் இலங்கைக் கடற்படையினர் 20 போர்க் கப்பல்களில் ரோந்து சுற்றி வந்து தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டி வருகின்றனர் என்று இராமேஸ்வரம் மீனவர்கள் நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை தெரிவித்தனர்.

இராமேஸ்வரம் மற்றும் புதுக்கோட்டை, நாகை மாவட்டங்களைச் சேர்ந்த 20 ஆயிரம் மீனவர்கள் விசைப்படகுகளில் இந்திய, இலங்கை கடல் எல்லையில் மீன் பிடித்து வருகின்றனர். கடந்த ஜூன் முதல் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களை இலங்கைக் கடற்படை யினர் தாக்கியும், படகுகளைச் சேதப்படுத்தியும், மீன்களைப் பறித்தும் செல்கின்றனர்.

மேலும், இலங்கைக் கப்பல்களில் சீனாவைச் சேர்ந்த கடற்படையினரும் உள்ளனர் என மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது பாக்கு நீரிணைப்புக் கடலில் இலங்கைக் கடற்படையினர் தங்கள் வலிமையை நிலைநாட்டி வருகின்றனர்.

இதுகுறித்து இராமேஸ்வரம் மீனவர்கள் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு-

இராமேஸ்வரத்தில் கடந்த 4ஆம் திகதி 400 விசைப்படகுகள் மீன்பிடிக்கச் சென்றன. இந்தப் படகுகள் நடுக்கடலில் வலையை வீசியபோது அங்கு இலங்கைக் கடற்படையின் 20 போர் கப்பல்கள் ரோந்து வந்தன.

முன்பெல்லாம் 5 முதல் 8 கப்பல்களில் தான் ரோந்து சுற்றி வருவர். தற்போது கூடுதலான கப்பல்களுடன் ரோந்து வந்து எங்களை விரட்டியடித்தனர். நாங்கள் மீன் பிடிக்க முடியாமல் ஏமாற்றத்துடன் திரும்பி வந்தோம்.

மீன் வளம் அதிகம் உள்ள பாக். நீரிணைப்பு ஜலசந்தி கடல் பகுதியில் இலங்கை கடற்படையினர் ஆதிக்கம் செலுத்துவதால், தமிழக மீனவக் குடும்பங்கள், கடல் சார்ந்த தொழிலாளர்கள் 5 லட்சம் பேர் வேலை இழக்கும் நிலை உள்ளது - என்றனர்.

## இந்தியச் செய்திகள்

# தமிழகம், புதுவையில் கடும் மழை; இதுவரை 12 பேர் பரிதாப மரணம்!



சென்னை, நவ. 07

தமிழகம், புதுவையில் இரண்டு நாள்களாக பலத்த மழை கொட்டுகிறது. கன மழைக்கு இதுவரை 12 பேர் இறந்துள்ளனர்.

இதேவேளை, அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தென்மேற்கு வங்கக்கடலில் இலங்கை வரை நிலைகொண்டிருந்த குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக தமிழகம், புதுச்சேரியில் கடந்த ஒரு வாரமாக பரவலாக மழை பெய்து வருகிறது. குறிப்பாக கடலோர மாவட்டங்களில் கடந்த புதன்கிழமை பிற்பகலிலிருந்து தொடர்ந்து மழை கொட்டுகிறது.

சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம், கடலூர் மற்றும் காவிரி டெல்டா மாவட்டங்களான தஞ்சை, நாகை, திருவாரூர், புதுக்கோட்டை மாவட்டங்களில் கடந்த புதனன்று இரவு முதல் விடிய விடிய பலத்த மழை பெய்தது.

இதன் காரணமாக தஞ்சை, நாகை, திருவாரூர் மற்றும் புதுச்சேரி காரைக்கால் மாவட்டங்களில் பாடசாலை, கல்லூரிகளுக்கு நேற்றுமுன்தினம் விடுமுறை விடப்பட்டது.

கடலூர், காரைக்காலில் மீனவர்கள் நேற்றுமுன்தினம் கடலுக்குச்செல்லவில்லை.

வேலூர் மாவட்டத் தில் பல இடங்களில் நேற்றுமுன்தினம் மழை பெய்தது. நெல்லை மாவட்டத்தில் பல இடங்களில் பலத்த மழை பெய்தது. மழையால் பாபநாசம், மணிமுத்தாறு அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

தமிழகம், புதுச்சேரியில் மழைக்கு கடந்த ஒரு வாரத்தில் 12 பேர் இறந்துள்ளனர்.

நீலகிரி மாவட்டத்தில் நேற்று முன்தினம் மாலை முதல் குன்னூர், கோத்தகிரி, கொலக்கம்பை, குந்தா உள்ளிட்ட பகுதிகளில் கனமழை பெய்தது. பலத்த மழை காரணமாக வீதி ஓரங்களில் சில இடங்களில் லேசான மண் சரிவு ஏற்பட்டது.

இந்நிலையில், தமிழகம், புதுச்சேரி கடலோரத்தில் பெரும்பாலான இடங்களிலும் உள்மாவட்டத்தில் ஒரு சில இடங்களிலும் இரண்டு நாள்களுக்கு மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

# குழந்தைகளைக் காப்பாற்ற கூடுதல் மானியம் வேண்டும்

## ஒரே பிரசவத்தில் 3 குழந்தைகளைப் பெற்ற ஈழ அகதி கோரிக்கை


சென்னை, நவ. 07

தமிழ்நாட்டிலுள்ள இலங்கைத்தமிழர் அகதி முகாம்களை பார்வையிட வந்த அமைச்சரிடம் ஒரே பிரசவத்தில் 3 குழந்தைகளைப் பெற்ற திருகோணமலையைச் சேர்ந்த பெண் ஒருவர், தனது குழந்தைகளைக் காப்பாற்ற கூடுதல் மானியம் ஒதுக்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழகம் முழுவதிலும் உள்ள அனைத்து முகாம்களுக்கும் அந்தந்தப் பகுதி அமைச்சர்கள் நேரில் சென்று குறைகளை அறிந்து ஆய்வு நடத்தி வருகின்றனர்.

இராமநாதபுர மாவட்டம் மண்டபத்தில் உள்ள முகாமிற்கு அமைச்சர் சுப.தங்கவேலன் சென்று ஆய்வு நடத்தினார். அவர் அங்கு வசித்து வரும் ஈழ அகதிகளிடம் குறைகளை கேட்டறிந்தார்.

கொட்டும் மழையிலும் குடை பிடித்தவாறு சென்ற அமைச்சர் முகாம்களிலுள்ள வீடுகளுக்குள்ளும் சென்று பார்வையிட்டார். அப்போது பெண் அகதியான பிரேசீட்டா (வயது - 33) அமைச்சரிடம் கண்ணீருடன் கோரிக்கை மனு ஒன்றை அளித்தார்.



அதன் விவரம் வருமாறு -

இலங்கை திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த எனக்கு கடந்த 2 மாதங்களுக்கு முன்பு ஒரே பிரசவத்தில் 3 குழந்தைகள் பிறந்தன. அதில் ஒரு ஆண் குழந்தை இறந்துவிட்டது. எனது கணவரும் சரியான தொழிலின்றி அவதிப்பட்டு வருகிறார். 2 பிள்ளைகளை வைத்து கொண்டு கஷ்டப்பட்டு வருகிறேன். எனவே குழந்தைகளை காப்பாற்ற கூடுதல் மானியம் வழங்க வேண்டும் - என்று அதில் அவர் கோரியிருந்தார்.

# பிரம்மபுத்ரா நதியில் சீனா அணை: இந்தியாவுக்குப் பாதிப்பு இல்லையாம்

பிரம்மபுத்ரா நதியில் சீனா புதிய அணை கட்டி வருகிறது. ஆனால், அந்த அணை இந்திய எல்லையிலிருந்து 1,100 கிலோ மீற்றர் தூரத்தில்தான் கட்டப்படுகிறது. அதனால் இந்தியாவுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை - மத்திய நீர்வள ஆதாரத் துறை அமைச்சர் பி.கே. பன்சால் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றமும் ஊடகங்களும் என்ற தலைப்பில் மாநிலங்களவை சார்பில் டில்லியில் நடந்த கருத்தரங்கில் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். மேலும் அவர் அங்கு பேசியவை வருமாறு -

பிரம்மபுத்ரா நதியில் சீனா புதிய அணை கட்டி வருகிறது. ஆனால், அந்த அணை இந்திய எல்லையில் இருந்து 1,100 கி.மீ. தூரத்தில்தான் கட்டப்படுகிறது. அதனால் இந்தியாவுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. அதுபற்றி கலைப்பட தேவையும் இல்லை. தவிர அது சிறிய அணைதான். பெரிய நீர்த்தேக்கம் அல்ல.

ஏற்கனவே உள்ளூர் தேவைகளுக்காக அந்தப் பகுதியில் சீனா 15 சிறிய அணைகளை கட்டியிருக்கிறது. அவர்கள் பகுதிக்குள் அணை கட்டுவதைத் தடுக்க நமக்கு உரிமை இல்லை. அதே சமயம் பிரம்மபுத்ராவில் நமது பங்காக வரும் தண்ணீரை சீனா தடுத்தால்தான் நாம் ஆட்சேபனை எழுப்ப வேண்டும் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த மக்கள் வங்கித்தலைவர் கருணாஜீவ, பிரதம நிறைவேற்று அதிகாரியும் பொதுமுகாமையாளருமாகிய பி.வி.பத்திரன மற்றும் தலைமை அலுவலக சிரேஷ்ட உத்தியோகத்தர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று மாலை யாழ்.நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.
மக்கள் வங்கியின் தலைவர் உள்ளிட்ட உயர் அதிகாரிகளுக்கு ஆராத்தி எடுத்தும் நெற்றித் திலகமிட்டும் கௌரவிக்கப்படுவதைக் காணலாம், அருகில் சந்தைப்படுத்தல் பிரதம அதிகாரி தீபல் அபேசேகர, வங்கிப் பொதுமுகாமையாளர் பி.வி.பத்திரன ஆகியோர் காணப்படுகின்றனர்.
வங்கித்தலைவர் கருணாஜீவ மற்றும் அதிகாரிகள் அழைத்துவரப்படுவதையும் வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் எஸ். ஆனந்தராஜா மங்கள விளக்கேற்றுவதையும் அடுத்துள்ள படங்களில் காணலாம். மேடையில் விருந்தினர்கள் அமர்ந்திருப் பதையும், நிகழ்வில் கலந்துகொண்டவரில் ஒரு பகுதியினரையும் வங்கி உயரதிகாரிகள் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்துகொண்டவர்களையும் கீழ்வரிசைப் படங்களில் காணலாம்.
(படங்கள்- உமா, தமிழரசன்)

# குடாநாட்டு மக்களின் சமூக மேம்பாட்டுக்கு உதவ மக்கள் வங்கி என்றும் பின் நிற்பதில்லை

யாழ்ப்பாணம், நவ.7

மக்கள் வங்கி யாழ். குடாநாட்டு மக்களின் சமூக மேம்பாட்டுக்கும் வாழ்வியல் முன்னேற்றத்துக்கும் உதவ என்றும் பின் நிற்பதில்லை. குடாநாட்டு மக்களின் நம்பிக்கைக்கு மேலும் வலுவூட்டி மென்மேலும் சிறந்த சேவையை எமது வங்கி இப்பகுதி மக்களுக்கு வழங்கும்.

மிகநீண்ட காலமாக குறைந்த வட்டியுடன் மக்களின் சகல தேவை களுக்கும் கடன் வழங்கி வருவதும் மக்கள் வங்கியே.

இவ்வாறு நேற்று மாலை பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் மக்கள் வங்கியின் பொது முகாமையாளர் பி.வி.பத்திரன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மக்கள் வங்கி 1961 ஆம் ஆண்டில் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் அடுத்த ஆண்டே யாழ்.குடாநாட்டில் காங்கேசன்துறை மற்றும் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி ஆகிய இரு இடங்களில் தனது கிளைகளை ஆரம்பித்தது.

யாழ்ப்பாண மக்களுக்கு யாழ். குடாநாட்டில் உள்ள மக்கள் வங்கிக் கிளைகள் ஊடாக நாம் வழங்கிய கடன் உதவிகளை அம்மக்கள் நிலுவையின்றிச் செலுத்தி முடித்து வந்துள்ளனர்.

இன்று அகில இலங்கையில் 396 பில்லியன் ரூபா பெறுமதியான தொகையை மூலதனமாகக் கொண்டிருக்கும் மக்கள் வங்கி அதில் 11 பில்லியன் ரூபாவை யாழ்.குடாநாட்டில் மூலதனமாகக் கொண்டு செயலாற்றி வருகிறது.

மக்கள் வங்கி விவசாயம், மீன்பிடி, கால்நடை வளர்ப்பு, சிறுகைத்தொழில் முயற்சிகள் போன்ற பல துறைகளில் ஈடுபட்டு வரும் யாழ்.குடாநாட்டு மக்களுக்கு கடனுதவி வழங்கி அவர்கள் தமது முயற்சிகளுக்கான மூலப்பொருள் களை கொள்வனவு செய்ய மட்டுமன்றி தமது உற்பத்திப்பொருள்களை சந்தைப் படுத்தவும் வாய்ப்புகளை ஏற்படுத்தி உதவி வருகிறது. அத்தோடு உள்ளூர் சந்தைப் படுத்தல் வாய்ப்புக்களை மட்டுமன்றி வெளிநாட்டு ஏற்றுமதி வாய்ப்புகளுக்கும் கடனுதவி வழங்கி வருகிறது.

யுத்தம் காரணமாக பலதரப்பட்ட சிரமங்களை குடாநாட்டு மக்கள் எதிர்நோக்கிய வேளைகளில் கூட மக்கள் வங்கி தனது பூரண, விசுவாசமான சேவையை மக்களுக்கு வழங்கியே வந்துள்ளது.

அதேபோன்று யாழ்.குடாநாட்டு மக்களும் இலங்கையின் முதல்தர வங்கி என்ற விதத்தில் சகல தரப்பு மக்களுக்கும் பல வழிகளில் சிறந்த சேவையை மக்கள் வங்கி ஆற்றுவதாக பூரண நம்பிக்கையுடன் தமது பேராதரவை மக்கள் வங்கிக்கு வழங்கி வந்துள்ளனர்.

மக்கள் வங்கி பொதுமக்களுக்கான கடனுதவிகளை வழங்கி உதவும் பணியில் மட்டு மல்லாது மற்றும் பல சமூக முன்னேற்றத் திட்டங்களுக்கும் உதவி வந்துள்ளது, தற் போதும் உதவி வருகின்றது.

அந்த வகையில் போரினால் பாதிக்கப்பட்ட ரயில் சேவையை 'வடக்கின் வசந்தம்' திட்டத்தின் ஓர் அம்சமாக மீண்டும் புனரமைத்து ஆரம்பிக்கும் திட்டத்தில் தன்னை ஒரு பங்காளியாக்கும் விதத்தில் மக்கள் வங்கி யாழ். குடாநாட்டின் பளை ரயில் நிலையத்தை முற்று முழுதாகப் புனரமைத்து உதவ முன்வந்துள்ளது.

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து வாழ்வோர் என்ற குறியீட்டின் கீழ் அல்லாது யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணப் பொதுமக்களின் வாழ்வாதாரங்களை மீண்டும் கட்டியெழுப்பி உதவும் நோக்கிலேயே மக்கள் வங்கி தனது திட்டங்களை முன்னெடுத்து வருகிறது.

அந்த வகையில் மக்கள் வங்கி வடக்கு கிழக்கு பகுதி வாழ் மக்களுக்கு கடனுதவியாக பெருந்தொகையை வழங்கி அவர்களது வாழ்க்கையில் புதிய மலர்ச்சி ஏற்பட உதவ முன்வந்துள்ளது. இம்முயற்சி ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு இது வரையில் பல மில்லியன் ரூபா நிதி பொது மக்களது வாழ்வாதார முயற்சித் திட்டங்களை ஊக்குவிக்கவென வழங்கப்பட்டுள்ளது.

மக்கள் வங்கி பொதுமக்களது வங்கி. சாதாரண பொதுமக்களும் பயனடைய வேண்டும் என்ற நோக்கில் பலதரப்பட்ட விதங்களில் மக்கள் வங்கி நடுத்தர, கீழ் மட்ட பொது மக்களுக்கு உதவிகளை வழங்குவதில் ஆர்வம்காட்டி செயற்படுகிறது.

மக்கள் வங்கி யாழ்.குடாநாட்டு மக்களது சமூக வாழ்வியல் முன்னேற்றத் துக்கும் உதவப் பின் நிற்பதில்லை. என்பதை எடுத்துக்காட்டும் விதத்தில் யாழ். போதனா வைத்தியசாலை 8 ஆம் இலக்க விடுதியில் புனரமைப்புக்கு உதவுமாறு விடுக்கப்பட்ட வேண்டு கோளுக்கு அமைய நாளை மக்கள் வங்கியின் தலைவரால் 5 லட்சம் ரூபா அன்பளிப்புச் செய்யப்பட உள்ளது - என்றார்.

நேற்றைய பத்திரிகையாளர் சந்திப்பின் போது வங்கியின் சந்தைப்படுத்தல் துறையின் தலைவர் தீபால் அபேசேகரவும் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் எஸ்.ஆனந்தராசாவும் கலந்து கொண்டனர். (அ-3)

# வடமராட்சியிலிருந்து மணல் விநியோகம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது

யாழ்ப்பாணம், நவ.7

கட்டட, புனர்நிர்மாண,அபிவிருத்திப் பணிகளுக்கு வடமராட்சி கிழக்கு குடத்தனைப் பகுதியில் இருந்து யாழ். மாவட்டத்தின் ஏனைய பகுதிகளுக்கு நடைபெற்று வந்த மணல் விநியோக நடவடிக்கை மழை காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள் ளது.

மணலை டிரக்டரில் ஏற்றி அவற்றை ஏனைய வாகனங்களுக்கு பரிமாற்றம் செய்யும் இடத்தில் மழை நீர் தேங்கி நிற்பதனாலேயே இந்த மணல் விநியோக நடவடிக்கை பாதிக்கப்பட்டுள்ளது என்று யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை- கடந்த இரண்டு வருடங்களாக கட்டட புனர்நிர்மாண அபிவிருத்திப் பணிகளுக்கென மணலைப் பெறுவதற்கான மாதாந்தம் சுமார் 1,500 பேருக்கும் மேற்பட்டோர் யாழ். செயலகத்தில் அனுமதிக்காக விண்ணப்பித்து மணலைப் பெற்று வருகின்றனர்.

குடத்தனையில் இருந்து டிரக்டரில் மணல் ஏற்றப்பட்டு அவை இன்னொரு பகுதியில் வைத்து லொறி,கென்டர்களில் ஏற்றப்பட்டு குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

வாரநாள்களில் ஒவ்வொரு நாளும் சுமார் 75 தொடக்கம் 100 வரை மணல் பெறுவதற்காக செயலகத்தில் விண்ணப்பிக்கின்றனர். இரண்டு மாதத்துக்கு ஒரு தடவை 200 வரையான லொறிகள் டிரக்டர்கள்,கென்டர் வாகனங்கள் மணல் விநியோக நடவடிக்கையில் ஈடுபடுகின்றன.

இவை பலாலிபடைத் தலைமையகத்தில் மணல் ஏற்றுவதற்கான அனுமதியைப் பெற்று இந்த நடவடிக்கையில் ஈடுபடுகின்றன. ஒரு டிரக்டர் மணலுக்கு 1,400 ரூபா செயலகத்தால் அறவிடப்படுகிறது. இதனை விட வாகனத்துக்கான போக்குவரத்துக் கூலியினை மணலைக் கொள்வனவு செய்வோர் செலுத்துதல் வேண்டும். (1-7)

# உயர்பாதுகாப்பு வலயப் பிரதேச மக்களின் மீள்குடியமர்வு விரைவுபடுத்தப்பட வேண்டும்

## யாழ். வந்த ஜனாதிபதியின் ஆலோசகரிடம் நீதிபதி வலியுறுத்து

யாழ்ப்பாணம், நவ.7

குடாநாட்டில் உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை, தற்போது ஏற்பட்டுள்ள களநிலை மாற்றத்துக்கு ஏற்ப விரைவாக மீளக்குடியமர்த்த அரசு ஏற்பாடு செய்யவேண்டும்.

ஜனாதிபதியின் ஆலோசகரும், ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவருமான வாசுதேவ நாணயக்காரவிடம் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா மேற்கண்டவாறு கோரியுள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்த வாசுதேவ, நீதிபதியை நேற்று மாலை சந்தித்து குடாநாட்டு நிலைமைகள் தொடர்பாகக் கலந்துரையாடினார்.

குடாநாட்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாக நீதிபதி முன்வைத்த கோரிக்கைகள் வருமாறு:-

✱ உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியமர்வை துரிதப்படுத்த வேண்டும். தற்போது ஏற்பட்டுள்ள களநிலைமைகளுக்கு ஏற்ப அந்த மக்களை சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தும் நடவடிக்கைக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

✱ யாழ். மாவட்டத்தில் உள்ள சிறைச்சாலைகளில் உள்ள கைதிகள் இடநெருக்கடியால் சிக்கல்களை எதிர்கொண்டுள்ளனர். அவர்களின் வசதியைக் கருத்தில்கொண்டு சிறைச்சாலைக் கட்டடங்கள் அமைக்க வேண்டும்.

✱ யாழ். மாவட்டத்தில் நீதிமன்றச் செயற்பாடுகள் செம்மையாக நடைபெற்று வருகின்றன. [illegible] இடங்களில் இயங்கும் நீதிமன்றங்களுக்கு நிரந்தரக் கட்டடம் அமைக்கும் பணியை விரைவுபடுத்த வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்கா சென்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திரும்பிய ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு பாதுகாப்பிற்காக இரண்டு வெவ்வேறு படையணிகள் நேற்று பாதுகாப்பில் ஈடுபட்டன.

"சிங்கரெஜிமண்ட்" படைப்பிரிவில் பணிபுரிந்த ஜெனரல் சரத் பொன் சேகாவிற்கு இது வரை காலமும் சிங்க ரெஜிமன்ட் படையணியினரே பாதுகாப்பு வழங்கி வந்தனர்.

அவர் அமெரிக்கா சென்று திரும்பிய பின்னர் இராணுவத் தளபதியின் கீழ் இயங்கும் விசேட படையணியினரும் அவரது பாதுகாப்பிற்காக நேற்று அனுப் பிவைக்கப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து சிங்கரெஜிமன்ட் படையணியினர் தமது முகாமிற்கு செல்ல முடிவு செய்தனர்.

எனினும் அவர்களைச் செல்லவிடாது தமது பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தொடருமாறு பொன்சேகா உத்தரவிட்டார். (அ-1)

## தமிழ்க்கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தவேளை அங்கு வந்த ஜனாதிபதி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், பத்மினி சிதம்பரநாதன், சிவநாதன் கிஷோர் ஆகியோருடன் கலந்துரையாடி குசலம் விசாரித்தார். (அ-சி)

## செல்வம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்வம் அடைக்கலநாதன் நேற்றுமுன்தினம் நாடு திரும்பியிருந்தார். அவரிடம் விமான நிலையப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர். அத்துடன் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் நேற்றுமுன்தினம் காலை விசாரணைக்காக அவரை அழைத்தனர். 8 மணிநேரம் நடைபெற்ற விசாரணைகளின் பின்னர் அவர் இருப்பிடம் செல்ல அனுமதிக்கப்பட்டார். மீண்டும் நேற்றுக் காலை விசாரணைக்காக அழைக்கப்பட்ட அவர் காலை 8 மணியளவில் அங்கு சென்ற வேளை தடுப்புக் காவல் உத்தரவின்பேரில் அவர் கைதுசெய்யப்பட்டார் என அறியமுடிகின்றது.

வவுனியா ரெலோ அலுவலகத்தில் 'மைக்ரோ பிஸ்ரல்' ஒன்று மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக அவர் விசாரிக்கப்படுவதாக கூறப்படுகின்றது. (அ-1)

## தனியார் வங்கிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமுகாமையாளர் பீ.வீ.பத்திரன, பணிப்பாளர் சபை உறுப்பினர். டீ.ஜே.டீ. ஜெயக்கொடி, மக்கள் வங்கியின் வர்த்தக முகாமையாளர் தீபால் அபேசேகர மற்றும் மக்கள் வங்கியின் உயர் அதிகாரிகள் கொண்ட குழுவினர் நேற்று பத்திரிகையாளர்களுடன் சந்திப்பு ஒன்றை நடத்தினர்.

இதற்குத் தகுந்த காரணமும் உண்டு. எங்கள் வங்கியின் உடைமையாளர்கள் மக்களே. அதன் பங்குதாரர்களும் அவர்களே. அதனால் அடிமட்டத்தில் உள்ள மக்கள் தொடக்கம் தொழில்சார் அபிவிருத்தியில் ஈடுபடும் மக்கள் வரை எல்லோருக்கும் உதவி நல்கி, அவர்களுக்கு கைகொடுத்து உதவுவது. மக்கள் வங்கியே - என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

மக்கள் வங்கி குடாநாட்டு மக்களுக்கு மிக அருகில் சென்று சேவையாற்றி வரு கிறது. இங்கு அசாதாரண நிலை நிலவிய காலத்திலும் அதன் உச்சக்கட்டத்திலும் மக்கள் நலனுக்காக அவர்களோடு கூட இருந்து பணிபுரிந்து உதவியது.

விவசாயிகளுக்கும் ஏனைய தொழில் சார் துறையினருக்கும் அதிக அளவு கடன் மற்றும் உதவிகளை மக்கள் வங்கியே குடாநாட்டில் வழங்கியது. இப்போதும் வழங்குகிறது. எல்லா வகை கஷ்டங்களின் போதும் மக்கள் வங்கியே குடாநாட்டு மக்க ளுக்குப் பக்க பலமாக இருந்து உதவியது.

அரசாங்கத்தின் பணிப்புக்கேற்ப மக்கள் பெற்ற கடன்களுக்கான வட்டியை முதலில் குறைத்தது எமது வங்கியே - என்று கூறினார். (அ-3)

## பெற்றோரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டின் பேரில் நேற்றுமாலை நாடாளுமன்றத் துக்கு அழைத்து வரப்பட்டனர். அவர்களுக்கு விசேட பிரதிநிதிகளுக்கான கௌரவமும் வரவேற்பும் அங்கு வழங்கப்பட்டது.

சிறுவர்கள் சபைக்கு அழைத்து வரப்பட்ட போது ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மேசையில் கை தட்டி விசேட பிரதிநிதிகளுக்குரிய கௌரவத்தையும், வரவேற்பையும் சிறார்களுக்கு வழங்கினர்.

சிறுவர்கள் நாடாளுமன்றத்துக்கு வருகை தந்தபோது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் பிரசன்னமாகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வடமாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மஹிந்த ராஜபக்ஷ உறுதிமொழி வழங்கியுள்ளார்.

அவர் வட மாகாணத்திலிருந்து இடம் பெயர்ந்துள்ள முஸ்லிம்கள் குறிப்பாக முஸ்லிம் பெண்கள் சுமார் 1,000 பேரை அலரி மாளிகையில் சந்தித்து உரையாடிய போதே இவ்வாறு வாக்குறுதி வழங்கி உள்ளார்.

அவர்கள் மத்தியில் ஜனாதிபதி தொடர்ந்து பேசியபோது, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய இடங்களிலிருந்து இடம்பெயர்ந்துள்ள முஸ்லிம்கள் வெகுவிரைவில் சொந்த இடங்களில் மீள்குடியேற்றம் செய்யப்படுவார்கள். இலங்கை அரசு புலிகளை தோற்கடித்து பயங்கரவாதத்தை முடிவுக்கு கொண்டு வந்துள்ள நிலையில் முஸ்லிம் அகதிகள் சொந்த இடங்களில் மீள்குடியேறுகின்றமைக்கு உரிய காலம் வந்துள்ளது- என்றார்.

இவ்வைபவத்தில் மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலான, மீள்குடியேற்ற மற்றும் அனர்த்த நிவராண சேவைகள் அமைச்சர் றிசாத் பதியூதீன், ஜனாதிபதியின் ஆலோசகர் ஏ. எச். எம். அஸ்வர் ஆகியோரும் கலந்து கொண்டனர். (அ-சி)

## வவுனியா ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினருமான பஸில் ராஜபக்ஷ கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் இதனை நேற்று இதனைத் தெரிவித்தார்.

நாடாளுமன்ற இடைவேளையின் போது, தமிழ்க் கூட்டமைப்பின் உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.கே. சிவாஜிலிங்கம், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோருடன் பஸில் பேசினார்.

அப்போது, வன்னிமுகாமுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சென்று வர ஏற்பாடு செய்யுமாறு மீள்குடியேற்ற மற்றும் அனர்த்த நிவாரண அமைச்சர் றிசாட் பதியுதீனிடம் தெரிவித்துள்ளதாக பஸில் அவர்களிடம் தெரிவித்தார்.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் -

தமிழ்க் கூட்டமைப்பின் எம்.பிக்கள் தனியாகச் சென்று - சுதந்திரமாகச் சென்று - முகாமில் உள்ள மக்களை பார்வையிட அனுமதி வழங்கப்படுமா? அல்லது ஏனையோரைப் போன்று அரசின் ஏற்பாட்டில் எம்மை அழைத்துச் செல்ல ஒழுங்கு செய்யப்படுமா? எதுவும் கூறப்படவில்லை என்று தெரிவித்தார்.

இது விடயமாக மீள்குடியேற்றம் மற்றும் அனர்த்த நிவாரண அமைச்சர் றிசாட் பதியுதீனிடம் கேட்ட போது -

எனது அமைச்சின் நாடாளுமன்ற ஆலோசனைக்குழுவில் இடம்பெறும் உறுப்பினர்களை முகாம்களுக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. சகல கட்சிகளின் உறுப்பினர்களும் அந்தக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

அந்தக் குழுவின் அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் அழைத்துச்செல்லப்படவிருக்கின்றனர்.

அவர்கள் தனியாக செல்ல ஏற்பாடு செய்யப்படவில்லை. அரசின் ஏற்பாட்டிலேயே அழைத்துச் செல்லப்படுவார்கள் - என்றார் அவர். (அ-1)

## அத்தியா..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

89 ரூபா 50 சதமாகவும் குறைக்கப்படவுள்ளன.

மேற்படி விலைகளில் இவற்றை சதோச நிலையங்களில் பெற்றுக்கொள்ள முடியும் என வர்த்தகத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## வன்னி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை அரசின் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் மகிழ்ச்சி தரத்தான் செய்கின்றன. ஆனால், இந்நட்வடிக்கைகள் மிகவும் துரிதப்படுத்தப்பட வேண்டும். ஏனெனில், இன்னும் ஓரிரு நாள்களில் அங்கு பருவ மழைக்காலம் ஆரம்பமாக உள்ளது. எனவே, அகதிகளுக்கான இம்மனிதாபிமான நடவடிக்கையை இலங்கை அரசு துரிதப்படுத்தியே ஆகவேண்டும். இந்த அகதிகளுக்கான மருத்துவச் சேவையில் ஈடுபட்டிருந்த இந்தியாவின் கள வைத்தியசாலை தற்போது அங்கு இல்லை.

எனவே, இந்த அகதிகளை முகாம்களில் வைத்து பராமரிப்பதில் இலங்கை அரசுக்கு பல இடர்ப்பாடுகள் உண்டு. ஆகவே, அகதிகளை முகாம்களிலிருந்து அனுப்பி சொந்த இடங்களில் மீள்குடியேற்றுவதன் மூலம், அகதிகளின் இயல்பு வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்புவதன் மூலம் இலங்கை அரசுக்கு பல அனுகூலங்கள் உண்டு - என்றார்.


### வீடு வாடகைக்குத் தேவை

தையல் நிலையம் நடத்த யாழ்.நகரத்திலிருந்து ஐந்து மைல் சுற்றாடலில் ஒரு பெரியவீடு வாடகைக்குத் தேவை. உரிமையாளர் பெயர், முகவரி, தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் என்பவற்றோடு உடன் தொடர்பு கொள்ளவும்.

த.பெ.இல :23
(562165) T.P :0714325000 யாழ்ப்பாணம்.

### S&M Consultant Service, Branch Office
148, Temple Road, Jaffna. (யுனிசெவ் முன்பாக)

யாழ். மாணவர்களுக்கு லண்டனில் விசா பெற்றுக் கொடுப்பதில் முன்னணி வகிக்கும் ஒரே நிறுவனம் !!!

* நவம்பர் மாதப் பிரவேசத்துக்கான நடவடிக்கைகள் அனைத்தும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.
* விண்ணப்பிக்க விரும்புவோர் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.
* இவ்வருடத்திற்கான இறுதிப்பிரவேசத்தில் இணைந்து இலகுவான நடைமுறையின் கீழ் விசாக்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
* சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்!!!
* வார நாள்களில் கைத்தொலைபேசியுடன் தொடர்பு கொண்டு நேரம் ஒதுக்கி உடனடியாக நேரடியாக சந்தித்துக் கொள்ளலாம்.
* ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 8 மணிமுதல் மாலை 6 மணிவரை எந்நேரமும் சந்தித்துக் கொள்ளலாம்.

STUDY IN EUROPE - MBBS/MD

"LAGANSK STATE MEDICAL UNIVERSITY" (UKRAINE - EAST EUROPE) இல் இணைந்து சிறிலங்கா MEDICAL COUNCIL லினால் அங்கீகரிக்கப்பட்ட டாக்டராக நீங்களும் வர விரும்பினால் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

உடன் தொடர்பு - 0774528818
0212223818
E.mail : mg1404_2009 @yahoo.com
148, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (யுனிசெவ் முன்பாக)
(சி/562169)

### விசேட விலைக்கழிவு நவம்பர் 06-14 வரை

| | |
|---|---|
| **MONITOR** | |
| LG 15" CRT | 7900/- |
| Topview 15" LCD | 10900/- |
| Viewsonic 16" LCD (VA1616W) | 13750/- |
| LG / Prolink 19" LCD | 15500/- |
| Samsung 22" LCD | 25500/- |
| **ROUTER - ADSL / TP LINK** | |
| ADSL Router Single Port (TD 8816) | 3750/- |
| ADSL Router 2 Port (TD 8817) | 3950/- |
| ADSL Router 4 Port (TD 8840T) | 5750/- |
| ADSL Router 4 Port Wireless (TD-W 8901G) | 7600/- |
| **MOTHERBOARD** | |
| Foxconn | 5250/- |
| Asrock | 5350/- |
| Biostar | 5850/- |
| Gigabyte | 6000/- |
| Intel DG 31 PR | 7400/- |
| Asus P5KPL 3 AM | 6200/- |
| 478 Motherboard | 6750/- |
| **HARD DISK** | |
| 80 GB SATA | 4500/- |
| 160 GB SATA | 5200/- |
| 250 GB SATA | 5400/- |
| 320 GB SATA | 5800/- |
| 500 GB SATA | 6800/- |
| Laptop Hard Disk 160 GB | 5900/- |
| **WRITER** | |
| Combo Writer SATA | 2900/- |
| LG DVD Writer 22 X SATA | 3300/- |
| Asus DVD Writer 24 X SATA | 3950/- |
| **UPS** | |
| 650 W UPS | 3750/- |
| Power III 650 W | 3900/- |
| Power Tree 650 W | 4400/- |
| UPS 1.2 KV | 8600/- |




| | |
|---|---|
| **NETWORK** | |
| Wireless Adapter | 2900/- |
| D-Link 8 Port Switch | 2400/- |
| Network Card | 750/- |
| **PEN DRIVE** | |
| Kingston 2 GB (No.1) | 1200/- |
| Kingston 4 GB (No.1) | 1500/- |
| **PRINTER** | |
| Epson T10 Colour | 4500/- |
| Canon IP 1940 Colour | 4900/- |
| **LASER JET PRINTER** | |
| Samsung ML 1640 | 13900/- |
| HP 1005 | 15750/- |
| **SUBWOOFER** | |
| CMK 2.1 | 1900/- |
| Creative 2.1 | 2600/- |
| Microlab (280) 2.1 | 3100/- |
| Creative (A 500) 5.1 | 7000/- |
| **RAM (Memory) - KINGSTON No.1** | |
| 512 MB DDR II | 1250/- |
| 1 GB Kingston (800) DDR II | 2900/- |
| 2 GB RAM (800) DDR II | 5250/- |
| 512 MB Kingston (400) DDR I | 2900/- |
| **PORTABLE HARD DISK** | |
| 250 GB 2.5 | 9500/- |
| 320 GB 2.5 | 10500/- |
| 500 GB 2.5 | 13500/- |
| **PROCESSOR** | |
| Intel 1.8 Ghz Celeron | 5200/- |
| Intel 2.8 Ghz Core2Duo | 14600/- |
| Intel 2.93 Ghz Core2Duo | 14900/- |

MUSIC WORLD & COMPUTERS (PVT) LTD.
141 B, பலாலி வீதி, தபால்பெட்டி சந்தி, திருநெல்வேலி. தொலைபேசி/ஃபக்ஸ்: 021 222 6554
(சி/562145) Email: musicworld@dialognet.lk [ஞாயிறு, விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும்]

### LAVA HOSPITAL

75, கோயில் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 222 4333

ஸ்கான் (Scan), ECG கணனி மயப்படுத்தப்பட்ட ஆய்வு கூட வசதிகள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

Basic Body Checkup
'அடிப்படை உடற் பரிசோதனைகள்'

★ உடல் பருமனானவர்களைப் பரிசோதிப்பதற்கான
Obesity package - 1200/=

### முதன் முதலாக யாழ்.நகரில் தற்போது
10 அடி அகலத்தில் டிஜிற்றல் பிறிண்ட் சேவை




அதி நவீன 6 வர்ணம் கொண்ட இயந்திரம் மூலம் தற்போது எமது சேவை ஆரம்பமாகிறது என்பதை எமது வாடிக்கையாளருக்கு மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

* பாரிய கட்டவுட்டுக்கள்
* டிஜிற்றல் பனர்கள்
* விளம்பரப் பதாகைகள்

என்பவற்றை மலிவு விலையில் எம்மிடம் பிறிண்ட் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-
கொனிக்கா கலர் லாப் & சிறி டிஜிற்றல் கலர் லாப்
இல. 14, ஸ்ரீ வெங்கடேசன் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 3493 (சி/562177)

### SHAMROCK கல்லூரி

A/L 2010
இணைந்த கணிதம்
PAPER CLASS
sat,sun 5 pm
G.கண்ணன்.B.Sc

A/L 2011
♦ கிறீஸ்தவ நாகரிகம் Mrs.A:மல்லிகா B.A
♦ நாடகம்:J.ஜோன்சன் B.A
♦ அரசியல்:S.ஸ்ரனிஸ்லாஸ் B.A

### யாழ்.நகரில் அனுபவம் மிக்க வாகன பயிற்றுவிப்பாளர்கள்



அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சி பாடசாலை (பதிவு எண் D.S 589)

கிருபா லேணர்ஸ்

புதிய சாரதி அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்ள எழுத்துப் பரீட்சையில் சித்தி எய்த, விசேட வீதி ஒழுங்கு முறைகளை முறைப்படி கற்றுக் கொள்ளவும். செயன் முறை பரீட்சையில் (றயல்) சித்தியடையவும் வான், மோட்டார் சைக்கிள், ஆட்டோ ஆகியவற்றின் விசேட வாகன பயிற்சியும் வழங்கப்படும். மற்றும் அரச தனியார் ஊழியர்களுக்கு சனி, ஞாயிறு உட்பட பயிற்சி பெறுவோரின் வசதிக் கேற்ப பயிற்சி நேரங்கள் மாற்றம் செய்து பயிற்சி வழங்கப்படும்.

தொடர்பு:
தலைமைக்காரியாலயம்
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0212224355.

கிளை
மகாத்மா வீதி, நெல்லியடி.
021 300 6550

(90725)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.11.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org